அறந்தரு சிந்தையோன்



ல. இராமனாதன், எம்.ஏ.

அன்னை நிலையம், சிவகங்கை.

-Maravan-

அறந்தரு சிந்தையோன்

★

லெ. இராமநாதன் M. A.,
தமிழ் விரிவுரையாளர்,
அரசர் துரைசிங்கம் நினைவுக்கல்லூரி,
சிவகெங்கை, (இராமநாதபுர மாவட்டம்)

1. This Book is prescribed as the Text Book to B.A., Course in Kerala University for the Year 1966-67.

2. And also prescribed as the Text Book to Pre-University Class in Annamalai University for the Year 1966-67.

முதல் பதிப்பு—1964

விலை ரூ. 2 00

எக்ஸெல்ஸியர் பவர் பிரஸ் மதுரை—64.

முன்னுரை.

இலக்கியச் செல்வர்களே !

தமிழ் மொழியில், எண்ணற்ற உரைநடை இலக்கியங்கள் தோன்றியுள்ளன. சங்ககால முதல் இன்றுவரை, இலக்கிய ஆசிரியர்கள், பல கோணங்களில் நின்று உரைநடையை யாத்துத் தந்துள்ளார்கள். தமிழ்த் தாய் பூண்டிருக்கும் அணிகலன்களோடு, மேலும் மேலும், அவளுக்கு அழகிய அணிகலன்களை அணிவித்துச் சிறப்புச் செய்கின்றார்கள். அதேபோல, தமிழ் கற்றதன் பயனாக, நானும் ஒரு அணிகலன் செய்து, தமிழ்த் தாய்க்குப் பூட்டக் கடமைப் பட்டுள்ளேன். அதற்கேற்ப, ஆராய்ச்சிக் கண்கொண்டு, பல இலக்கியங்களை நோக்கித் தெளிந்து, பதினொரு கட்டுரைகளை எழுதினேன். அதில், செஞ்சொல் கம்பனின் காவியத் தலைவனை, மாற்றாரால் புகழப்பட்ட, அறந்தரு சிந்தையோனையே, என்னுடைய புத்தகத் தலைப்பாக வைத்து, பதினொரு கட்டுரைகளையும் சேர்த்துப் பதிப்பித்து வெளியிட்டுள்ளேன். இது என்னுடைய முதல் முயற்சி. இலக்கியப் பெருமக்கள் இதை ஏற்றுக்கொண்டு, என்னை ஊக்குவிப்பார்கள் என்று நம்புகிறேன்.

இலக்கியத்தைக் கற்போர் இன்று அதிகம். அதைச் சுவைபட எழுதின் மக்கள் ஆர்வத்துடன் படித்துச் சுவைக்கிறார்கள். அதனால் இன்று மலிவுப் பதிப்புக்கள் ஏராளம் வெளிவந்துள்ளன. செய்யுளைச் சுவைப்பதைக் காட்டிலும், உரைநடையை மக்களும், மாணவர்களும், ஊன்றிப் படித்து, உள்ளத்தில் நிறுத்திக் கொள்ளுகிறார்கள். ‘அறந்தரு சிந்தையோன்’ என்ற என்னுடைய படைப்பை மாணவர் உலகமும், பொது மக்களும் வாங்கிப்படித்துப் பயன் அடைய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இது புதிய முறையில், இலக்கியப் பிழிவாகத் தரப்பட்டுள்ள செந்தமிழ் உரை நடையாகும்.

இந்தப் புத்தகம் வெளிவர அன்னை நிலைய உரிமையாளரான உயர்திரு, வே. திருவரங்கராசன் அவர்களே முக்கிய காரணம். பல செய்தித் தாள்களிலே வெளிவந்துள்ள என்னுடைய கட்டுரைகளை சிதறி, மங்கி, மறைந்து போகாதவாறு, ஒன்றாகத் தொகுத்து வெளியிடவேண்டுமென்று, என்னிடத்திலே கூறினார்கள். எப்படி, இலக்கியங்களிலே, அனைத்துக் காட்சிகளையும், சுவைகளையும் ஓரிடத்திலே பெற்று அனுபவிக்கிறோமோ, அதேபோல மக்கள், இந்த உரைநடை மூலம் அனைத்து இன்பத்தையும் பெறட்டும் என்று, திருவரங்க

ராசன் அவர்களை ஊக்குவித்து, வெளியிடுமாறு வேண்டிக் கொண்டேன். முயற்சி எடுத்த அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றி.

கட்டுரைகள் எழுதுவதற்குக் கருத்துக்கள் இருப்பினும், அதை விளக்கமுறச் செய்ய, சூழ்நிலை அமைதல் வேண்டும். அத்தகைய சூழ்நிலையை அமைத்துக் கொடுத்த எனதருமை B. A. B Sc. P. U. C. மாணவர்களுக்கும், என்னுடைய உளங்கனிந்த நன்றி. எவ்வளவு எழுதினாலும், விளம்பரம் வேண்டும். இல்லையேல், பயனில்லை. அது குடத்தள் இட்ட விளக்காகப் போய்விடும். தக்க நாளிதழிலே, வெளிவந்து விடுமாயின் அது குன்றின்மேல் இட்ட விளக்காகும். அதேபோல, இன்று தமிழகத்தில், தலையாய இலக்கியச் செய்தித்தாளாக 'தமிழ்நாடு' இருப்பதை யாவரும் அறிவோம். அதில் வாரந்தோறும், வெளிவரும் ஞாயிறுமலரில், பல பேராசிரியப் பெருமக்களும், புலவர் பெருமக்களும், அரிய கட்டுரைகளை எழுதி வருகிறார்கள். அத்தகைய செம்மை சால், நாளிதழின், ஞாயிறு மலரில், எனக்கும் இடம் அளித்து, என்னுடைய தொல்வழிச் சிந்தாமணி, உண்டாட்டு, அறந்தரு சிந்தையோன், மாண்புறு மங்கை, போன்ற கட்டுரைகளை வெளியிட்டு, குன்றின்மேல் இட்ட விளக்காகச் செய்தமைக்கு, தமிழ்நாடு இதழ் ஆசிரியரான கலை அன்பனுக்தும் துணை ஆசிரியரான வே. பழநியப்பனுக்தும் என் உளமார்ந்த நன்றி. அப்பத்திரிக்கையை நடத்தும், கலைத்தந்தை உயர்திரு தியாகராசன் செட்டியாரவர்களுக்தும், பொறுப்பாசிரியரான, திரு மாணிக்க வாசகம் செட்டியாரவர்களுக்தும் என் நன்றி உரித்தாகுக.

இருபதாம் நூற்றாண்டு அப்பரடிகளாக விளங்கும், சைவ சமயத் தலைவர், தவத்திரு குன்றக்குடி அடிகளாருக்தும் என் நன்றி உரித்தாகுக. என்னுடைய 'தொண்டின் செல்வர்கள்' என்ற கட்டுரையை அவர்களது, சமயப்பத்திரிக்கையான 'தமிழகத்தில்' வெளியிட்டு என்னை ஊக்குவித்தமைக்கு, பெரிதும் கடமைப்பட்டுள்ளேன்.

திருச்சி அனைத்து 'இந்திய வானொலி நிலையத்தாருக்தும் என் உளங்கனிந்த நன்றி. அவர்கள் நிலையத்தில் ஒலி பரப்பப்பட்ட, 'வில்லி ஓவியம்.' 'நாலடி காட்டும் நல்வழி' போன்ற பேச்சுக்களும் இதில் சேர்ந்துள்ளன. வெளியிட அனுமதியளித்தமைக்கு, மகிழ்ச்சி.

இந்நூல் உருப்பெறும் வகையில் ஊக்குவித்த எனதருமை நண்பர்கள் அனைவருக்கும் எனதுளங்கனிந்த நன்றி உரியதாகுக.

ஆசிரியன்.

நன்றியறிதல்

—()—

நாட்டு மக்களுக்குக் கண் போன்றது 'கல்வி', அத்தகைய கல்வியை, ஏற்றத்தாழ்வின்றி அனைவரும் கற்று உயர்வடைய வேண்டும் என்ற பெரு நோக்கோடு, ஏராளமான பொருட் செலவில், கல்லூரி ஒன்றைக் கட்டிய மேன்மை பொருந்திய சிவகெங்கை மாமன்னர் D. சண்முகராஜா, D. சுப்பிரமணிய ராஜா, அவர்களுக்கு, என் நன்றியைத் தெரிவிக்கும் வகையில், 'அறந்தரு சிந்தையோன்' என்ற இக் கட்டுரைத் தொகுப்பை, வெளியிடுகின்றேன்.

அரசர்துரைசிங்கம் நினைவுக் கல்லூரி, இன்று தமிழ் நாட்டில் சிறப்பானதாகக் காட்சி தருகிறது. அதில் பணியாற்றும் ஆசிரியப் பெருமக்கள் அனைவரும் ஒப்புயர்வு கூற முடியாதவர்கள். அத்தகைய கல்லூரியில் எனக்குப் பணியாற்றும் வாய்ப்பை அளித்து, என் வாழ்வை வளமாக்கிய உயர்திரு, இளையமன்னர் D. சுப்பிரமணிய ராஜா அவர்களின் சார்பாக, இதை நன்றிக் காணிக்கையாக வெளியிடுகின்றேன்.

சங்க காலத்தில் எத்துணையோ அரசர்கள், வள்ளல்களாக விளங்கினுர்கள் என்பதை இலக்கியங்களிலே படிக்கிறோம். ஆனுல், இன்று, நேரிடையாக, நாம் கொடை கொடுக்கும் சிறப்பை, மூத்த மன்னரிடமும், இளைய மன்னரிடமும் காண்கிறோமென்றுல் அது அரச பரம்பரையின் பெருமையினை வெளிப்படுத்துவதாகும். அத்தகைய வள்ளல்களாகிய, மூத்த மன்னர் அவர்கட்கும், இளைய மன்னர் அவர்கட்கும், இதன் மூலம் என் உளம் கனிந்த நன்றியறிதலை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

லெ. இராமனுதன்,

ஆசிரியன்.

பொருளடக்கம்

1. தொல்வழிச் சிந்தாமணி

சீவக சிந்தாமணி ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்று. பேரிலக்கியங்கள் என்று சிறப்பித்துக் கூறப்படும் நூற்களில் சிறந்தது. தொடர்நிலைச் செய்யுட் பகுதிகளால் அமைக்கப்பட்டதாகக் கருதும் இலக்கியங்களுள் இதுவும் ஒன்று. ஐம்பெருங் காப்பியங்களுள், சமண சமயக் கொள்கையுள்ள புலவர்களால் இயற்றப்பட்ட இலக்கியங்களே மிகுதி. பௌத்தசமயப் புலவராகிய சாத்தனூரால் செய்யப்பட்ட மணிமேகலை தவிர மற்றய நூற்கள் அனைத்தும் சமணசமய நூற்களே. அதில் சில நூற்களில் செய்யுட் பகுதிகளே காணப்படவில்லை. மணி போன்ற நற் கருத்துக்களைக் கொண்ட இந்நூல் சிந்தாமணி என்ற பெயர் கொண்டிருப்பதில் வியப்பில்லை. மண நூல் என்ற புனைப் பெயர் கொண்டிருக்கும் இந்நூல் காப்பியத் தலைவனான சீவகனின் வாழ்க்கை பற்றியும் வரலாறு பற்றியும், அவன் புரிந்து கொண்ட மணங்கள் பற்றியும், அச் செய்திகள் பற்றியும் அதன் மூலம் அவனது வீரச் செயல்கள் பற்றியும் கூறுவதாகின்றது. இச் சீவகசிந்தாமணி, நூலறிவுடையோரால் புகழப்படுவதில் வியப்பில்லை.

இதன் ஆசிரியர் திருத்தக்கதேவர். சமண சமயச் சார்புடையவர். சங்கப் புலவர்கள், சமணர்க்கு நீதிக் கருத்துப் பொதிந்த நூற்கள் தாம் இயற்ற முடியும்,

சிற்றின்பக் கருத்துக்கள் பொதிந்த இலக்கியங்கள் இயற்றும் ஆற்றல் இல்லை என்று இகழ்வாகக் கூறியது கேட்ட தேவர், தம் மதத்தின் சிறப்பையும், தம் திறமையையும் காட்ட வேண்டி சிற்றின்பம் கலந்த இப்பேரிலக்கியத்தை நம் தமிழுக்குச் சிறப்பாகவும், நம் இலக்கியங்களுக்குப் பெருமையாகவும் நம்மிடையே உலவ விட்டிருக்கும் சிறப்பு அறிந்து நாம் போற்றுமல் இருக்க முடியாது. கதைத் தலைவன் சீவகன். அவனுடைய வரலாறு பற்றிய நிகழ்ச்சிகள் கூறப்படுகின்றன. கதை அமைப்பும், வர்ணனைகளும், இயற்கைக் காட்சிகளின் சிறப்பும், தொல்வழி அமைந்துள்ளது. ஏனைய பிற்காலக் காப்பியங்களுக்கு வழி காட்டியாகவும் உள்ளது. திருத்தக்க தேவர் இலக்கியத்தில் மட்டும் பயிற்சி உடையவரல்லர். அவர் மருத்துவம், இசை, ஆரூடம் சகுனம், மந்திரம் இவைகளிலும் வல்லுனராகத் திகழ்ந்தார் என்பதை அவருடைய காவியம் காட்டுகிறது. பதுமையார் இலம்பகத்தில் ஒரு காட்சி மூலம், தன் மதி நுட்பத்தை வெளிப்படுத்துகிருர்.

பதுமையை பாம்பு தீண்டி விடுகிறது. பாம்பு கடி மூலம் கதைத் தலைவனுன சீவகன் உலோகமா பாலனுக்கு மைத்துனனுகவும், பதுமைக்குக் கணவனுகவும் ஆகிருன். தேசிகப் பாவை மூலம், உலோகமா பாலனுக்கு சீவகன் அறிமுகப்படுத்தப் படுகிருன். நடன மாது தேசிகப் பாவை, அரங்கில், தன் திறமை முழுதும் வெளிப்பட, கலை உணர்வின் கவினைப் பிறர் அறியும் படி நடனம் ஆடிக்கொண்டிருக்கிருள். நடனத்தைக் காண, மன்னன் மகன் உலோகமா பாலனும், அவனது

தோழர்களும் வந்துள்ளார்கள். வழியில் வந்துகொண்டிருந்த சீவகன் நடனக் காட்சியைக் கண்டு, அரங்கிற்குப் பக்கமாக, தேசிகப் பாவையின் கண் வலையில் விழுமாறு, அமர்ந்து, கலையின் சுவையை, சுவைத்துக் கொண்டிருக்கிறான். ஒப்புயர்வு இல்லா, எழில் கொண்ட சீவகன் இருளில், ஒளி பிழம்பாகக் காட்சி தருகிறான். தன்னிகரில்லாத் தலைவனைக் கொண்டதாகக் காப்பியம் அமைய வேண்டும். வீரம், அழகு, கொடை, பண்பு, அன்பு, செல்வம், ஒழுக்கம், இவையனைத்தும், தலைவனிடம் பொதிந்து இருக்க வேண்டும். அதற் கேற்பவே சீவகனும், எல்லாக் குணங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளான், என்பதை, ஆசிரியர், காப்பியம் முழுதும் ஆங்காங்கே வெளிப்படுத்துகிறார். நடனம் ஆடிக்கொண்டிருக்கும் தேசிகப் பாவை, சீவகனைக் கண்டு, மெய்மறந்து, தன் நடனத்தை தளர்வடையும்படி செய்கிறாள். கலையின் பெருமையை முற்றும் அறிந்த உலோகமாபாலன், தேசிகப் பாவையின் நடனத்தில், ஆடும் ஆட்டத்தில் குற்றம் ஏற்படுவதை அறிந்து, நிலை தடுமாறக் காரணம் யாது என்று உற்று நோக்குகிறான். அப்போது தேசிகப் பாவையின் கண்கள், சீவகனின் கண்களோடு சந்திக்கின்றன. இக் காட்சியைக் கண்ட உலோகமாபாலன், தன் வேலையாள் மூலம், சீவகனை அழைப்பித்து, உறவாடிக்கொண்டிருக்கிறான். அப்போது, வேலையாள் ஒருவன் ஓடி வந்து பதுமையைப் பாம்பு தீண்டி விட்டது என்று கூறுகிறான். உடனே எல்லோரும் பரபரப்புடன் செல்லுகிறார்கள்.

நறவிரிச் சோலையில், நிறையப் பூத்துள்ள மலர்களைப் பறிக்கப் பதுமை சென்றுள். அதிலிருந்து ஒரு பாம்பு கடித்து விட்டது என்று கூறுகிருர். அதனுல் பாம்புகள் உறையுமிடம் எது என்று தெரிகிறது. தேவரின் செய்யுள் நடை இலக்கிய நயம் தோன்ற அமைந்துள்ளது.

சோலை. அதில் பலவித மலர்கள். விளையாடும் தோழிகளுடன் பதுமை சென்று மலர் பறித்தும், மலர் தூவியும் விளையாடுகிருள் இந்தக் கருத்து தொல்காப்பியக் களவியல் துறைகளுடன் பொருந்துவதாக உள்ளது. அதன் அடிப் படையிலே, அமைத்துள்ளாரோ, என்று எண்ணும்படி, காப்பியத்தை எழுதியிருக்கும் சிறப்பு ஆசிரியரின், திறமையை வெளிப்படுத்துவதாகும். இந் நிகழ்ச்சியைப் "பொழில் தரு புணர்ச்சி" என்ற கருத்தின் வழியே கொள்ளலாம். காதலும், இருவுள்ளங்களின் உறவும் "பால் வயத்ததுவே" என்பது பண்டைய நூலறிவுடையோரின் கொள்கையாம். அதற்கிணங்க, நம் காவியத் தலைவனையும் கூட்டி வைக்க வேண்டி, பால் வயத்தது என்று கொண்டாலும் இலக்கண அடிப் படையிலே பொழில்தரு புணர்ச்சி மூலம் கூட்டி வைக்கும் சிறப்புக் கருதி, தேவர் அமைத்துள்ளார் என்று கூறினுலும் தகும்.

'பொழில் தரு புணர்ச்சி' என்பது தொல்காப்பியத்தில், தலைவி ஆயத்தோடு, மலர் கொய்து விளையாட வேண்டிச் சோலைக்குள் புகுவாள். ஆயமும் அவளும், விளையாட்டை மேற்கொள்வார்கள். பின் அங்கு மலர்ந்து

விரிந்து மகிழ்ச்சி தரும் அழகிய மலர் ஒன்றைப் பறித்துத் தர வேண்டும் என்று தலைவி கேட்க, அதைப் பறித்துக் கொடுக்க முடியாத நிலையிலே தோழிகள் மறுக்க எங்கிருந்தோ வந்தவன், இளமையின் எழில் மிக்கான், வனப்பின் வளமுடையான், ஆயத்தின் மறுப்புக் கேட்டு, மனம் பொறுக்காது, கூட்டத்தினிடையே, மின்னலை ஒத்த தலைவியைக் கண்டு தணியாத அன்பு மனத்திலே புகுந்ததின் காரணமாகவும், அவள் விரும்பிக் கேட்ட மலரைப் பறித்துக் கொடுப்பான். முகம் கண்ட இரு உள்ளங்களும் பிரிய மனமின்றிப் பிரியும். அந்த இளைஞன் செய்த உதவிக்கு எந்நன்றி செய்யப் போகிறேன் என்று தலைவி ஆயத்திடையே கவல்வாள். தோழி அவளது உள்ளுணர்வுகளை உணர்ந்து கொள்வாள். உள்ளத்தின் உள்ளுணர்வுகளை அறியாமலா தலைவியுடன் பழகுகிருள்? தலைவியின் செயல் அனைத்தும் அறியும் தோழி இந்த நிகழ்ச்சியையும் அறிந்து, அறத்தோடு நிற்கும் காலத்தில், பெற்ரோரிடம் கூறி கற்பு வாழ்வுக்கு வழி செய்வாள். " இது தொல்காப்பியம். " இந்த நிகழ்ச்சியைப் பொழில் தருபுணர்ச்சி என்றும், பால் வயத்தது என்றும் கொள்ளலாம். அதே நிகழ்ச்சி பதுமை சீவகன் காட்சியிலும் காணப்படுகிறது.

பதுமை ஆயத்தோடு சோலைக்குள் செல்லுகிருள். மலர் பறிக்கிருள். சோலையை உறைவிடமாகக் கொண்ட பாம்பு தீண்டி விடுகிறது. விடத்தைப் போக்க சீவகன் வருகிருன். அவனறிந்த மந்திரம் பாம்பின் விஷக்கடியைப் போக்கி விடுகிறது. மயக்கம் தெளிந்த மங்கை நல்லாள் சீவகனைப் பார்க்கிருள். அவன் அழகும் பருவமும்

அவனை அவன் வயத்த தாகச் செய்து விடுகிறது. சீவகனின் சந்திப்பும், நிகழ்ச்சியும் தொடர்பும் நறவிரி சோலையின் நிமித்தமாக நிகழ்வதை காண்கிறோம். எங்கிருந்தோ வந்தவன் எப்படியோ உலோகமா பாலனுக்கும் பதுமைக்கும் அறிமுகம் ஆகிறான் என்பதைக் கொண்டு, 'பால் வயத்தது' என்றும் கூறலாம். இந்நிகழ்ச்சிகள், தொல்வழி கூறப்படும் கருத்துக்களாகும்.

பாம்பு கடியைக் கூறியவர் அது எந்தப் பாம்பு என்றும், பாம்புகளின் வகையையும் கூறுகிறார். தேவர் இயற்கையோடு வாழ்ந்தவர். அவரின் மனத்தகத்துத் தோன்றிய, இயற்கைக் காட்சிகளின் சிறப்பு கண்டு இன்புறத்தக்கது. பதுமையும், அவருடைய ஆயமும், சென்று விளையாடிய சோலைக்காட்சியின் சிறப்பைக் கூறப்புகுந்த ஆசிரியர், இயற்கையின் எழிலைக்கண்டு, பெருமகிழ்வுற்று பருவம் அடைந்தாலும் குழந்தையின் இயல்பிற்றாய் சோலையிலே ஓடி ஆடி விளையாடும் சிறப்பிலே மலர் பறித்து மணம் நுகர்ந்து மகிழ வேண்டுமென்று, குரவம் பாவையை வண்டும், தேன்களும் நிழல் செய்து பாடும்படி நிறையப் பூத்தணிய, அதனைக்கண்டு இஃது என் தோழி யென்று சேர்ந்து கொய்தற்கு அழகிய தன் கைகளை நீட்டினாள் என்ற கருத்தை ஆசிரியர் இலக்கிய நயம்பட

"நறவிரி சோலையாடி நாண்மலர்க் குரவம்பாவை
நிறைய பூத்தணிந்து வண்டுந்தேன்களு நிழன்றுபாட
இறைவளைத் தோளிமற்றென் றோழியீ தென்றுசேர்ந்து
பெறலரும் பாவைகொள்வாள் பெரியதோ ணீட்டினாளே"
பதுமை-1270

என்று கூறும் சிறப்பு, இயற்கையோடு இயைந்த வாழ்

வைக் காட்டுவதோடு மட்டுமின்றி, சிந்தாமணியைக் கற்ப வர்களின் மனத்திலே, அதன் உயர்வையும், எழிலையும், எடுத்தூட்டுவதாக அமைந்துள்ளது. சிந்தாமணியின் சிறப்பை அறிய ஆசிரியர் காட்டும் மற்றொரு காட்சி உயர்வுடைத்து.

மலர் கொய்யத், தன் தோளை நீட்டினவளவிலே அழகிய குறைந்த அரவம் அவள் முகத்தைப் பார்த்து நாம் தீண்டுதற்குரிய மறுச்சேர் மதியின்றி இது நகை யினையுடையதொரு மதியாயிருந்தது, நாம் தீண்டத் தகாதென்றெண்ணி அந்தக் கையிலே தீண்டுதலாலே, அம்மேயோ வென்ன மீண்டாளாக! என்ற கருத்தை ஆசிரியர் இலக்கியத்தின் எழிலோடு பொருந்த கற்பனை யின் சிகரத்திலே நின்றவராய் ஏனைய இலக்கியங்களின் தரத்திற்கு, யாம் இயற்றிய இலக்கியம் சற்றும் குறை யுடையதன்று என்பதை எடுத்துக் காட்டு முகமாகவும்,

"நங்கை தன் முகத்தை நோக்கி நகைமதி யிதுவென் றெண்ணி,
அங்குறை யரவு தீண்டி யெளவையோ வென்று போகக்
கொங்கலர்க் கோதை நங்கை யடிகளோ,வென்று கொம்பேர்,
செங்கயற், கண்ணி தோழி திருமகட் சென்று சேர்ந்தாள்".

பதுமை—1271

என்று கூறும் சிறப்பு ஆசிரியரின் கற்பனை எழிலை எடுத்து இயம்புவதாய் உள்ளது.

நகைச்சுவைப் பேராசிரியர்

நீதிக் கருத்துக்கள் பொதிந்த இலக்கியம் தான் சமணர்களுக்கு இயற்ற தெரியும் என்று இகழ்ந்த சங்கப் புலவர்களின் கூற்றுக்கு, சிற்றின்பக் கருத்துக்களைப் பிணித்து ஓர் பேரிலக்கியமே இயற்றி, அவர்களும்

நாலுமாறு செய்த திருத்தக்க தேவர் ஓர் இலக்கியப் பேராசிரியராவார். அவர், இலக்கியப் பேராசிரியராக மட்டும் மிளிரவில்லை. நகைச்சுவைக் கருத்துக்களையும் கூறி படிப்பவர்களை இன்புறச் செய்கிறார். பதுமையை பாம்பு கடித்தபின், விஷக் கடியைப் போக்க மந்திரங்கள் கூறும் அந்தணர்கள் பலர் வந்தும் பதுமையைத் தெளிய வைக்க முடியாது போகவே சீவகன், தன் திறமையால் விஷக்கடியை நீக்கிப் பதுமையின் காதலுக்கு உரியவனாகிறான். அப்போது அரவுகளின் வகையைக் கூறுவதாக ஆசிரியர் விளக்கும் பகுதி நகைச் சுவை பயப்பதாக உள்ளது. பாம்புகளிலும் சாதிப் பிரிவு இருப்பதாக ஆசிரியர் எடுத்துக் காட்டும் பகுதி சற்று சிந்திக்கும் ஆற்றலைக் கொடுப்பினும் நகையாகும் முறையிலே அமைந்துள்ளது.

'' அந்தண னாறு மான்பாலவியினை யலர்ந்த காலை
நந்தியா வட்டநாறு நகைமுடி யரசனாயிற்
றந்தியா முரைப்பிற் றாழைத் தடமலர் வணிக னாறும்
பந்தியாப் பழுப்பு நாறிற் சூத்திரன் பாலதென்றான் ''.

பதுமை—1287

ஆன் பாலவியினைப் போல் நாறுமாயின் அந்தண சாதியைச் சேர்ந்தது. நந்தியா வட்டம் என்ற மலரின் வாடை வீசுமாயின் இராச சாதிப் பாம்பாகும். தாழை மலரைப் போல் நாறுமாயின் வணிக சாதிப் பாம்பு. பழுப்பைப் போல் நாறினால் சூத்திர சாதிப் பாம்பாகும் என்ற கருத்தைக் காண்கிறோம். சாதிப் பிரிவு தெரியாது வாழ்ந்த சமூகத்தில் சாதிப் பிரிவு புகுந்து, பழகிய பின், பரவி நிலவிய பின் அறிந்த, தேவர் தன் இலக்கியத்தில் அதைக் கூறியிருப்பதில் வியப்பில்லை. இலக்கிய ஆசிரி

யர்கள், காலத்திற்கேற்ற கருத்தை, அக்காலச் சூழலுக்கு ஏற்பக் கூற முற்படுவது இயல்பாகும். அதற் கேற்பவே, தேவரும், சமூகத்தில், நிலவிய சாதிப் பிரிவைக் கூறி, பாம்புகளின் செயலேயும் தன்மையையும், விளக்கிக் காட்ட முற்படுகிருர். மக்கள் புரிந்து கொள்ள இவைகள் அக்காலத்தில் பயன்பட்டன போலும். தன்னிகரில்லாத் தலேவனே யுடைத்தாய் காப்பியம் அமையவேண்டு மென்பது முறைமை. அதற்கேற்ப, ஆசிரியர் தன் காப்பி யத் தலேவனுன சீவகனேப் படைக்க முற்படுகிருர்.

தன்னிகரில்லாத் தலேவன்

கேமசரியைப் பிரிந்த சீவகன் மத்திம தேயத்தில் உள்ள ஏமமா புரத்தை யடுத்துள்ள பூஞ்சோலேயில் தங்கியிருக் கிருன். அந் நகரத்தரசனுகிய தடமித்தன் மகன் விசயன் அச்சோலேயை அடைந்து, சீவகனேக் கண்டு அவனே யார் என்று வினவுகிருன். சீவகன் தன்னே யாரென்று வெளிக்காட்டவில்லே. விசயன், அச் சோலேயில் உள்ள மாமரம் ஒன்றில் பலமுறை அம்பு எய்கிருன், ஒரு மாங் கனி கூட, அவனது அம்பால் கீழே விழவில்லே. இதைக் கண்ட சீவகன், ஒரு அம்பு எய்து, மாங்கனிகளே வீழ்த்து கிருன். சீவகனது விற்றிறம் கண்டு வியந்த விசயன் அவனேத் தன்னுடன் அழைத்துச் சென்று தன் தந் தைக்கு அறிமுகஞ் செய்கிருன். தடமித்தனும், சீவக னது ஆற்றலேக் கேள்வியுற்றுத் தன் புதல்வர் ஐவர்க் கும் வில்லாசிரியனுக நியமிக்கிருன். இந் நிகழ்ச்சிகள் சீவகனது, வீரப் பண்பைப் புலப்படுத்துவதாகும். வில்லாற்றலில் சிறந்த சீவகன், தனக்கு ஆபத்து ஏற்படும் இடங்களில் எல்லாம், தன் வலிமையாலும், மதி நுட்பத்தாலும், வெற்றி கொள்ளுகிருன். வீரத்தின்

எழில் கொண்ட தலைவனாக, காப்பியத்தில் உருவகம் செய்யப்படும்சீவகன், ஒப்புயர்வற்றவன் என்பதில் ஐயமில்லை.

அடுத்து ஒரு நிகழ்ச்சி மூலம் சீவகனது பெருமையை அறிகிறோம். சீவகனது தோழர்கள், காந்தருவதத்தையால் சீவகன் இருக்குமிடத்தை அறிந்து, தாமும் சீவகனிடம் செல்லக் கருதி அவளிடம் விடை பெற்று வீரர் பலரோடு புறப்பட்டு ஏமமாபுரஞ் செல்வராயினர். வழியில், சீவகன் தாயாகிய விசையைத் தவப்பள்ளியிற் கண்டு, அவளை ஐயுற்றுப் பிறகு, வினவி, ஒருவாறு தெளிந்து, சீவகனின் நிலையை அறிந்து கொள்ளுகிறார்கள். விசையை சீவகனை நினைந்து, புலம்பித் தோழர்களை நோக்கி, சீவகனைத் தன்பால் அழைத்து வரும்படி வேண்டுகிறாள். தோழர்கள் சீவகனை ஒரு திங்களுக்குள் அழைத்து வருவதாக உறுதி கூறிச் செல்கின்றனர்.

விசையைக் கண்டபொழுது, நால்வரும், அவளது வரலாறுபற்றிக் கேட்கிறார்கள். அவளும், அவர்களது வரலாறுபற்றி வினவுகிறாள். ஒருவாறு இராசமாபுரம் தமதூர் என்று தெரிவிக்கிறார்கள். பிறகு, தனித்தனியே தங்கள் வரலாற்றை எடுத்துரைக்கிறார்கள். தங்களது கல்விபற்றியும், எப்படி, சீவகனுக்குத் தோழர்களாக ஆயினது என்பது பற்றியும் கூறிவருகையில், சீவகனது வரலாற்றையும், விசையையிடம் கூறுகிறார்கள். அதுகாலை, சீவகன் "கொடியவில்லையுடைய வேடர்கள் கவர்ந்த பசுக்கூட்டங்களை மீட்டு, விஞ்சையர்க்கரசனாகிய

கலுழவேகன் மகளை யாழாலே வென்று மணந்து கொண்டு அசனிவேகம் என்னும் யானையை வென்று குணமாலையின் அழகைப் பருகிய நம்பியினது பெயர் யாதெனில்'' என்று அவனது வீரத்தைப் புகழ்ந்து கூறுகிறார்.

வேடருடன் போருடற்றி வெற்றிகொள்ளுதல்

சீவகன் கலைகளைக் கற்று விளங்கும் காலத்தில், கட்டியங்காரனாகிய அரசனது பசுக்களை வேடர் கவர்ந்து செல்ல அவனாலும், சேனையாலும் அவற்றை மீட்க முடியாமற் போகவே, சீவகன் நல்லொழுக்கம், பசு, துறந்தார், பெண்டிர், பாலர், பார்ப்பார் என்பாரை யான் காவேனெனின் பசுக்களைப் பறிகொடுத்துப் பாலடிசில் உண்டற்கு இருக்கின்ற கட்டியங்காரனாகக் கடவேன் என்று வஞ்சினம் கூறிச்சென்று வேடர்களை வெருட்டி, நிரைகளை மீட்டினான். ஒரு அரசனுக்கு, தலைவனுக்கு எத்தகைய உணர்வு இருக்க வேண்டுமோ அத்தகைய உணர்வைக் கொண்டவனாக, சீவகன் வாழ்ந்துள்ளான். உண்மையில் சீவகன் அரச குமாரன். அரச பரம்பரைக்குரிய குணப் பண்புகளைக் காண்கிறோம். சிறு வயதிலேயே, வணிகர் வீட்டில்வளர்ந்ததால், தன்னைப்பற்றி அறியாத சீவகன் இயல்பாகவே, வீர உணர்வுக்கு இலக்காகினான் என்பதை ஆசிரியர் எடுத்துக்காட்டி, அவனது பண்பை வெளிப்படுத்துகிறார். பாண்டியன் நெடுஞ்செழியன் கூறிய வஞ்சின மொழிபோல, சோழன் நலங்கிள்ளி கூறிய வஞ்சின மொழி போல சேரன், கணைக்கால் இரும்பொறை கூறிய வஞ்சினம்போல, சீவ

கனும் வஞ்சினம் கூறிப் போருக்கு எழுகிருன் இதுவே, அவனைத் தன்னிகரில்லாத் தலைவன் என்பதை எடுத்துக்காட்டுவதாகும்.

வெற்றிமாலை சூடிய சீவகனுக்குப் பரிசாக, ஆயர் தலைவன் கோவிந்தன் மகிழ்ந்து தன் மகள் கோவிந்தையை மண முடிப்பதாகக் கூற, சீவகன் அதற்கு உடன்படாது, தன் நண்பன் பதுமுகனுக்கு அவளை மணம் புரிவிக்கிருன். இந்நிகழ்ச்சி அவனது பரந்த நோக்கைக் காட்டுவதாகும். நண்பர்களுடன் வாழும் போதும், வெறுப்பின்றி உடன் பழகி, தன் ஆற்றலுடன் அவர்கள் ஆற்றலும் விளக்கமுற வேண்டும் என்று பாடு படுகிருன். அதே நிலையில் தன் மனத்திற்கு உடன் படாது, தனக்குரியவளாக வந்தவளை, நண்பனுக்கு முடித்துவைத்து மகிழ்வடைகிருன். பொருமையோ, வஞ்சனையோ, சூது நிகழ்ச்சியோ இல்லாத ஓர் தலைவனுகக் காட்சி தருகிருன்.

அறிவின் திறம்

சீவகன் தன்னுடைய கல்வியறிவால், மற்றைய அரசர்களையும், தத்தையையும் வெற்றிகொள்ளுகிருன் என்பதை அடுத்துக் காட்டுகிருர். சீதத்தன் என்னும் வணிகன் மரக்கலமேறிச் சென்று மீள்கையில், கடலிற் கலங்கவிழ்ந்ததுபோலக்கண்டு, ஒரு திட்டிலேறி ஆங்கு வந்த தரனை நோக்கித் தானுற்றதைக் கூறி அவனேடு வெள்ளிமலை சென்று அரசனைக் கண்டான். அரசனும் சீதத்தனேடு உறவு கொண்டாடித் தன் மகள் காந்தருவதத்தையை வீணை வாசித்து வென்றவற்கு அவளை மணமுடித்துக்

கொடுக்கும்படி அவனோடு அனுப்பினன். சீதத்தன் அவளோடு கடற்கரை சார்ந்து கலத்தைத் தரன் காட்டக் கண்டு மகிழ்ந்து இராசமாபுரம் சேர்ந்து தத்தை வரவைக் கட்டியங்காரனுக்கு உணர்த்தி இசை வல்லாரைக் கூட்டினன். அவர் எல்லாரும், வீணை வாசித்துத் தத்தைக்குத் தோல்வியுறவே சீவகன் சென்று தத்தையது வீணையை வாங்கி நரம்பைத் தெரித்து அதிலிருந்து மயிரை எடுத்துக்காட்டி அவளை வென்றான். கட்டியங்காரன் அரசரின் துணையோடு, சீவகனைவெல்லக் கருதிப் பகைக்கச் செய்து போருண்டாக்கினன். சீவகன் கட்டியங்காரனையும், மற்றைய விழாவிற்கு வந்து, தன்னைப் பகைத்து போருடற்றிய அரசர்களையும் வென்று, காந்தருவதத்தையை மணந்து கொள்கிறான் என்று ஆசிரியர், சீவகனது அறிவு ஆற்றலையும் எடுத்துக்காட்டுகிறார். அவன் வில்லாற்றலுடையவன் மட்டுமல்ல, வீர உணர்வுகொண்டவன் மட்டுமல்ல, கல்வியறிவும் கொண்டவனுவான் என்பதைக் கூறிச் சிறப்பிக்கின்றார்.

குஞ்சரம் வென்ற நம்பி

இராசமாபுரத்தார் நீராடுதானம் செய்து நீராடச் சென்றபோது குணமாலையும், சுரமஞ்சரியும், சுண்ணம் காரணமாகத் தம்மில் வேறுபட்டனர். அவர் தோழிகள் அவ்விருவரது சுண்ணங்களைச் சீவகனிடம் காட்டி இவற்றில் நல்ல சுண்ணம் எதுவென்று கேட்க, அவன் வண்டுகளைக் கூவி, அவற்றாலே நல்ல சுண்ணத்தைத் தெரிவிக்கிறான். அப்பொழுது கட்டியங்காரனது யானை

குணமாலையைக் கொல்ல ஓடுகையில் சீவகன் கட்டியங் காரன் பகைப்பான் என்று கருதாது, பெண்ணுயிர் சாதற்கு இரங்கி யானையை ஓட்டி, அக்குணமாலையின் உயிரைக் காப்பாற்றுகிறான். அவள் வேண்டுதலுக் கேற்பக், குணமாலையையும் மணந்து கொள்ளுகிறான். இவ்வாறு, ஆசிரியர், சீவகனின் பல்வேறுபட்ட குணங் களை விரித்துக் கூறுகிறார். இப்பகுதியால், சீவகனது மண நிகழ்ச்சிகள் ஒருவாறு தெரிவதாகின்றது. ஒவ் வொரு மணவினைக்கும், தனித்தனியே இலம்பகங்கள் இருப்பினும், கனகமாலையார் இலம்பகத்திலே, இக் கருத்தை மீண்டும் கூறவேண்டுவதில்லை. சீவகனின், தோழர்கள் வாயிலாக, திரும்பவும், ஆசிரியர், அவனது இயல்புகளை எடுத்துக் கூறுவதும், காப்பியத் தலைவனின் ஒப்புயர்வற்ற தன்மையையும், தன்னிகரில் லாத் தலைவன் சீவகன் என்பதையும், எடுத்துக்காட்டு வதற்கேயாம். இலக்கிய ஆசிரியர்கள் தங்கள் கருத்தை நிலைநாட்டுவதற்குத் திரும்பத் திரும்பக் கூறிச் சிறப் பிப்பது மரபாகும். அதே போல, திருத்தக்க தேவரும், நடுநாயகமாக விளங்கும்; கனகமாலையார் இலம்பகத்தில் சீவகனது வரலாறு கூறுமுகமாக, அவனது சிறந்த பண்புகளை எடுத்து விளக்குகிறார். சீவகன், வீரத்தின் எழிலையும், கல்வியின் சிறப்பையும், வலிமையின் வளப்பத்தையும் கொண்டவன் என்பதை

" வெஞ்சிலையின் வேடர் தொறு மீட்டு விசும் பேகும்
விஞ்சையரை யன்மகளை வீணை பொரு தெய்திக்
குஞ்சரமும் வென்று குண மாலை நல னுண்ட
நம்பியவ னுமமெவ னென்னினிது வாமே. "

என்று கூறி சிறப்பிக்கின்றார்.

தொல்காப்பிய நெறிக்கேற்ப சீவக சிந்தாமணி அமைந்துள்ளது. காலத்தாற் முற்பட்ட இலக்கண நூலாகிய தொல்காப்பியம் கூறும் காப்பிய இலக்கணத்தின் அமைதியை, சீவக சிந்தாமணியில் காண்கிறோம். தொடர்நிலைச் செய்யுட்களால் ஆகியது காப்பியமாகும் என்பது பண்டைய வழக்கு. பிற்காலத்தவர், பெருங்காப்பியம், சிறுகாப்பியம் என இரண்டாகப் பிரித்து, இலக்கணம் கூற முற்பட்டனர். மலை, நதி, நாடு, நகரம் இவைகளின் சிறப்புக் கூறப்படுதல் வேண்டும் என்பது மரபு. ஆனால் தொல்காப்பியரோ, இவையனைத்தையும் உள்ளடக்கி தொடர்நிலையாக வந்தால் போதுமானது என்ற நிலையில் கூறுவாராயினர். "பொழில்தரு புணர்ச்சி" "புனல்தரு புணர்ச்சி", "தலைவனின் வீரம்", இவைகள் காப்பியத்தில் வருதல் வேண்டும். அதற்கேற்ப தேவர், தன் காப்பியத்தில் கருத்துக்களைக் கூறிச் செல்லுகிறார். அவைகளை இக்கட்டுரையில் காண்போம்.

இதுகாறும் கூறியவற்றால், சீவகனது மாண்பையும் வீரத்தையும், தொல்காப்பிய நெறியைப் பின்பற்றி காப்பிய அமைதியையும், ஒருவாறு அறிந்துகொண்டோம். பழமை வழியிலோ, இலக்கண வழியிலோ, படிப்போரை, தேவர் இன்புறச் செய்துள்ளார்.

★

2. "உண்டாட்டு"

உண்டாட்டு என்பது உண்டு மகிழ்தல் என்பதாகும். விருந்து போற்றல் என்ற முறையில் வழங்கப் படுகிறது. இதை இக்காலத்தில் (Tea-party) என்று அழைக்கிறார்கள். எல்லோரும் ஒன்றுயிருந்து உண்டு மகிழ்தல் என்ற பழக்கம் இன்று மிகுதியாகக் காணப் படுகிறது. மணவிழா, காதணி விழா, பிறந்த தினவிழா இசைவிழா போன்ற விழாக்களில் உற்றார் உறவினர்களுடனும் நண்பர்களுடனும் கூடி விருந்துண்ணும் பழக்கம், நம் நாட்டில் ஒரு சிறப்பாகக் கொண்டாடப் படுகிறது. பரிசு பெற்ற ஒருவரைப் பாராட்டும் முகமாகவோ, வெற்றி பெற்ற ஒருவரைப் பாராட்டும் முகமாகவோ, இவ்வித உண்டாட்டு நிகழ்தலும் உண்டு. இன்று நாம் காணும் உண்ட ாட்டுக்கள் எல்லாம் ஒருவரது பெருமையை விளக்கு முகமாகக் கொண்டாடப் படுவதாகும். வேண்டுபவர்கள் அவ்விழாவைக் கூட்டிச் சிறப்பிப்பார்கள். இந்நிகழ்ச்சி நம் நாட்டிற்குப் புதிதல்ல. அன்று முதல் நடந்துவரும் செயலாகும்.

இத்தகைய உண்டாட்டு விழாக்கள் சங்க காலத்தில் வெற்றி வீரர்களுக்காக நிகழ்த்தப்பட்ட அரிய பாராட்டு விழாக்களாகும். இக்காலத்தில் எளிமையாக யாருக்கு வேண்டுமானாலும் செய்யப்படும் 'விருந்து போற்றும்' விழா அக்காலத்தில் அரிய முறையில் ஆன்றோர்களுக்கென எடுத்த உண்டாட்டு விழாக்களாகும். செல்வர்கள்

மட்டும் துய்க்கப் பயன்படும் விருந்து உபசாரம் சங்க காலத்தில் வேறுபாடின்றி மன்னனும் மக்களும் கூடி யிருந்து உண்பதற்குப் பயன்பட்டது. ஒப்புயர்வற்ற உண்மை நிலையைக் கண்டு நேரிடையாகப் பாராட்டு உரை வழங்குவதற்கும், தகுதிப் பாட்டை நிர்ணயம் செய்வதற்கும் இத்தகைய உண்டாட்டு விழாக்கள் சங்க காலத்தில் பயன்பட்டன. இந்நிலை மன்னனுக்கு உதவி யாக அமைந்தது. மன்னன் தனது ஆட்சிக்குத் தெரிந்து தெளிய பயனுடையதாக இருந்தது. அதே நிலையில் உண்மை உழைப்புக்குப் பயன் கிட்டுவதாகவும், மக்கள் எண்ணி மகிழ்ந்தனர்.

அரிய செயல்களை நடத்திய ஒருவரைப் பாராட்டும் நிகழ்ச்சியை இன்று நாம் காண்கிறோம். அது அவர்கள் நடத்திய செயலுக்குப் பின் கொண்டாடப்படுகிறது. செயலை நிறைவேற்றும் நிலையிலும்கொண்டாடுகிறார்கள். உண்டாட்டு பற்றிய நிகழ்ச்சிகளை, புற நானூற்றுப் பாடல்களிலே சிறக்கக் காண்கிறோம். இது பண்டைய மக்களின் சமுதாய நிலையை எடுத்துக் காட்டுவதாகும். முடியாட்சிக் காலத்திலும், குடியாட்சியின் பிரதிபலிப்பை எடுத்தியம்புவதாகிறது. ‘உண்டாட்டு’ நிகழ்ச்சி மன்ன னிடத்தில், மக்கள் கொண்டிருந்த அன்பையும், ஆதரவையும், காண்பிப்பதாக புறம் கூறுகிறது. மன்னனையே தலைவனாக வைத்துப் பாடிப் பரிசில்பெற விழைந்த புலவர் கூட்டம் அக்காலச் சமுதாய நிலையை எடுத்துக் கூற முற்படுங்கால், மன்னன் எவ்விதம் வேறு பாடின்றி மக்களுக்கு உள்ளம் பூரிக்கும் வகையில் உட னிருந்து உண்டு மகிழ்ந்து அவர்களது ஆதரவைத்

தேடிக்கொண்டான் என்பதைக் கண்ணுடி போல விளக்கிக் காட்டுகிருர்கள்.

உண்டாட்டு நிகழ்ச்சிகள் போர்க்காலங்களிலே பெரிதும் நிகழ்ந்து உள்ளனவாகக் காணப்படுகின்றன. போர்க்களத்திற்குச் செல்லுமுன் மன்னன், போர்ப்பறை அறிவித்து, வீரர்களே அழைப்பித்துக், கூடியிருந்து உண்டு அவர்களே உற்சாகப்படுத்தி போர்க்கோலம் பூணச் செய்வான். அப்போது போரிடுவதற்கு நாளும், கோளும் பார்த்து ஒரு முடிவு செய்வதும் பழக்கமாக இருந்துள்ளது. போர்க்களம் சென்று மீண்ட நிலேயில் வெற்றியைக் கொண்டாட உண்டாட்டு நிகழ்த்தி விருதுகள், பட்டங்கள், பரிசுகள் வழங்கும் பழக்கமும் உண்டு. இவ்விரு நிலேகளிலும் பண்டைய மன்னர்கள் மக்களுடன் உறைந்து கோலாகலமாக விழாவை நடத்தியுள்ளனர் என்பதை இலக்கியங்களிலே காண்கிருேம். இந்நிலே மன்னனுக்கும் மக்களுக்கும் இடையே உள்ள வேறுபாட்டைக் களேவதற்கு உதவியுள்ளது. ஏற்றத் தாழ்வு, பூசல் பொருமை முதலிய குணங்களே நீக்குவதற்கும் இந்நிலே உறுதுணேயாக இருந்துள்ளது. மக்களின் பேராதரவு மன்னனுக்கு நீங்காத நிலேயிலே வெற்றியைத் தேடிக் கொடுத்துள்ளது. பிரிவினே என்ற மனப்பண்புக்கும் இடமின்றி மன்னர்களது ஆட்சி வேரூன்ற வழியாக அமைந்தது என்பதைச் சங்க இலக்கியங்களிலே நாம் பரக்கக் காண்கிருேம். இவைகளால், சங்க காலத்தில் முடியாட்சி விளக்கமுற அமைந்து, பல்வேறு வளங்களும் செறிந்து காணப்பட்டன என்பது புலனுகும்.

உண்டாட்டின் சிறப்புப்பற்றி புற நானூற்றில் ஔவையார் கூறும் கருத்து உள்ளத்தைப் பிணிப்ப தாகும். பகை மன்னன் படை எடுத்து வந்துள்ளான் என்ற செய்திகேட்டு மக்கள் இயல்பாகவே வீறு கொண்டு எழுந்தனர். போர் விருப்பால், திரண்ட தோள்கள் பூரித்து எழுந்தன. மன்னனுல் அறிவிக்கப் பட்ட போர்ப்பறை கேட்டது. நாட்டில் உள்ள வீரர்கள் அவ்வொலி கேட்டு, உள்ளம் கிளர்ந்தெழத் திரண்டனர். அவர்களைப் பாராட்டும் முகமாகவும் உற்சாகம் மூட்டு முகமாகவும் முன் போருக்குச் சென்று வந்தவர்களின் வீரத்தைப் பாராட்டு முகமாகவும் மன்னன் பெரு விருப் பிளேடு அவர்கட்குப் பெருவிருந்து அளிக்க முற்பட் டான்.

விருந்து பாராட்டும் நிலையில், புதிதாக வந்திருப்ப வர்களை அறிமுகப்படுத்துதலும் ஒருவருக்கு மற்றவரை அறிமுகம் செய்து வைத்தலும் மரபாகும். மன்னன் அளிக்கும் விருந்தில் கலந்துகொள்ள பல வீரர்களும், சான்ருேர்களும் குழுமியிருந்தனர். அப்போது அறிமுகம் செய்து வைக்கும் முறையில் சான்ருேராகிய ஔவையார் எழுந்து ஒவ்வொருவரையும் அறிமுகப்படுத்தி வருகிருர். அறிமுகப்படுத்துகின்ற நிலையில் அவர்களது குடி நிலையை எடுத்துக் கூறிப் போற்றுவது இயல்பு. ஔவை யார் படைவீரர் தம் குடிவரவும், போர்த்திறமும் எடுத் துக்கூற முற்படுகிருர். பலரை அறிமுகம் செய்து வைத் தாலும் ஒரு வீரனின் குடி நிலையைப் பாராட்டிக் கூறும் போது, அவனது தொன்மையும், மறனும் எடுத்து விளக் கப்படுகிறது. மன்னன் எல்லோருக்கும் நடுவன்

அமர்ந்து காட்சிக்கு எளியனாய், கடுஞ்சொல் அல்லனாய் வீற்றிருக்கிறான். அப்போது ஔவையார் "மன்னர் பெருந்தகையே, இவனுக்குக் கள்ளை முன்னே கொடுத்துப்பின்னர் நீ உண்பாயாக" என்று கூறுகிறார். இது கேட்டு மன்னன் வியப்பும் பெருமிதமும், மகிழ்ச்சியும் உடையவனாகிறான்.

பின்னரும் ஔவையார் மன்னனுக்குத் தான் முன்பு கூறியகூற்றை விளக்க முற்படுகின்றார். "அரசே இவ்வீரன் உன்னைக் காப்பாற்றத் தகுதியுடையவன். உன் உயிரைமட்டுமல்ல, நாட்டினது உயிரையே காப்பாற்றத் தயங்காத மா வீரன். இவன் பரம்பரையே இந்நாட்டிற்குத் தங்களது உயிரைத் தியாகம் செய்த பரம்பரையாகும். தன்னலமிலாத் தகைமையைக் கொண்டது இவனது குடி. ஒருவேளை நீ ஐயப்படலாம். இவனது பாட்டன் உன் பாட்டனைப் போர்க்களத்தில் கண்ணிமையாது காத்து, ஆரக்கால்கள் பொருந்திய வண்டியின் குடம் போல் பகைவர்கள் எறிந்த வேல்களைத் தன் உடலில் தாங்கி நின்று மாண்டான் என்பதை

" நுந்தை தந்தைக்கு இவன் தந்தை தந்தை
எடுத்து எறி ஞாட்பின் இமையான்
தச்சன் அடுத்து எறிகுறட்டின் நின்று
மாய்ந்தனன் மறப்புகழ் நிறைந்த, மைந்தினோன்"

புறம்—290

என்று பாட்டனது பெருமைகூறி இவனது உண்மை நிலையையும் திண்மையையும், பற்றையும் விளக்குகின்றார். ஆகவே மன்னவ நீ ஐயமில்லாமல் இவனை உனக்கு மெய்க்காப்பாளனாகக் கொள்ளலாம்." "இவனும் உறைப்புழி ஓலைபோல நின்குறித்து வருவேல் மறைக்குவன்."

பனை ஓலையால் செய்த குடையை அக்கால மக்கள், வெயிலினின்றும், மழையினின்றும் தங்களைக் காப்பாற்றிக்கொள்ளப் பயன் படுத்தினர். இக்காலத்திற்கூட தாழையால் செய்த குடையைப் பயன் படுத்துவதைக் காண்கிறோம். ஓலைக்குடை, எப்படி அதைப் பிடித்திருப்பவர்களுக்கும், மழைத்தாரைக்கும் நடுவில் நின்று மறைத்து நனையாதவாறு செய்கிறதோ, அதேபோல இந்த வீரனும், உன்னைவிட்டு அகலாது இருந்து, பகைவர்கள் எறியும் சமயத்தில், உனக்கும் பகைவருக்கும் நடுவில் நின்று, உன்னைக் குறித்துவரும் வேலைத் தன் மார்பிலே தாங்கி, உயிர்மாள்வன். அத்தகைய பண்பாளன். ஆகவே இவனுக்கு கள் ஈந்து உண்மதி என்று புலவர் பெருமகனார், நயம்படக் கூறி அறிமுகப்படுத்த முற்படுகிறார்.

இவ்வாறு உண்டாட்டு நிகழ்ச்சிகளில் அறிமுகப் படுத்தும் முறையை இன்று நாம் காண்கிறோமென்றாலும், சங்க காலத்தில் ஒருவரது உண்மை நிலையை வெளிப்படுத்துவதற்கு இது பயன்பட்டது என்பதை அறிகிறோம். உள்ளக் கருத்தின் உண்மையைப் புரிந்து கொள்ள அந்நிலை பயன்பட்டுள்ளது என்பதும் தெளிவாகும்.

போர்க்களத்தில் மகன் இறந்துபட்டான் என்ற செய்தி கேட்டு தாய் மனம் கலங்காது மகிழ்ச்சியுடன் "எங்கள் நாட்டு மன்னன் படையில் இளையர் பலர் உள்ளனர். அவர்கள் யாவரும் அவன் செல்லும் நெறியில் வெள்ளாடுகள் போல் அவனைப் பின்பற்றிச் செல்லும் இயல்பினர், என்றாலும் எங்கள் மன்னன் அவர்

களுக்கெல்லாம் மேலாக என் மகனுக்கு முதற்களைக் கொடுத்துச் சிறப்பித்தான் என்பதை

"வெள்ளை வெள்யாட்டுச் செச்சைபோலத் தன்னோரன்ன
இளையர் இருப்பப் பலர்மீது நீட்டியமண்டை" புறம்-286

என்று தன் உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தி ஒரு தாய் மகிழ்கிறாள். இதை புறநானூற்றில் விளக்கும் ஆசிரியர், அவ்வாறு மன்னன் செய்த சிறப்புக்கு கைம் மாறாக அவன் தன் உயிரையும் பொருட்டாகக் கருதாது முந்துற்றுத் தன் உயிர் கொடுத்துச் செஞ்சோற்றுக் கடன் கழித்தான் என்று தாய் பெருமிதம் கொள்வதாக எடுத்துக்காட்டி, தாயின் வீர மாண்பை விளக்குகிறார். போர்க் களத்தில் மகன் இறந்தான் என்று கேட்டதும் துடிதுடித்து அழாமல், கவலையுறாமல் கூற முற்படுகிறாள் என்பதே வீரத்தாயின் நற்பண்புகளாகின்றன. செய்தி கேட்டு வீர சுவர்க்கம் எய்தினன் என்று கூறிப் பெருமைப் பட்டிருக்கலாம். அவ்வாறில்லாமல் "என் மகன் பாடையிற்கிடத்தி, வெள்ளாடை போர்த்தும் இழிந்த சாவினை பெற்றானில்லை" என்று கூறும் சிறப்பு மகனின் தியாக உணர்வை வெளிக்காட்டுகிறது. பெற்றெடுத்த பேறு முற்றுப்பெற்ற நிலையையும் கூறி மன அமைதி அடைகிறாள். வீட்டில், பிணியில் அமிழ்ந்தி இறந்துபடாமல், போர்க்களத்தில் இறந்தது தனக்கும், தன் மகனுக்கும் பெருமை என்று எண்ணாமல், மன்னனுக்கு அந்தச் சிறப்பும் பெருமையும் உரியதாகின்றது என்று கூறுகிறாள்.

அன்றொரு நாள், போர் மூண்டது. மன்னன் கலங்கவில்லை. படை வீரர்களை அழைப்பித்தான்.

இளையர் கூட்டம் மன்னனைச் சூழ்ந்து கொண்டார்கள். நால்வகைப் படைகளும் திரண்டுள்ளன. மன்னன் உண்டாட்டு நிகழ்த்துகிறான். மண்டை என்ற பாத்திரத்தில் கள்ளைக் கொடுத்துச் சிறப்பிக்கிறான். அப்போது அங்கு குழுமி உள்ள அனைத்து வீரர்களும், தங்களுக்கு, மன்னன் முதலாக கள்ளைக் கொடுத்துச் சிறப்பிக்க மாட்டானா என்று ஏங்கி நிற்கிறார்கள். மன்னன் முதலாகக் கள்ளை கொடுப்பானேயானால், உரிமை அனைத்தையும் கொடுத்தது போலாம். அந்தச் சிறப்பை அடைய, வீரர்கள் காத்திருப்பது மரபு. அந் நிலையில், கூட்டத்திலிருந்த, தன் மகனுக்கு, மன்னனால், முதற் கள் கொடுக்கப்பட்டது அறிந்து உள்ளம் பூரித்து, மகனை வாழ்த்துகிறாள். பின்னர் இறந்துபட்ட நிலையில், மகன் உரிமையையும் கடமையையும் நிறைவேற்றி விட்டான் என்பதை "மன்னன் அன்று, சிறப்பித்துக் கொடுத்த கள்ளின் தகுதியை நிலை நாட்டிச் செஞ்சோற்றுக்கடன் கழிப்பித்து, வெற்றியைத் தேடிக் கொடுத்து, வீர வாழ்வைத் தேடிக் கொண்டான்" என்று தாய் கூறும் சிறப்பு நயம் தோன்றுவதாகும். மக்கள் சமுதாயம் எந்த நிலையில் வாழ்ந்து உள்ளது என்பதை வீர காவியமாகிய புறநானூறு எடுத்துக் கூறும் சிறப்பு, "உண்டாட்டின்" தகுதிப்பாட்டை அறிய வாய்ப்பாக அமைகிறது,

இந்நிகழ்ச்சியை, சிலப்பதிகாரத்திலும் காண்கிறோம். சேர வேந்தனாகிய செங்குட்டுவன் மலைவளங் காண விரும்பி, தானைகள் சூழ, தன் தேவி வேண்மாளுடன் வஞ்சிமாநகரினின்றும் புறப்பட்டுப் பேராற்றங்

கரையில் உள்ள மணற்குன்றிலே தங்கியிருக்கிருன். குறவர்கள் அவனைக் காண, பல மலைபடுபொருள்களுடன் வந்து, தாங்கள் கண்ட அரிய நிகழ்ச்சியைக் கூறுகிருர்கள். அருகில் இருக்கும் புலவர் சாத்தனுர், அதன் முழு வரலாற்றையும் கூற, பத்தினிக் கடவுளாகிய கண்ணகிக்கு, கோயில் எடுப்பிக்க இமயம் சென்று கல்லெடுத்து வருவதாக முடிவு செய்கிருன். வஞ்சிமாநகரிலிருந்து புறப்படுவதற்கு முன், வடதிசையில் உள்ள மன்னரெல்லாம் திறையுடன் வந்து காணவேண்டுமென்று, நகரில் உள்ள ஒற்றர்கள் அறியும்படி பறை அறைவிக்கும்படி செய்கிருன்.

பறையொலி எழுந்த பின், செங்குட்டுவன், புறப்பட ஆயத்தமாகிருன். இமயத்தினின்று வந்த முனிவர்கள், கனகனும், விசயனும் இகழ்ந்த செய்தியையும் கூறுகிருர்கள். அது கேட்டுப் பொருது, செங்குட்டுவன், வெஞ்சினத்துடன், வஞ்சினம் கூறி எழுகிருன். மன்னனின் வீர உணர்வைக் கண்ட போர் வீரர்கள் ஒன்று திரண்டு எழுகிருர்கள். போருக்குப் புறப்படுவதற்கு அடையாளமாக, வாளினையும், குடையினையும் நன்முழுத்தத்தில் வடதிசையிற் புறப்படச் செய்து, படைத் தலைவர்கட்குப் பெருஞ்சோறு அளிக்கிருன் என்பதை இளங்கோவடிகள்,

"புரைதீர் வஞ்சி போந்தையின் தொடுப் போன்
அரைசுவிளங் கவையம் முறையிற் புகுதர
அரும்படைத் தானை யமர் வேட்டுக் கலித்த
பெரும் படைத் தலைவர்க்குப் பெருஞ் சோறு வகுத்து"

சிலம்பு-கால்கோட் காதை 46-49.

என்று கூறுகிருர்.

போருக்குச் செல்வதற்கு முன், கள் கொடுத்தல் என்றும், சோறு அளித்தல் என்றும், இரண்டு முறையில் உண்டாட்டுக்கள் நிகழ்ந்திருக்கின்றன. மண்டை என்ற பாத்திரத்தில் கள் கொடுத்துச் சிறப்பித்துள்ளார்கள். முதற் கள்ளைப் பெற வேண்டும் என்று பாடுபட்ட நிகழ்ச்சியையும் புறத்திலே காண்கிறோம். அப்படிப் பெற்ற முதற் கள்ளுக்கு கைம்மாறாகத், தன் உயிரையும் கொடுத்துப் புகழ் நாட்டிய செய்தியையும் அறிகிறோம். சோழன் நலங்கிள்ளி, போருக்குப் புறப்படு முன், தன் வீரர்களுக்குச் சோறு அளித்து, மகிழ்ந்து, களத்திற்கு அனுப்பினான் என்பதையும் புறத்திலே காண்கிறோம். போர் நிலை முடிந்தும், பாசறையில் இருந்து கொண்டே வெற்றியைக் கொண்டாடிய நிகழ்ச்சியைக் காண்கிறோம். அப்போது வீரர்களுக்கும், புலவர்களுக்கும், சோறு அளித்து, மகிழ்ச்சி அடைந்ததைக் காண்கிறோம். சோழன் குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவன் பாசறையிலே அமர்ந்திருக்கிறான். அவனைக் காண கோவூர் கிழார் வருகிறார். புலவர் வருகையைக் கண்ட மன்னன் சோற்றுத்திரளைக் கொடுக்கிறான். புலவருக்குமட்டு மல்லாது வீரர்கள் அனைவருக்கும் சோற்றுத் திரளைக் கொடுத்துச் சிறப்பிக்கிறான். இந்நிகழ்ச்சிகள், மன்னர்களது, மகிழ்ச்சியையும், மாண்பையும் எடுத்து விளக்கினாலும், வீரர்களின் உறுதிப்பாட்டையும், அரசனிடம் கொண்டுள்ள அன்பையும் வெளிப்படுத்துவதாகும்.

அதே நிலையில், சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள், போருக்குப் புறப்படுவதற்கு முன் பெருஞ்

சோறு அளித்து, வேறுபாட்டை அகற்றி, வீரர்களை மகிழ்ச்சி அடையும்படி செய்து, தன் நாட்டின் ஒற்றுமையை நிலை நாட்டினன், சேரன் என்று கூறிச் சிறப்பிக்கின்றார். இவைகள், வரலாற்று நிகழ்ச்சிகளாயினும், இயல்பாக, விழாக்களிலே நடைபெறும் நிகழ்ச்சிகளாம். உண்டாட்டு, உயர்வுடைய நிகழ்ச்சிகளில் ஒன்றும். இது போன்ற பழந்தமிழ் பண்புகளைச் சங்க இலக்கியங்களிற் கண்டு இன்புறுவோமாக!

★

3. சிலம்பு தந்த செம்பொன்

'சிலம்பு' என்றும் ஒலித்துக் கொண்டிருக்க வேண்டும் என்று, விரும்பிய புலவன் தனது கருத்துக்களுக்கேற்ப இலக்கியத்தை உருவகம் செய்து, பல பாத்திரங்களைப் படைத்து ஒவ்வொரு கோணத்திலிருந்தும் நோக்கும் பெரு நோக்காளர்கள் அறியும் வண்ணம், ஒவ்வொரு பாத்திரத்தையும் ஆராய்ந்து முடிவு காணும்படி, இளங்கோவடிகள் நம்மிடையே உலவ விட்டிருப்பது, நம் தமிழ் இலக்கியத்தின் சிறப்பாகும். 'நுண்மாண் நுழைபுலம் வேண்டின், இலக்கிய ஆராய்ச்சியின்பாற் பெருக' என்பதே பண்டைய நூல் வழக்கு. இக்கால இலக்கியங்களில் ஆய்வுக்கு வேலையில்லை. மதிநுட்பம் வேண்டுவதில்லை. ஆனால் சங்கம் ஈன்ற தனிப்பெரும் செல்வங்களை என்றுமே அழியாதவாறு காண, 'ஆய்வு' என்ற சாளரத்தின் வழியே நாமும் உலகப் பெருமையை நிலைநாட்ட, நமது இலக்கியங்கள் உறுதுணை புரிகின்றன.

உலகம் அறியும்படி தன் காப்பியமாகிய சிலப்பதிகாரத்தை அமைத்துள்ளார் இளங்கோவடிகள். இளங்கோ காட்டும் மாதவி கணிகையர் குலத்தில் பிறந்தாலும் காரிகைகள் போற்றும் கற்பரசியாகவே திகழ்கிறாள். ஏனைய பெண்களுக்கு ஓர் எடுத்துக் காட்டாக அவர்கள் குலத்தைத் திருத்தும் ஒப்பரிய பெண்ணாகக் காட்சி தருகிறாள். ஆடிப்பாடி வாழும் மரபில் வந்தவள்

என்றாலும் தனிப் பெருமையுடன் அரசர்களுக்கென்றே ஆடிப்பட்டம் பெறும் வனிதையாக மதிக்கப்படுகிறாள்.

'வேத்தியல்' என்ற பாகுபாட்டின் கீழ் 'தலைக்கோல்' பட்டம் பெற்ற அரிவையாக இளங்கோ, மாதவியை அமைத்துக் காட்டுகிறார். "குலத்தின் பெயரால் அவளைக் குறைகூறின் அறிவுடைய பண்பை உலகில் யாருமே அடைய முடியாது. மாதவியின் பண்பை ஆராய முற்படுங்கால், உள்ளத்தில் மாதவியை உயர்வுடைய காரிகைகளின் வரிசையில் வைத்து போற்றத்தகும் உத்தமியாகவே எண்ணி, அவளின் உயர் குணத்தை உலகிற்கு எடுத்தியம்ப வேண்டும்.

மாதவி பருவம் எய்திய நிலையில் குலமுறைப்படி அரசனது அவையில் ஆடிப்பட்டமும் பரிசிலும் பெற ஆடல் அரங்கேறுகிறாள். கலையின் பெருமையை யாவரும் அறியவேண்டு மென்று அரசன் தன்னுடனிருந்து காணும் தகுதிசால் வணிகர், அந்தணர் முதலானோருக்கு அழைப்பு விடுக்கிறான். அவ் அழைப்பை ஏற்கும் பெற்றிமை பொருந்தியவனான கோவலன், வணிகர் பெருமைக்கு எடுத்துக்காட்டாக, ஏனைய வணிகப் பெருமக்களுடன் ஆடலைக்காண அவைக்கு வந்து சேருகிறான். தங்களுக்கென அமைத்திருக்கும் இடத்தில் கோவலனும் அவனது நண்பர்களும் அமர்ந்து கலையரசியின் நாட்டியத்தைக் காண்கிறார்கள். அரசன் அழைப்பு விடுக்க கோவலனின் தந்தை அந்த அவைக்கு வந்திருக்கலாம். அவன் தந்தையை இளங்கோவடிகள் வரச்செய்யாது கோவலனையே, மாதவியின் ஆடலைக் காணும்படி செய்வது கலைப்பண்பின் பெருமையை நுகரக் கூடிய

வர்கள்தான் நுகரலாம் என்ற உண்மையை நிலைநாட்டு கிறார். நம் நாட்டில்கூட ஒரு பழமொழி உண்டு 'கழுதைக்கு தெரியுமோ கற்பூர வாசனை' என்பது. கலை உணர்வு இல்லாதவர்கள் கலையை நுகர்ந்து பாராட் டுவது, அத்துணை பொருத்தமன்று, என எண்ணிய கவிஞன், கலையரசனாகத் திகழும் கோவலனையே அவ் விடத்தில் தோன்றும்படி செய்கிறான்.

இளங்கோ தான் இயற்றிய காப்பியத்தின் அடிப் படைக் கருத்தையும் நிலைநாட்ட முற்படுகிறார். 'ஊழ் வினை உருத்து வந்து ஊட்டும்' என்ற கருத்திற்கேற்ப கோவலன் 'ஊழ்' என்ற பாவையுடன் விளையாட வேண்டும். எப்படி ஊழ்வினை அவனைச் சுற்றி வளைக்க முடியும். அதற்கு, கோவலனை ஆடல் அரங்கிற்கு வரும் படி செய்து, அங்கு கலையின் மேம்பாட றிந்த அவன், மாதவியின் ஆடலை நுகர்ந்து ஈடுபாடுகொண்டு, தன் கலைப்பண்பை வளர்க்க இவள் ஒரு சாதனமாக இருப் பாள் என்ற கருத்தை அவனது உள்ளத்திலே வளரும் படி செய்கிறார். 'கலையின் பெருமையாக' இருவர் உள் ளத்திலும் அன்பு மலரை மலரச்செய்து, களவு என்ற தொல்காப்பிய நெறிக்கேற்ப, முதலில் ஆடலரங்கில் 'கண்ணோடு கண்ணினை நோக்கி' உள்ளக் கருத்தை ஊசலாடும்படி செய்து, தலைவன் தலைவியரின் முறையீடு போல், கோவலனும் மாதவியும் "காட்சி, ஐயம், தெளி தல், குறிப்பறிதல்" என்னும் துறைபோகி, கற்புநெறி நிற்கச் செய்யவேண்டும் என்று எண்ணிய இளங்கோ, மாதவியைத் தோழியிடம், அறத்தொடு நிற்கச் செய்யும் படி, முறையிடச் செய்கிறார்.

மாதவியும், தோழியிடம், தன் உயிருக்கும் மேலாக மதிக்கப்படும் பரிசுப் பொருளாகிய, மன்னவனுல் அளிக்கப்பட்ட 'பசும்பொன் மாலையை' அவள் கை கொடுத்து இதையே சுயம்வரப் பொருளாக வைத்து, என்னை மண முடிக்க அவரை அழைத்து வா, என்று கூருமல் கூறி, சுயம்வரத்திற்கு ஏற்பாடு செய்ய அனுப்புகிருள். இதைக் காணுங்கால் மாதவியின் திருமணம் தொல் நெறியின் வழியாகும் என்று கொள்ள இடம் உள்ளது. களவுபின் கற்பு வாழ்வு. கோவலன், யாருக்கும் தெரியாது மாதவியின் கண்களை ஆடலரங்கில் சந்திக்கின்ருன். பின் கற்புவழிப் படுத்துகிருன். மாதவி, கோவலனைத் தன் ஆசை நாயகனுகவோ அல்லது தன் குலத்திற் கேற்ப 'மலர் விட்டுத் தாவும் வண்டாகவோ கொள்ளவில்லை. ஒப்புயர்வு கூற முடியாத தலைவனுக மதித்து இல்லற மாண்பை வெளிப்படுத்துகிருள். கோவலனைப் பழங்கால முறைப்படி 'சுயம்வரம்' என்ற முறையிலேயே மணந்து கொள்ளுகிருள். அக்காலத்தில் கணிகையர் குலமாது நடனமாடி அரசனிடம் பொருள் பெறுவாளேயானுல் அது உயிரினும் மேலாக மதிக்கப்படும். அதுவே அவளுக்குப் பெருமையையும் புகழையும் தேடித் தரும் பான்மையுடையது. அத்தகைய சிறந்த பொருளையே 'பணயம்' வைக்கின்ருள் என்ருல், ஏனைய கணிகையர் வாழ்வு போல் தன் வாழ்வு அமையக் கூடாது என்று மாதவி எண்ணி, தனக்குரிய அரசனுல் கொடுக்கப்பட்ட, எப்போதும் விற்கக்கூடாத ஒரு பொருளை, விற்கும்படி தன் தோழியிடம் கொடுத்தனுப்புகிருள். 'உயர் விலை கூறி, என் நிலை உணர்த்தி மாலை

யிடும் மணவாளராக வரக்கூடியவர் அவர் ஒருவர் தான். ஆகவே என் உள்ளத்திலே தோன்றி பதிந் திருக்கும் உருவமே எனக்குக் கணவராக வரவேண் டும். இறைவா! வேறு யாரும் பொருள் கொடுத்து மாலையை வாங்கக்கூடாது. கோவலனே அதைப் பெற வேண்டும் என்றெல்லாம் மாதவி, எண்ணிக் கசிந்து, நைந்து உருகி உள்ளாள். தான் கண்ட, கருத்திலே கொண்ட, பண்புள்ள தலைவனை அடைய எத்துணை பாடுபடுவார்களோ, அதே நிலையை மாதவியும் அடைந் திருக்கிறாள். மாதவியின் கற்பு நிலையும், தெய்வீகத் தன்மையும் வெளிப்படுகிறது. உண்மையின் உயர்வை மாதவி பெறுகிறாள். அவளால் கொடுத்தனுப்பப்பட்ட பணயப் பொருளாகிய மாலையை வேறு யாரும் வாங்க லாம். வணிகர் வீதியிலே கொண்டு போய் விற்றுவா என்று தோழிகை கொடுத்து அனுப்புகிறாள். தோழியும் ‘நம்பியர் திரிதரு மறுகிற்’ நின்று விலை கூறுகிறாள். வேறு யாரும் அம்மாலையை வாங்க முடியும். அப்படி வாங்கி யிருப்பின், ஒப்புயர்வற்ற கோவலனே மணவாளனாக வாய்க்க வேண்டும் என்று மயங்கும் மாதவியின் வாழ்வே மாறுபட்டிருக்கும். வேறு யாரும் அம்மாலையை வாங்காது கோவலனே வாங்கினான் என்பது, மாதவியின் கற்பின் பெருமைக்கும், மனத்திண் மைக்கும், இல்லற மாண்பிற்கும், எடுத்துக்காட்டாகும். மாதவி முறைப்படி தன் குலமுறைக்கு மாறாக கோவலனை திருமணம் புரிந்து கொள்கிறாள். கோவ லனும், பசும்பொன் மாலையை வாங்கி, மாதவி கழுத்தில் அணிவித்து முறையான களவு-கற்புத் திருமணமே செய்து கொள்கிறான். மாலை வாங்கும் தன்மை, வாழ்

விற்கு அடிப்படை. இதை இளங்கோ, கோவலன் சுயம்வரத்தால் மாதவியை மனைவியாகப் பெற்றான். பணயம் வைத்த மாலையை வாங்கித் தன் இல்லற வாழ்வைத் துவங்குகிறான் என்று மிக அழகாக,

"நூறுபத் தடுக்கி எட்டுக்கடை நிறுத்த
வீறுயர் பசும்பொன் பெறுவதிம் மாலை
மாலை வாங்குநர் சாலுநங் கொடிக்கென
மானமர் நோக்கியோர் கூனிகை கொடுத்து
நகர நம்பியர் திரிதரு மறுகிற்'

என்று கூறி, கோவலன் - மாதவி திருமண விழாவை உறுதிப்படுத்துகிறார்.

மாதவி தன் குலத்தைத் திருத்திய நங்கையாவள். குல முறைக்கு மாறாக, ஒருத்தி ஒருவனுக்குத்தான் என்ற முறையை ஏற்படுத்தி கணிகையர் குலப் பெண்களும் இல்லற வாழ்வு நடத்தலாம் என்ற இல்லறப் பண்பை உலகிற்கு எடுத்துக் காட்டிய நங்கையாவாள் என்று இளங்கோவடிகள், நமக்குப் பல இடங்களிலே 'அரும் பதவுரை' போலக் காட்டி வருகிறார்.

கோவலன் மாதவியுடன் தூய இல்லற வாழ்வே நடத்தியுள்ளான். மாதவி வீட்டிலே பல ஆண்டுகள் தங்கி, ஆடல் பாடலில் ஈடுபட்டிருக்கும் காலத்தில் மாதவிக்கு ஒரு பெண் மகவு பிறக்கிறது. அக்குழந்தைக்குத் தன் முன்னோர் பெயரிட்டு அழைக்கிறான். பிறந்த நாள் விழாக் கொண்டாடுகிறான். அந்நாள்வாய் வந்த அந்தணர்களுக்கும், எளியோர்களுக்கும், முன்பு கண்ணகியோடு இருந்தகாலை, புதுமனை புகுந்தவேளை, மனையறம் படுத்தபோது வழங்கியதுபோல, தன்

செங்கையாலே, மாதவி அருகிலிருந்து நீர் வார்க்கப் பொன்னையும் மணியையும் வழங்கினன் என்று இளங் கோவடிகள் அடைக்கலக்காதையில்

" எங்குல தெய்வப் பெயரீங்கிடு கென "

சிலம்பு அடை—37

என்று கோவலன் கூற,

" அணிமேகலையர் ஆயிரங்கணிகையர்
மணிமேகலையென வாழ்த்திய ஞான்று "

சிலம்பு அடை—38

கோவலன்,

" மங்கல மடந்தை மாதவி தன்னெடு
செம்பொன் மாரி செங்கையிற் பொழிய "

சிலம்பு அடை—40, 41

என்று கோவலனது பண்பின் ஆற்றலாகவும் மாதவியை உயர் மனைவி என்பதற்கு "மங்கல மடந்தை" என்ற குறிப்புச் சொல்லாலும், மாதவியின் இல்லற மாண்பை வெளிப்படுத்துகிறுர். ஒருவனுக்குப் பக்கத்தில் ஒருத்தி நிற்கவேண்டுமானுல், அவள் உரிமை பெற்றவளாக இருக்கவேண்டும். மற்றவர்கள் எள்ளி நகையாடாமல் இருப்பது தலைவனையும், தலைவியையும் தான். அந்நிலை யில் கோவலன் பக்கத்தில், பலரும் அறியும்படியாக மாதவி நிற்பது, அவனது மனைவி என்ற உரிமையைப் பெற்றிருப்பதால், என்று எடுத்துக் காட்டவே ஆசிரியர், தெளிவுபட 'மாதவி தன்னெடு' என்றும் "செங்கையிற் பொழிய" என்றும் கூறிச் செல்லுகிறுர். ஒரு நற்செயல் புரியவேண்டுமானுல், கணவனும் மனைவியும் சேர்ந்து, மனமகிழ்வோடு, செய்வதுதான் மரபு. குலத்திற்கு மாருக, குலம் விளங்கவந்த நங்கை மாதவி என்ருல் மிகையாகாது.

அக வாழ்வில் தலைவனும் தலைவியும் கூடி வாழ்கின்ற நிலையில் பொருள் வயிற்பிரிதலோ, பகை தணி வினையால் பிரிதலோ ஏற்படின் தலைவி ஆற்ருது கவல்வாள். தலைவனும் ஆறுதல் கூறிச் செல்வான். அவன் கூறிச் செல்லும் காலத்தும், அவன் சென்ற பிறகு அவன் கூறிச் சென்ற அடையாளப் பொருள்களைக் காண்கின்றபோதும் உள்ளம் வெதும்புவாள். இக் காட்சிகளை நாம் குறுந்தொகை, அகநானூறு முதலிய நூல்களிலே காண்கிறோம். தலைவன் பிரிவான், மாலைக்காலம் படரும் முல்லை மலர் மலர்ந்து மணம் வீசும். பீர்க்கம் பூ மலர்ந்து தலைவிக்கு, தலைவன் கூறிச் சென்ற பருவத்தை எடுத்துக் கூறும். நிறம் கண்டு பருவம் வரினும் நம்புதல் இல்லாது தலைவனையே நம்பி வருங்காலம் பார்த்திருப்பாள். பசலை படர்ந்த மேனியளாய் வருகைக்குக் காத்திருப்பாள். இவ்வாறு வரும் கருத்துக்களை நாம் அகப் பொருளிலே காண்கிறோம். அகப் பொருளில் கூறும் கருத்து தலைவியாகிய இல்லக் கிழத்தியைச் சார்ந்ததாகும். ஓர் இல்லக் கிழத்தி பிரிந்த கணவனை எண்ணி எப்போது வருவாரோ என்று ஏங்கி வாட்டமுற்று, அணிகலன்கள் அணியாது, கோதை முடியாது, அழகு படுத்தாது வீட்டில் கவலையுற்று கணவன் முகம் எதிர்நோக்கி யிருப்பது மாண்பாகும். இது மரபும் கூட. இதே போல மாதவியும் வருந்துகிருள்.

கோவலன் பிரிந்து சென்றதும் மாலைக்காலம் வருகிறது. பிரிந்தாரை வாட்டும் மாலை, மாதவியையும் வருத்துகிறது. பிரிந்து சென்ற ஏக்கத்தில் யாதும்

புனைந்து கொள்ளாதவளாய் வருந்திப் புலம்பிக் கையற்று வாட்டமுறுகிறுள் என்பதை இளங்கோ!

"பசந்த மேனியள் படருறு மாலையில்" என்று கூறுகிறுர். இவ்வாறு வாட்டமுறும் மாதவி கணிகையர் குலத்தில் பிறந்தவள். தன் குலப் பண்பிற்கேற்ப கோவலனை மறந்து வேறொரு ஆடவனைத் தன் நாயகனுகத் தேர்ந்தெடுத்திருக்கலாம். அல்லது இச்சைக்காகப் பல ஆடவர்களின் நுகர்வுப் பொருளாக ஆகிப் பொருள் ஈட்டி யிருக்கலாம். கலையரசி வேறு கலைஞர்களை நாடியிருக்கலாம். கலையின் பெருமையாக தன்னலம் கருதியிருப்பாளேயானுல், கோவலன் பிரிந்து சென்றதும் இந்திர விழாவில் நடனமாடி யிருக்கலாம். அரசனது பெரு மதிப்பைப் பெற்றிருக்கலாம். குலத் தொழிலை நிலை பெறுத்த மகள் மணிமேகலையை 'அவ்வழியே' செலுத்தி யிருக்கலாம். அவ்வாறெல்லாம் மாதவி செய்யாளாய், நினையாளாய், கோவலன் ஒருவனே தன் கணவன் என்ற நிலையில் வாழ வேண்டும் என்ற பண்பைக் கொண்டவள். அவள் வேறு யாரையும் நாடும் பரகதி யிழக்கும் பாவையல்ல. பொருளுக்காகத் தன் வாழ்வை கோவலனிடம் ஒப்படைத்தவள் அல்ல. பொருள் ஒன்றைக் கருதி யிருப்பாளேயானுல் குல முறையின் வழியே சென்றிருப்பாள். குல முறைக்கு மாருகச் செல்லும் பண்பை ஏற்றிருக்க மாட்டாள். கோவலனையே எண்ணி வாட்டமுற்று வாழ்வைத் தூய வாழ்வாக மாற்ற முயற்சித்திருக்க மாட்டாள். அற நெறியிற் செல்லத் துணிந்து பௌத்தப் பள்ளியை அடைந்து துறவறத்தை மேற்கொண்

டதே, அவள் தூய வாழ்விற்கு எடுத்துக் காட்டு. தன்னை மட்டு மல்லாது, தன் மகள் மணிமேகலையையும் அற நெறியிற் செலுத்த அவள் செய்த முயற்சி அவளின் பண்பை வெளிப்படுத்துவதாகும். மாதவி தூய பண்பின் வழியே இல்லற மாண்பைக் கொண்ட மாதரசி என்பதை இளங்கோவடிகள் விளக்குகின்றார்.

"மாலைவாரா ராயினும் மாணிழை
காலை காண் குவ மெனக் கையறு நெஞ்சமொடு
பூ மலர் அமளி மிசைப் பொருந்தாது வருந்தினள்"

பூமலர் அமளி மிசைப் பொருந்தாது வருந்தினள், என்பதாக எடுத்துக் கூறும் சிறப்பு அவளது பொறுமையின் எழிலையும் கோவலனிடம் கொண்டுள்ள பேரன்பின் திறத்தையும் அவனிடத்தில் வைத்துள்ள நம்பிக்கையையும் விளக்குவதாகும்.

"குல விளக்கு"

மாதவி குலம் விளங்க வந்த குல விளக்கு என்பதற்குச் சான்றாக, கோவலன் இறந்த பின் தன் வாழ்வைத் துறவு வாழ்வாக மாற்றிக் கொண்டமையே ஒரு சிறப்பான செயலாகும். கோவலன் பிரிந்து சென்றதும் இந்திர விழாவில் நடனமாட மறுத்து தன் கணவரின் பெருமையை நிலை நாட்டப் பாடுபட்டபோது, கணிகையர் குலமே எதிர்த்தது. மாதவியையும் சித்திராபதியையும் ஏசியது. சிறிதும் மனம் தளராது, குலப்பண்பிற்கேற்ப நடக்க மறுத்து தூய பண்பை நிலைநாட்டப் பாடுபட்ட மாதவி குலம் விளங்க வந்த குல விளக்கு என்பதில் ஐயமில்லை.

தன்னோடு இப்பண்பு அழிந்து போய்விடக்கூடாது என்று எண்ணித் தன் மரபையும் வழிநிற்கச் செய்தவள் மாதவி. குலத்தை எதிர்த்து குணமேறி நின்ற குன்று விளக்கு. அந்த விளக்கு அணைந்து விடக்கூடாது என்று கவலை கொண்டு மகள் மணிமேகலையையும் தன் வழி நிற்கச் செய்தவள். மாதவியின் தாய் சித்திராபதி மணிமேகலையை, தங்கள் குல முறைப்படி வாழ்விக்கக் கருதி உதயகுமாரனிடம் ஒப்படைக்கப் பாடுபட்டாள். அதையறிந்த மாதவி தாயைக் கண்டித்து தன் மகளைப் புத்தபிரானுக்கு அளிக்கும்படி வேண்டுகிறாள். இதை இளங்கோவடிகள் :

" மாதவி மடந்தை நற்றாய் தனக்கு நற்றிறம்
படர்கேன், மணிமேகலையை, வான்துயர்
உறுக்குங் கணிகையர் கோலங் காணாது
ஓழிக எனக் கோதைத் தாமம் குழலொடு
களைந்து போதித்தானம் புரிந்தறங் கொள்ளவும் "

என்று கூறியதாகக் கூறும் சிறப்பு மாதவியின் குணப் பண்பை எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது.

இத்தகைய அன்புச் செல்வியை குணப்பண்பேற்ற குலவிளக்கு என்று கூறுவதில் தவறில்லை. கணிகையர் குலத்திலே பிறந்து, வளர்ந்து தன் குலப் பழக்கத்தை மாற்றி சமுதாயத்தையே எதிர்த்து ஒப்புயர்வற்ற தன்மையை நிலைநாட்ட வேண்டுமென்றால் நெஞ்சிலே உரமும் நேர்மைத்திறமும் வேண்டும். பாரதி கூறும் புதுமைப் பெண்ணாய், புரட்சிப் பெண்ணாய், புத்துலகு காண விழையும் பெண்ணாக, இளங்கோவடிகள், மாதவியை நம்மிடையே உலவ விட்டிருக்கிறார். பாரதியின் வாக்கிற்கிணங்க மாதவி மாண்புறு பெண்ணாய், குலவிளக்காய் நின்று நிலவும் பேற்றைச் சிலப்பதிகாரத்தில் பெற்றுள்ளாள்.

4. பிடியின் மாண்பு

மெய்ப்பாட்டு உணர்வு, உயர்திணை மக்கட்கு மட்டுமல்லாது அஃறிணைப் பொருள்களிடத்தும் தோன்றுவதாகும். உலகத்தில், அஃறிணைப் பொருளாகிய விலங்குகளும் மனிதர்களைப் போலவே எல்லாவற்றையும் அறியும் ஆற்றல் பெற்றனவாக இருக்கின்றன. நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்ற எட்டும் மெய்ப்பாடு என்று தொல்காப்பியர் கூறுவார். இதுபோல இன்னும் பிற முப்பத்திரண்டும் உள என்றும் கூறுவார். நாணம் என்ற மெய்ப்பாடும் அவற்றுள் ஒன்ருகும்.

கண்ணினுலும், செவியினுலும் நன்ருக அறிந்து கொள்ளும் அறிவுடைய மக்கட்கல்லது, மெய்ப்பாட்டுப் பொருள் கொள்ளுதல் முடியாதாகும் என்பதை

" கண்ணினும் செவியினும்
திண்ணிதின் உணரும்
உணர்வுடை மாந்தர்க்
கல்லது தெரியின்
நன்னயப் பொருள்கோள்
எண்ணருங் குரைத்தே "

(தொல்காப்பியம்)

என்று தொல்காப்பியர் வரையறுத்துக் கூறுவாராயினர், ஆறறிவு உயிர்களே எல்லாவற்றையும் நுகரும் ஆற்றல் உடையன என்று தொன்று தொட்டு அறிந்ததாகும்.

" மக்கள் தாமே ஆறறிவு உயிரே, பிறவும் உளவே
அக்கிளைப் பிறப்பே " (தொல்காப்பியம்)

என்பது சூத்திரம். ஆனால் அதேபோல் தொல்காப்பியர் ஆறறிவு படைத்த விலங்குகளும் உள்ளன என்பதை

" ஒருசார் விலங்கும் உளவென மொழிப "

என்று கூறியிருக்கும் சிறப்பு நோக்கி, உரை எழுதிய இளம் பூரணர் ஆறறிவுடைய விலங்குகளும் ஒரு சில உள்ளன. அவைகள் கிளி, குரங்கு, யானை முதலியன என்று எழுதி விளக்கியுள்ளார். இந்த விலங்குகள் மனிதர்களைப்போல உலகத்தில் எல்லாவற்றையும் நுகரு பவைகள், மனிதர்கள் எந்தப் பழக்கத்தைக் கைக் கொண்டுள்ளார்களோ அந்தப் பழக்கத்தையே இந்த விலங்குகளும் கைக்கொண்டுள்ளன. உயர் திணையைப் போலவே கிளி, குரங்கு, யானை முதலிய விலங்குகள் மதிக்கப்படுகின்றன. இன்று நாம் கிளி, குரங்கு, யானை இவைகளைப் பிள்ளை போலவே ஒரு சிலர் வளர்ப்பதைப் பார்க்கிறோம். மனித இனம் வாழ்வது போலவே குரங்கும் யானையும் வாழ்கின்றன.

நாம் ஒன்றைச் சொல்லிக் கொடுத்தால் கிளி அப்படியே சொல்லும் தன்மை படைத்தது. இசையின் தன்மையைப் புரிந்து பாடவும் செய்யும் கிளி. கிளியின் ஒலியே, இசை இசைப்பது போல அமைந்திருப்பதைப் பார்க்கலாம். அத்துடன் கிளி உணர்வு உடையது. பாரியின் பறம்புமலை, முற்றுகையிடப்பட்ட போது, கபிலர் கிளிகளைப் பழக்கி, நெடுந்தூரம் அனுப்பி உணவு கொண்டு வருமாறு செய்தார் என்பதை நாம் புறத்திலே காண்கிறோம்.

அடுத்து, இயற்கை சூழ்நிலையையே, பின்னணியாக வைத்து, அங்கு நிற்கும் மரம், செடி கொடிகளின் எழிலுக்குத்தக, மயிலை ஆடு மகளாகவும், குயிலைப் புரிந்து பாடும் பாடு மகளாகவும் ஏனையவைகளை அத்துடன் இயைந்து பாடும் கருவிகளாகவும், இறுதியில் மந்திகளைப் பார்வையாளர்களாகவும் வைத்து ஒரு நாடக அரங்கையே அமைத்துக் காட்டுகிறுர் ஒரு புலவர். மற்றொரு புலவர் "நதியை"யே பார்வையாளராக அமைத்துக் காட்டும் சிறப்பு நம்மைக் கற்பனை உலகிற்கு இழுத்துச் செல்கிறது. பின்னொரு புலவர் "குவளை மலர்களை"ப் பார்வையாளராக அமைத்துக் காட்டுகிறுர். ஆனால், விலங்கினத்தில் 'குரங்கு' மட்டும் புலவர்களால் உவமைக்கு எடுத்தாளப்படுகிறது. ஆடலரங்கில், குரங்கு ஆடும் ஆட்டத்தையும், பாடும் பாட்டையும் கேட்டுப் பரவசமடையும் மக்கள் கூட்டமாக அங்கு அமைத்துக் காட்டப்படுகிறது.

இவைகளை நோக்கின், எல்லா விலங்குகளுக்கும் இத்தகைய தன்மை வந்துவிடவில்லை. எல்லா விலங்குகளும் புரிந்து, சுவைக்கும் பண்புடையவைகளாக இல்லை. புலவர்கள் ஒரு சில விலங்குகளையே உதாரணமாகப் பயன் படுத்துகிறுர்கள். அவைகள் தொல்காப்பியர் கூறும் சிறப்பிற்கு உகந்தவைகளாக உள்ளன. "கண்ணினும், செவியினும், திண்ணிதின் உணரும்", என்று கூறும் சிறப்பின் வழி, கிளி, யானை, குரங்கு முதலியவைகள், கண்ணின் வழியும், செவியின் வழியும் உணரும் தன்மை வாய்ந்தவைகள், உணர்ந்து அறிந்து நடக்கும் பண்புகளையும் தன்னகத்தே கொண்டுள்ளன.

ஆகவேதான் புலவர்கள், இலக்கியத்தில் உதாரணமாக எந்த விலங்கையும் கூருமல் கிளி, யானை, குரங்கு என்றிவற்றையே கூறுகிருர்கள். மனிதர்களைப்போல இயங்கும் தன்மையோடு மட்டுமல்லாது மெய்ப்பாட்டு உணர்வையும் கொண்டுள்ளன. நாணம் என்ற மெய்ப் பாட்டு உணர்வை நாம் மிகுதியாக மக்களிடத்திலே காண்கிருேம். அதிலும் சிறப்பாக மகளிரிடத்திலே காண்கிருேம். அதேபோல, யானையின்பாற் நாணம் புதைந்து கிடப்பதாகப், பல புலவர்கள் எடுத்துக் கூறும் சிறப்பை, நாம் பல இலக்கியங்களிலே காண்கிருேம். புலவன் தன் குறிப்பை, ஒரு பொருளின்மேல் ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்ற அணியாகும். யானையாகிய அஃறிணைப் பொருளும் நாணுகின்றது என்பதை முத் தொள்ளாயிரத்திலே, புலவர் எடுத்துக் காட்டுகின்ருர். "பெண்" இனமே, நாணும் தகைமைத்து, அது மனித இனமானுல் என்ன, விலங்கு இனமாளுல் என்ன, பெண் என்ற தன்மை, இயற்கையாகவே நாணத்திற்கு அடிமைப்பட்டது என்பதை, இலக்கிய நயம்படக் கூறும் சிறப்பு, உலகத்து இயற்கை நியதியை வரையறுத்துக் காட்டுவதுபோல் அமைந்து உள்ளது.

பெண்தான் நாணுவாள் அதேபோல பிடியும் நாணுகிறது என்பதை ஓர் ஓவியம்போல் தீட்டிக் காட்டு கிருர்.

ஒரு பெண் வீதியிலே நின்று கொண்டிருக்கிருள். எல்லோரும்தான் நின்று கொண்டிருக்கிருர்கள். ஆனல் அந்த ஒருத்திக்கு மட்டும் அத்துணை ஆவல், காரணம்.

அந்த நாட்டை ஆளும் மன்னன், சோழன், காவிரி புரந்து வாழவைக்கும் நாடன் யானை மீது வந்துகொண்டிருக்கிறான். மனதிலே கொண்ட மையலின் காரணமாக, மங்கை நல்லாள் பார்க்கத் துடிக்கிறாள். சோழனை ஏற்றி வந்தது பெண் யானை அது மிகவும் விரைவாகச் சென்றுவிட்டது. அதனால் அவள் மனமகிழ்வுடன், சோழனின் அழகைக் காண முடியவில்லை. ஆகையால் அவளுக்கு அந்த யானைமீது கோபம் வருகிறது. கண்ட படி திட்டி அந்த யானையை நோக்கி உனக்கு நாணமில்லையா? நீயும் பெண் யானைதானே? வெட்கமில்லாது சோழனைச் சுமந்து வருகிறாயே நீலப்பூமாலையை பொன்னிவளவன் அணிந்து வருகிறான். அந்த நீல மலர்க்குவியலைப் போல மேகக் கூட்டங்கள் சூழ்ந்த இந்தக் காவிரி நாட்டில் வாழும் பெண்களின் இயல்பைக் கற்பின் பெருமையை உணர்ந்து, அச்சமற்று நாண மில்லாது தூக்கி வருகிறாயே நீயும் ஒரு பெண்ணா என்று கூறுகிறாள். இதை ஓர் புலவன்

"நீள் நிலத்தார் வளவன் நின்மேலான் ஆகவும்
நாணுதே என்றும் நடத்தியதால்—நீள்நீலம்
கண்தன்மை கொண்டு அலரும் காவிரிநீர் நாட்டுப்
பெண்தன்மை அல்ல பிடி." (முத்தொள்)

என்று எடுத்துக் கூறிப் பிடியின் நாணும் தன்மையை எடுத்து விளக்குகின்றார். மற்றொரு இடத்தில்

பிடிமுன்பு பொல்லாமை நாணிப் புறங்கடை நின்றதே
கல்லார்தோள் கிள்ளி களிறு (முத்தொள்)

என்று எடுத்துக் கூறுகிறார். நாணத்தின் தன்மையை மட்டும் எடுத்துக் கூறவில்லை. இலக்கிய நயத்தையும் எடுத்துக் கூறுவதாகும்.

இதேபோல புறநானூற்றில் ஓர் காட்சியைக் காண்கிறோம்..

சோழன் நெடுங்கிள்ளிக்கும் நலங்கிள்ளிக்கும் நீண்ட நாட்களாகப் பகைமை உண்டு. ஒரு சமயம் நலங்கிள்ளி ஆவூரை முற்றுகையிட்டான். அப்போது ஆவூரை அரசு செலுத்திய நெடுங்கிள்ளி முற்றுகைக்கு அஞ்சி மதிலை அடைத்து உள்ளிருந்தான். அப்போது கோவூர் கிழார் சென்று, நெடுங்கிள்ளிக்குச் சில கருத்துக்களை எடுத்துக் கூறி உணர்வு வருமாறு செய்கிறார். நெடுங்கிள்ளி நாட்டின்கண் நிகழும் நிகழ்ச்சிகளை, அவலநிலையை எடுத்துக் கூறுகின்றார்.

"கரியபிடியினது ஈட்டத்தோடு பெரிய கயத்தின் கட்படியாவாய், நெல்லையுடைய கவளத்துடனே, நெய்யால் மிதித்து திரட்டப்பட்ட கவளமும் பெறுவாய், திருந்திய மருங்கையுடைய வலியகம்பம் வருந்தச் சாய்ந்து நிலத்தின் மேலே புரளும் கையை யுடையவாய் வெய்தாக உயிர்த்துச் சுழலும் யானை உறுமேருபோல முழங்கவும்'' மன்னவா! நீ நாணாது மதிலின் உள்ளே இருப்பது வீரமாகுமா?

" அறவையாயின் இனிதெனத் திறத்தல்
மறவையாயின் போரொடு திறத்தல்'' (புறம்)

என்ற கருத்துக்களைப் புலவர் நயம்பட,அரசன் செவியகம் புகுமாறு, உணர்வு பெறுமாறு, மக்களின் உள்ளக் கிடக்கையை எடுத்துக் கூறுமுகமாக, அஃறிணைப் பொருள்கள் வருந்த நாணமடைய, கவலையற்று நீ வாழ்வது நீதியாகாது, என்பதையும் உணர்த்துகிறார்.

மதில் அடைபட்டதால், போக்குவரத்து இல்லை. உணவு கொண்டுவர முடியவில்லை. ஆகவே யானைகள் உணவு கிடைக்காது பிளிறின. குழந்தைகள் அழுதன என்ருலும், பாரியது பறம்பு அடைபட்டபோது, பல நாட்களுக்கு உணவு இருந்து, பின் முற்றுகை நீட்டித்த நிலையில் மக்களும் படையும் வருந்தின. அந்த நிலையையும் சரிசெய்ய கிளிகளைப் பயன்படுத்தினர் என்பதை அறிகிரோம். அப்படியும், நெடுங்கிள்ளியின் நாட்டுமதில் நீண்ட நாட்களுக்கு அடைபடவில்லை. ஓரிரு நாட்களே முற்றுகை, குறைந்த நாள் முற்று கைக்குக்கூட அவனது மதிலகவரைப்பில் உணவு இல்லையென்ருல், காவிரி பாயும் நாடாகாது, அன்றுமட்டும் உணவில்லாது வருந்தும் நாடாகாது. அவனது ஆட்சி முழுதுமே வறுமையுடன் வாழ்ந்த மக்களைக் கொண்ட நாடாகும் என்றும் நெடுங்கிள்ளி தான்மட்டும் வாழ்ந்து, மக்களைப் போற்ருது, அவர்களைப்பற்றிக் கவலையுமுருது ஆட்சி செலுத்தியவனுக வாழ்ந்திருக்க வேண்டும். அதையே புலவர் ஓரிடத்தில் நயமாக “இங்கு இனிதிருத்தல் இன்றைதம்ம” என்று கூறி விளக்குகிருர்.

மற்றும், மன்னவன் காட்சிக்கு எளியனுய் இருப்பானேயானுல் குடிகளும் அஞ்சி, அழையாமலும் மன்னனையும், ஆட்சியையும், காக்க மாற்ருருடன் போர் தொடுக்க விரைந்து வருவர். பகைவர்கள் முற்றுகையிட்டாலும், தகர்த்தெறியும் தன்மையுடன், வீறுகொண்டு எழுவர். அந்த நிலையை நாம், அதிகமான் என்ற குறுநில மன்னனிடம் காண்கிருேம். “எறிகோலுக்கு அஞ்சாது சீறிவரும் பாம்புபோல, போருக்கு அஞ்சாது, சீறிவரும்

இளைஞர்களைக் கொண்டது அதிகமான் நாடு'' என்று ஔவையார் கூறுவதிலிருந்து மக்களின் மனப்பண்பும், திண்மையும் வெளிப்படுகின்றது. அதுபோல் நாம், நெடுங்கிள்ளியிடம் எத்தகைய சிறப்பையும் காண வில்லை. மக்களைப்பற்றி எண்ணாது அரண்மனையில் இனிது இருந்தான் என்ற நிலையைத்தான் காண்கிறோம் ஆகவே நெடுங்கிள்ளிக்கு, நாணும் தன்மையில்லை என்பதை அறிய வாய்ப்பாகப் புலவர், அவனது நாட்டு யானையின் உணர்வை எடுத்துக் காண்பிக்க முற்படு கிறான். மக்களுக்கு உணவு இல்லையென்றாலும், படை களுக்கு உணவு இல்லாமல் இருத்தல் சிறப்பாகாது. அந்நிலையில், யானை, குதிரை முதலிய படைகளுக்கு உணவு கொடுக்க முயற்சித்தலே, போர்க்கால முறை யாகும். அப்படிக் கொடுத்தாலும் மானத்துடன் வாழ முற்படும் மனிதர்களும், விலங்குகளும் உண்ணமாட் டார்கள்.

தன் மானம் கருதும், மனிதர்கள் நாணி, தண்ணீர் கூட அருந்தார் என்பதை சேரன் கணைக்கால் இரும் பொறையின் பண்பிலிருந்து அறிந்து கொள்ளுகிறோம், அதே போல் புலி எவ்வளவு பசியாக இருப்பினும், தன்னால் வீழ்த்தப்பட்ட விலங்கு, இடதுபுறம் விழுமே யானால் அதை உணவாக்காமல், தன் வீரத்திற்கு நாணி உணவு உண்ணாது என்பதையும் அறிகிறோம். இந் நிலையில், தனக்கோ, நாட்டிற்கோ, தன்னை வளர்த்த பாகனுக்கோ, அரசனுக்கோ, துன்பம் வந்துழி, யானை, நாணி, வெய்துயிர்த்துக் கலங்கி, பிளிறும் பண்பைக் கொண்டது. அழுது புலம்பி அரற்றும் உணர்வைக்

கொண்டது. இதை நாம் கம்பரது காப்பியத்திலே காண்கிறோம். இராமன் நாட்டை விட்டு காட்டிற்குப் போகிறான், அப்போது, "ஆவும் அழுதன, கன்றும் அழுதன, யானையும் அழுதன" என்று கூறுகிறார்.

ஆகவே, யானை, அதிலும்பிடி நிலையிழந்து கவலையுறும் காட்சியை நாம், புறநானூற்றிலே காண்கிறோம். புலவர் கோவூர் கிழார் கூறும் நயத்திலிருந்து அறிந்து கொள்ளுகிறோம். முன்பு கூறியது போல, யானைகள் நாணும் தன்மையன என்பதை, மன்னவன், உயர்திணையாகிய அரசன் மற்றவர்களைப் பற்றி எண்ணாது இருக்க, அஃறிணைப் பொருள்கள், மாற்றாரது படையெடுப்பைக் கண்டு நாணுகின்றன. உணவு உண்ணாமல் வருந்திக் கையற்றுப் புலம்புகின்றன. ஆனால் நாண வேண்டிய அரசன் நாணாது மகிழ்வுடன் இருக்கும் தன்மையை அறிவுறுத்துவான் வேண்டி, பகைவர்கள் முற்றுகையிட அது கண்டு மன்னன் அஞ்சாத நிலையில், யானைகள் அஞ்சி, மன்னன் உணவு உண்டு இனிதிருக்க யானைகள் உணவு உண்ணாது கையற்றுப் புலம்ப மன்னன் குளித்து மகிழ, யானைகள் கயம்படியாவாய், தானிருந்த நிலைகளிலிருந்து புரண்டுகையற்று வெய்துயிர்த்தன என்ற காட்சியை எடுத்துக் கூறி, யானைகள் உணவு கிடைக்காமல் வருந்தவில்லை, உணர்வு மிகுதியால் நாணமடைந்து, வருந்திப் புலம்பின, என்பதைப் படிப்பவர்கள் அறிந்து கொள்ளுமாறு குறிப்பால் உணர்த்திச் செல்லும் சிறப்பு, நம்மை புறத்தினுள்ளே ஆழ்த்துவதாகும்.

5. வீரச்சுவை

"மன்னன் எவ்வழி அவ்வழி மக்கள்" என்ற நிலையைக் காண்கிறோம். முடியாட்சிக் காலத்தில் மன்னனிடத்தில், மக்கள் கொண்டுள்ள பற்றையும், பிடிப்பையும் நாம் சங்க இலக்கியங்களிலும், இடைக்கால இலக்கியங்களிலும் அறிய வாய்ப்புளது. 'மன்னன் முதற்றே மலர்தலை உலகம்' என்பது, ஆன்றோர் வாக்கு. மன்னனை முதலாகக் கொண்டு நாடு இயங்கிற்று. அவன் ஆணையிடுவானேயானல் அடிபணிய மக்கள் காத்திருந்தனர். ஆனல் சங்ககால மன்னர்கள் தங்கள் ஆட்சியை மக்கள் விரும்ப வேண்டுமென்று எண்ணி நல்லாட்சி நடத்த பாடுபட்டுள்ளார்கள். செங்கோன்மை திரியாது ஆளவேண்டுமென்று அரும்பணி புரிந்து தங்கள், உயிரையும் விடுத்துள்ள மன்னர்களையும் இலக்கியங்களில் காண்கிறோம்.

பாண்டியன் நெடுஞ்செழியனது கூற்று நம்மை மெய் சிலிர்க்க வைப்பதாகும். உணர்ச்சியற்றவர்கள் கூட உணர்ச்சிவயப்பட்டுப் போருக்கு எழ முற்படுவார்கள். நாட்டைக் காக்க முன் வருவர். தனி நிலையில் நெடுஞ்செழியன் கூறுகின்ற வஞ்சின மொழி, நம்மை வீரமூட்டுவதாகின்றது.

"பகைவர்களது முரசத்தைக் கைப்பற்ருவிடில், எனது மக்கள் செந்நிழல் காணது ஒழிவார்களாக. மாங்குடி மருதன் முதலிய புலவர்கள் பாடாது ஒழிவார்

களாக, என்று கூறும் சிறப்பு, மன்னன் ஆட்சி செலுத்தினலும், மக்களது உள்ளக் கருத்து வழி, அன்பின் பிடிப்பிலே ஆட்சி செலுத்தியுள்ளான் என்பதை புறத்திலே காண்கின்ருேம். அடுத்தாற் போல பாண்டியன் அறிவுடை நம்பி.

"என்னை எனது மகளிர் முயங்காது பரத்தையர் முயங்குவார்களாக" என்று கூறிப் போருக்கு எழுகின்ருன். மன்னன் என்ற தகுதி இல்லாது எனது வீரத்தைப் பழிக்கட்டும். மாற்றரசர்கள் என்னை அடிமைப்படுத்தி, நாட்டை அடிமைப்படுத்தி, மக்களைத் துன்பத்திற்குள்ளாக்குவதை விட, இறப்பதே மேல் என்ற வீர உணர்வின் காரணமாக வஞ்சினம் கூறிச் செல்கிருன்.

சேரன் கணைக்கால் இரும்பொறையின் வீர மொழியும் நமது உள்ளத்தைப் பிணிப்பதாகும்.

சிலப்பதிகாரத்தில், சேரன் செங்குட்டுவன், கூறிச் செல்லும் வீர உரை அவனது போர்த்திறமையையும், வலிமையையும் காட்டுவதாகும்.

மனேன்மணீயத்தில் ஆசிரியர் ஜீவகன் வாயிலாக வீர உரை கூற முற்படுகிருர். போருக்குத் திரண்டு எழுந்த கூட்டத்தைக் கண்டு, ஜீவகன்,

"இத்தனிப் போரில் நீவிர் ஏற்றிடும் காயம் செயமாது உமக்கு முத்தம் இட்டு அளித்த முத்திரையாகும்.

போரின் புண்ணும் ஒரு புண்ணே, அது புகழின் கண்ணே என்றும்

"இவ்விகழுடம்போ மெய், புகழுடம்பு அல்லவோ மெய்" என்றும், கூறுகின்ற சிறப்பு மன்னர்களது வீரத்தையும், மக்கள் கொண்டுள்ள போர் விருப்பையும் படம் பிடித்துக் காட்டுவதாகும். மக்கள் மன்னனிடத்தில் மதிப்பு வைக்கவில்லை என்ருல், நாட்டில் பற்றில்லை என்பதுதான் பொருளாகும். சங்ககாலத்தில் மக்கள் மங்காத, ஒளியுடன் வாழ்ந்தார்கள் என்ருல் மன்னன் மக்களுக்கு முறை செய்ததே காரணம். காட்சிக்கு எளியனுய், கடுஞ்சொல் அல்லனுய் வாழ்ந்ததால் மக்கள் என்றும் மன்னனிடம் மதிப்புக்கொண்டு இட்ட பணியைச் செய்யக் காத்திருந்தனர். முடி ஆட்சியும், குடியாட்சி போலவே நடந்தது. மன்னர்களுக்கும் மக்களுக்கும் இடையே, வேறுபாடு இன்றி நாட்டின் பெருமையை நிலைநாட்ட முற்பட்டார்கள். இதை நாம் புறநானூற்றில் காண்கிருேம்.

ஔவையார் அதியமானின் வீரர்களைப்பற்றிக் கூறும்பொழுது வினு எழுப்பிய மன்னன் நடுங்கும் நிலையில், "எம் நாட்டில் அடிக்கும் கோலுக்கு அஞ்சாது எதிர் மண்டிச் சீறும் அரவம் போன்ற இளைய வலிய வீரரும் உளர் என்றும், மன்றத்தில் கட்டித்தொங்கும் முழவில்தானே காற்று வீசியதனுல் ஒலி எழுமேயானுலும், அது போர் முரசின் ஒலியென்று, அஞ்சா நெஞ்சத்துடன், போர்க்களம் நோக்கிச் செல்லும் மள்ளர் கூட்டமும் உளது என்பதை

'பொருபடை வேந்தே எறிகோல் அஞ்சா
அரவின் அன்ன சிறுவல் மள்ளரும் உளர்
அதா அன்று பொதுவில் தூங்கும்
விசிஉறு தண்ணுமை வளிபொரு

தெண்கண் கேட்பின் அதுபோர் ஒலி
என்னும் என் ஐயும் உளன்" (புறம்)

என்று கூறுவாராயினர்,

இத்தகைய நிலையை நாம் முடியாட்சி நடைபெற்ற சங்ககாலத்திலே காண்கிறோமென்றால் அதைவிட இரு மடங்கு துள்ளி எழுந்து போர்க்களம் செல்லத் துடிக்கும் இளைஞர்கள் கூட்டத்தை இன்றும் காண்கிறோம். நம் நாடு பழம்பெரும் நாடு, வீரர்களைக் கொண்ட நாடு, எழுச்சியுடைய நாடு, பொங்கி எழும் பாரதம், அன்றிலிருந்து இன்றுவரை வீரம் செறிந்த நாடாகவே காட்சியளிக்கிறது. மன்னன் போருக்கு எழுவானேயானால் மக்களும் துள்ளி எழுந்து செல்வார்கள் என்பதை" என் ஐயும் உளன், என்றும் அதைக்காட்டிலும் அரவுபோல சீறி எழுந்து வெற்றியைத்தேடி நாட்டைப் பாதுகாக்கக் கூடிய மள்ளர் கூட்டமும் உள்ளது என்றும் வெகு நயமாக ஔவையார் கூறிச் சிறப்பிக்கின்றார்.

போர் என்றால் பின்னிடாது போர்க்களத்தில் வீர சுவர்க்கம் அடைவதே தம் வாழ்வின் பெருமையாகக் கொண்டு வாழ்ந்துள்ளார்கள். உயிர் பெரிதல்ல. மானமே பெரிது. உயிரைக் கொடுத்தாவது புகழை நிலை நாட்டுவோம் என்று எழுந்த வீரர்களைக் கொண்டது நம் நாடு என்பதை செயங்கொண்டார், முதற்குலோத்துங்கன் படை வீரர்களின் போர் வேட்கையை, குறிப்பிடுகையில்

"அலகில் வெற்றியும் உரிமையும் இவையென
அவயவத்தினில் எழுதிய அறிகுறி
அவையெனப் பல வடுநிரை உடையவர்"

(கலிங்கத்துப்பரணி)

என்று, படையின் இயல்பை எடுத்துக் காட்டுகிருர். நாட்டைக் காப்பாற்றுவதே தங்கள் கடமை, மன்ன னுக்கு வெற்றியைத் தேடிக் கொடுப்பதே தங்கள் கோட்பாடு, விழுப்புண் பெறுவது தங்கள் உரிமை, என்று எண்ணி வாழ்ந்த வீரர்களின் பண்பையும், வலிமையையும், எடுத்துக் கூறுகிருர். முன்வைத்த காலைப் பின்வைக்க எண்ணுத வீரர்கள் என்றும், கைம்மாருக மண் உலகும், விண் உலகும் கிடைத்தால் கூடப் பெற விழையாதவர்கள் என்பதை,

> "அடிபுறக் கிடில் அமரர்தம் உலகொடு
> இவ்வுலகு கைப்படும் எனினும் அது ஒழிபவர்"
>
> (பரணி)

என்று கூறிச்செல்லும் சிறப்பு, முன்னேர்களின் வீரச் செயலை நினைவு படுத்துவதாகின்றது. வீரர்களது உரிமையைப்பற்றிக் கூறுகையில்

"உடல் எமக்கு ஒரு சுமையென முனிபவர் என்றும், "உயிரை விற்று, உற்புகழ் கொள உழல்பவர்" என்றும் கூறுகிருர்.

அனந்தவன் மனது படை வீரர்களைப்பற்றிக் கூறு கையில், புகழை அடைய தங்கள் உயிரையும் கொடுக்கத் தயங்கா மள்ளர்கள், வலிமைகொண்ட இளையர். கடலிலே எத்துணையோ மீன்கள் உள்ளன, ஆனல் கலங்கள் அவைகளைக் கண்டு அஞ்சுவதில்லை. மரக் கலங்களும், கலங்கும்படியாக சுருமீன் கூட்டம் கடலிலே வாழ்ந்து, வரும் கலங்களை கவிழச் செய்தும், மற்றய மீன்களை உணவாகக் கொண்டும், கடல் அரசனுகத்

திகழ்கின்றன. அத்தகைய சுறுமீன் இனம் போன்றவர்கள், அவனது படைவீரர்கள் என்பதை

"இசைபெற உயிரையும் இகழ்தரும் இளையவர்
எறி சுறவு இனம் எனவே" (பரணி)

என்று, கொல்லும் தன்மையுடைய சுறுமீன்களுக்கு உவமையாக, வலிமையைக் கூறி வீரத்தின் எழிலைக் காட்டுகிறார்.

தங்கள் உயிரையும் பொருட்டாக எண்ணாது போர்க்களம் சென்று வீர சுவர்க்கம் அடைவதே தங்கள் குறிக்கோள் என்று தமிழர் சமுதாயம் வாழ்ந்து வந்துள்ளது. போர் என்று கேட்டால் பொங்கி எழும் வீரர் கூட்டம், அஞ்சாநெஞ்சுடன் மாற்றாரை மண்டியிடச் செய்துள்ளது. போர் என்றால் மின்னொளிரும் நமது நாட்டில் ஆணையிட்டு அடிமைப்படுத்தாது விருப்புடனே சென்ற மாவீரர்களைக் கொண்டது நமது நாடு. போர்க்களம் நோக்கிச் சென்று, வெற்றி பெற்று வீர முழக்கம் செய்தவர்களையும் காண்கிறோம். உயிரிழந்து விண்ணுலகு சென்று, மனைவி மக்களைப் பரிதவிக்கவிட்ட மா வீரர்களையும் காண்கிறோம். நாடு செழிக்க, உரிமையை நிலை பெறுத்த பாடுபட்ட வீரர்களையும் காண்கிறோம். இவைகளை மாசுமறுவில்லா நிலையிலே இலக்கியம் காட்டுவதாகின்றது.

போர்க்களம் நோக்கிச் சென்ற தலைவன் உயிரிழக்கிறான். அச் செய்தி கேட்டுத் தலைவி வருந்தவில்லை. மகிழ்வு பூக்கிறாள். உயிர் போய் உடல் இருந்து பயன் என்ன என்று தன் வாழ்வை முடித்துக் கொள்ள

எண்ணாது, தனக்கு உறு துணையாக தலைவனுக்குப் பின் காப்பாற்றக் காத்திருக்கும் தன் ஒரே மைந்தனையும் போர்க்களத்திற்கு, மாற்றாருடன் போரிட, போர்க் கோலம் அணிவித்து, முத்தமிட்டு

"இத்தனிப் போரில் நீ சிந்தும் இரத்தம்
நின்று யுகம் பல சாற்றும்" (மனோன்)

என்று வாழ்த்துக் கூறி, வெற்றித் திலகமிட்டு வழி யனுப்புகிறாள்.

போர் முடிந்து அத்துணைபேரும் வீட்டிற்குத் திரும்புகிறார்கள். ஆனால் பிறந்த உலகிலிருந்து வந்த உலகிற்கே, வீரமகன் திரும்பிப் போய் விடுகிறான். போர்க்களத்திலிருந்து வந்த வீரர்கள், மைந்தன், களத்தில் இறந்து பட்டான் என்று கூறி அவளது மனதை அமைதியுறச் செய்ய எதிர் நோக்கி நிற்கிறார்கள். ஆனால் தாயோ கவலை கொள்ளவில்லை. மகனது நிலை அறிந்து உள்ளம் பூரித்து, உவகையில் நீந்தி, மகனது பெருமையை எடுத்துக் கூற முற்படுகிறாள்.

என் மகன் போரில் வெற்றி பெற்றுத் திரும்பி யிருப்பின், இறுதிக் காலத்தில் எந்தப் பிணியில் சிக்கி இறக்க நேரிடுகிறதோ? இவ்வுலகில் பிறந்தவர்கள் எல்லாரும் இறப்பதே நியதி. "பிறந்தவர் உறுவது பெருந்துன்பம்" "பிறவாதவர் உறுவது பெரும் பேரின்பம். அம் முறையில் அல்லாது இவன், நாட்டைக் காப்பாற்றி, மன்னனுக்கு வெற்றியைத் தேடிக் கொடுத்து உயிர் நீத்தனன். வெற்றியுடன் திரும்பி

யிருப்பின், மீண்டும் போர் எழூம் காலத்தை நோக்கி யிருக்க வேண்டும். போர் எழுவது எப்போது? எந்தப் போர்க்களத்திற்குச் செல்ல வாய்ப்பு உள்ளது. எப்படி அவன் தன் உரிமையைப் பெறுவது.'' ஆகவே 'வீர சுவர்க்கம்' என்ற பெருமைக்கு உரியவனுகி விட்டான். பிணியால் இறக்க நேரிடின் நான்கு கால்கள் உள்ள பாடையிலே கிடப்பித்து, வெள்ளாடை போர்த்தி இடுகாட்டிற்குக் கொண்டு சென்று எரியூட்ட வேண்டும். அதிலிருந்து தப்பி விட்டான் என் மகன் என்று பெருமிதத்துடன் கூறி மகிழ்வதுடன் தன் கடமையையும் முடித்து விட்டதாகக் கூற முற்படுகிருள். இதை புறத்தில் ஔவையார், ஒரு வீரரின் பெருமையை அவன் தாய் கூறும் முறையில்

> '' கால் கழி கட்டிலில் கிடப்பி தூ வெள் அறுவை
> போர்ப் பித்திலது '' (புறம்)

என்று கூறிச் சிறப்பிக்கிருர். இதை வேறு எங்கும் நாம் காண முடியாது. நம் நாட்டு மங்கையர்களின் வீரப் பண்பும், செயலும் உள்ளமும் நம்மை வீர உலகிற்கு இழுத்துச் செல்லுகிறது.

வீரத்திற்கு ஆண்கள் மட்டும் உரியவர்கள் அல்லர், பெண்களும் உரிய இடத்தைப் பெறுகிருர்கள். தயங்காது வீரப் பண்பை ஏற்று வெற்றியைத் தேடிக் கொடுத்துள்ளார்கள் என்பதை இலக்கியம் கூறுவதாகின்றது. தலைவி கூறும் வீரச் சொற்கள் தாய் கூறும் வீரச்சொற்கள் உற்ருர் உறவினர்கள் கூறும் வீரச் சொற்கள் அனைத்தும் நாட்டின் பண்டை

உயர்த்துகிறது. மண் ஆசை கொண்டு அறிவிழந்து, படை கொண்டு வந்து நம்பிக்கைத் துரோகம் செய்ப வர்களை விரட்டச் சீறிப் பாய்ந்து செல்லும் மள்ளர் கூட்டம், அரவு போல அஞ்சாது எறி கோலை ஒடித்து, வெற்றியைத் தேடப் புறப்படுகிறார்கள் என்றால் அது மூதாதையர்களின் பண்பு வழியாகும். வீரமுழக்கமிட்ட வீரர்களின் மனப்பான்மையையும், போரிட விழையும் மள்ளர்களின் விருப்பையும் போற்றுவோமாக.

★

6. அறந்தரு சிந்தையோன்

"அறத்தான் வருவதே இன்பம்" என்ற அரும் பெரும் உண்மையை உணர்த்திய வள்ளுவர் கருத்திற் கிணங்கக் கம்பரும் தம் கதைத்தலைவனை நம்முன் அறம் தரு செம்மலாகக் காட்ட முன்வந்துள்ளார். "அறத்தி னூங்கு ஆக்கமும் இல்லை, அதனை மறத்தலின் ஊங் கில்லை கேடு" என்ற பொன்னுன வாக்கை மறந்து வாழ்ந்த மக்களை நாம் கண்டதில்லை. சான்ஞேர்கள் தம் வாழ்வில் ஒரு கடமையாகக் கொண்டுள்ள கொள்கை அறமாகும். அறம் தவறிய செயல்களைச் செய்ய முற்பட்டதில்லை என்பதை இலக்கியங்களிலே பரக்கக் காண்கின்ருேம். ஒருவருடைய வாழ்க்கைக்கு அறத்தை விட நன்மையானதும் இல்லை. அத்தகைய அறத்தைப் போற்ருமல் மறப்பதைவிடக் கெடுதியும் இல்லை என்ப தைக் கண்டுணர்ந்த பொறுமையின் செம்மல் தருமர், தன் நாடு, நகரம் அனைத்தையும் இழந்த நிலையில் தன் மனைவியின் மானம் பறிபோகின்ற நிலையிலும், தம் தம்பி மார்களை வேண்டும் காட்சி அறம் வழுவாப் பொறை யுடையோனின் பொற்பை வெளிப்படுத்துவதாக வில்லி யார் நமக்கு விளக்குகின்ருர். இதனைக் கம்பனது வாக் கிலும் காணமுடிகிறது. பழம்பெரும் காவியங்களாகிய இராமாயணமும், பாரதமும் தமிழ் நாட்டில் பரவியதுடன் மக்களின் மனத்தகத்தே மங்காது பதிந்து ஒளி விடுகின் றன. கம்பர் காவியம் போற்றுதற்குரிய முறையில் பல பாத்திரங்களைத் தன்னகத்தே கொண்டு மிளிர்கிறது. ஏனைய பாத்திரங்களைவிடக் கதைத்தலைவனுகிய இராமன்

கம்பரால் உயர்வு பெறுகிருன். இறைநிலையில் வைத்துக் கூறும் கம்பர் பாலகாண்டத்தில் இராமனின் பிறப்புப் பற்றி கூறுகையில் "அறந்தரு மூர்த்தி வந்து பிறந்துள் ளமையால்" என்று விளக்கும் சிறப்பு இனி உலகில் அறம் தழைக்கும், அறம் போற்றப்படும். அறத்தை யாராலும் வெல்ல முடியாது என்ற ஒப்பில்லாக் கருத் துக்களே விளக்குவதாகின்றது. அறத்திற்கு மூர்த்தி என்ற இராமன் விளிக்கப்படுகின்ருன். இராமனுல் அறம்பிழைத்தது என்பதையும், அறத்தை நிலைநாட்ட இராமன் பிறந்துள்ளான் என்பதையும், அறமாகிய தாய் இவ்வுலகில் நடைபெறப் போகும் கொடுமைகளை யும், அறம் தவறும் செயல்களையும் ஒடுக்க இராமனைப் பெற்றெடுத்துத் தந்துள்ளாள் என்று கொள்ளவும் இட மளிக்கின்றது. இராவணனுல் உலகிற்கும் முனிவர் களுக்கும் சான்ருேர்களுக்கும் எற்படப்போகும் இன்னல் களை ஒழிக்க அறம் இராமனுகிய மூர்த்தியைத் தந்துள் ளது என்ற கருத்தின் மூலம் பின் நடக்கப் போகும் நிகழ்ச்சிகளை முன் அறிவிப்பவர்போல் நமக்கு பல இடங்களிலே காட்டுகிருர்.

அறநெறியில் வாழ்வதன் பயனுக வருவதே இன்ப மென்றும் அறத்தோடு பொருந்தாமல் வருவன எல்லாம் இன்பமற்றவை, புகழற்றன என்று கொண்டும் வாழ்ந்த சமுதாயம் தமிழ்ச் சமுதாயமாகும். தமிழ்ப்பண்பிற்கேற்ப காப்பியம் செய்ய முற்பட்ட கம்பன் தனது காப்பியத் தலைவனை அறவழியின்பால் செலுத்துகிருன். உலகில் ஒருவர் உயர்வையும் குணத்தையும் மற்றவர்கள் புகழ வேண்டும். தன்னைத்தானே புகழ்ந்து கொள்ளுவது

தற்புகழ்ச்சியாகும். ஒருவரை மற்றவர் உயர்வாகவோ, புகழ்ந்தோ, கூறுவார்களேயானால் அதில் உண்மையும் உயர்வும் ஐயமின்றி அடங்கியிருக்கும். தெரிந்தவர்கள் புகழ்ந்தால் ஒரு வேளை விருப்பின் காரணமாகப் புகழ்வதாகும். அது சிறப்பாகாது. நண்பர்களைவிடப் பகைவர்கள் புகழ்வார்களேயானால் அதில் உண்மையை நாம் காணமுடியும். கற்றறிந்தவர்கள் தம்மிடமுள்ள கல்விச் சிறப்பால் யாரையும் மதித்துப் போற்றுவதில்லை. ஆனாலும்கூடத் திருவள்ளுவரைப் 'பொய்யில் புலவன்' என்று புகழ்ந்திருப்பதைக் காண்கிறோம். 'தண்டமிழ் ஆசான் சாத்தன்' எனக் கூறியிருப்பதையும் அறிகின்றோம். பகைவர்கள் புகழ்ந்த நிலையை நாம் காணவில்லை.

பகைவர்கள் பழிப்பார்களே ஒழியப் புகழ்வதில்லை. ஆனால் பகைவர்கள் இராமனைப் புகழ்வதாகக் கம்பர் கூற முற்படுகிறார். அந்தச் சிறப்பு நம்மையும் போற்றச் செய்கிறது. "ஒறுத்தார்க்கு ஒரு நாளை இன்பந் தானே பொறுத்தார்க்கு என்றும் இன்பம்" என்று தெளிந்த ஆன்று அவிந்து அடங்கிய சான்றோனாகிய இராமன் துன்பச் சூழலையும் இன்பச் சூழலாக மாற்றி ஆற்றி யிருக்கிறான். போருக்கு எழவில்லை. படை கொண்டு செல்லவில்லை. இராவணன் தன் அவையில் இராமனைப் பழித்து அவனுடைய மனைவி சீதையை நுகரவேண்டு மென்று தன் படைத்தலைவன், அமைச்சன், மைந்தன் முதலியோரிடம் கூறித் துடித்தெழுகிறான். பகைப்புலத்திற்குச் செல்லத் தூண்டுகிறான். அப்போது அமைச்சனான மாலியவான் இராமனைப் புகழ்ந்து கூற முற்படுகின்றான். பகைவர்கள் கூற்றி

லிருந்து நாம் உண்மை நிலையை அறிந்து கொள்கிறோம். யுத்த காண்டத்தில் மாயா சீதைப் படலத்தின் வழி கம்பர் கூறும் கருத்து நம்மையும் இராமன் பால் அடைக்கலம் சேரும்படி செய்கின்றது. முதல் நாள் இலக்குவனும் அவனது படைகளும் இந்திரசித்து ஏவிய பிரும்மாத்திரத்தால் மயங்கி விழ்ந்தனர். தன் தம்பி இலக்குவன் மயங்கி வீழ்ந்ததையறிந்த இராமன் ஆருத்துயரில் மூழ்க, இராவணன் பெருமகிழ்ச்சி கொள்கிறான். அறம் பிறழா இராமனுக்கு நேர்ந்த துன்பங்கள் மனத்தால் நினைத்த அளவில் மாறக்கூடியவைகள். இறைத் தன்மைபொருந்திய காரணத்தால் அனுமன் மருத்து மலையைக் கொணர்ந்து வீழ்ந்த வானரப் படைகளையும் இலக்குவனையும் உயிர்பெற்று எழுமாறு செய்து விட்டான் என்ற செய்தியை ஒற்றர் மூலம் அறிந்த இராவணன் தன் அவையைக் கூட்டி தனக்கு நேர்ந்த துன்பங்களையெல்லாம் கூறுகிறான். படைத்தலைவர்களை இழந்த ஆருத்துயர், தன்பக்கம் வலிமை குறைந்துவரும் மாண்பு, பகைவர் பக்கம் யாரும் இறவாதிருத்தல், பகைவர் இறந்தாலும் மீளவும் உயிர்பெற்று வரக்கூடிய வாய்ப்பு முதலிய செயல்களால் மனங்கலங்கி ஆலோசனை கேட்டான். இராமனை இறைவன்தான் என்று உணர்ந்த பெரியோர்கள் சீதையை இராமனிடம் ஒப்படைப்பதே மேல் என்று கூற, அதையும் ஏற்றுக் கொள்ளாதவனுகச் சீதையின்மேல் உள்ள அற்ப ஆசையின் காரணமாக எப்படியும் அறம் தவறிச் சீதையைக் கையாளவேண்டும் என்று எண்ணுகிற காரணத்தால் மற்றவர்களை நிந்தித்துத்தூற்ற முற்படுகிறான். அப்போது மதி நுட்பம் கொண்ட அமைச்சன் நமது அரக்கர் படையோ

அழிந்து விட்டது. இறந்தவர்கள் பலராவர். நம்மைத் தவிர எஞ்சி உயிர்வாழ்பவர்கள் சிலரே. அவர்களைப் போல நாமும் இறந்து ஒழியாது இப்பூவுலகில் வாழ வேண்டுமானுல், உயிர் பெற்றிருக்க வேண்டுமானுல் சீதையை இராமனிடம் ஒப்படைத்து நாமும் அறம்தரும் சிந்தையோரை அடைக்கலம் புகுதுமையா எனக் கூறு கிருன். இதனைக் கம்பன் மாலியவான் கூற்ருக,

> ''இறந்தவர் இறந்துதீர இனிஒரு பிறவிவந்து
> பிறந்தனம் ஆகிஉள்ளோம் உய்ந்தனம் பிழைக்கும்பெற்றி
> மறந்தனம் எனினும் இன்னஞ் சனகியை மரபின் ஈந்துஅவ்
> அறந்தரு சிந்தையோரை அடைக்கலம் புகுதுமையா''
>
> (கம்ப—மாயாசீதை)

என்று கூறுகிருர்.

இராமனின் அறம் நிறைந்த வாழ்வையும் பகைவர் களுக்கு அருளும் சிந்தையுள்ள பண்பையும் மாற்ருர் வாய்மொழியாகவே அறிகிருேம். கற்பின் பொற்புடைச் செல்வியை, அற முதல்வியைச் சிறைபிடித்துப் பெருந் தவறு செய்துவிட்டோம். எப்பழிக்கும் உய்வு உண்டு; அறம் தவறும் செய்கைக்கு உய்வு இல்லை. இராமனை நாம் பகைவர் என்று கருதாது அற முதல்வனென்று கருதி அவனை சார்வோமேயானுல் நமக்கு உய்வு உண்டு என்று கூறுகிருன். இக்கருத்தை அடிப்படை யாகக்கொண்டுதான் ''பகைவர்க்கு அருள்வாய் நல் நெஞ்சே-பகைவர்க்கு அருள்வாய் நல்நெஞ்சே'' என்று பாரதி கூறியுள்ளாரோ என்று நினைக்கத் தோன்று கிறது. மாலியவான் கூற்றை நோக்குமிடத்து அவன் அரக்கருள் ஒருவனுக இருப்பினும் சான்ருேர்கள் வரிசை

யிலே வைத்து மதிக்கக்தக்கவனுகின்ருன். அடைக் கலத்தின் உயர்வை வெளிப்படுத்தும் முறையில் உயர்ந் தவர்களிடம் அடைக்கலம் சேருவதில் குற்றமில்லே யென்றும் தாழ்ந்தவர்களிடம் அடைக்கலம் சேரின் பழி உண்டாகும் என்றும் கூறும் சிறப்பு போற்றுதற்குரியது. உயர் பண்பும் இறை நிலேயும் உடைய இராமனிடம் அரக்கர்களாகிய நாம் அடைக்கலம் புகுவதில் குற்ற மில்லே. இவ்வாறு பகைவர்கள் எடுத்தியம்பும் பண்பின் காரணமாக நாம் "அறந்தரு சிந்தையோன்" என்று கூறுவோமேயானல் தவறில்லே. விருப்பு வெறுப்பு இன்றி இறைவன் போல ஒரே நிலேயில் அகப்பற்று, புறப்பற்றுக்களேயும் விடுத்து ஞானிபோல இருக்கும் சிறப்பால் அறம்தரு செம்மல் மட்டுமல்ல தெளிந்த சிந்தையுள்ள இறைவனும் கூட.

அருள்நெறி

அறம் சிறப்பை அளிக்கும். வாழ்கின்ற உயிர்க ளுக்கு அறத்தை விட நன்மையானது வேறில்லே. இந் தப் பேருண்மையை அறிந்த அறந்தரு செம்மல். தன் வாழ்நாள் முழுதும் அறத்தின் வழியே நிற்கப் பாடு பட்டவனுவான். தனக்குத் துன்பம் வந்த நிலேயிலும் தளராத ஊக்கத்துடன், அற வழியில் நின்று காத்தருளி யவனுவான். ஒருவருடைய வாழ்க்கைக்கு அறம் நன் மையைக் கொடுப்பதாகும். ஆகவே அறத்தைப் போற்றி வாழவேண்டு மென்று கூறுவாரானர்கள். வள்ளுவ ரின் கருத்துக்களே அறிந்த கம்பர் தன் காப்பியத் தலேவ னின் பண்பை அவ்வழி எடுத்தியம்புகிருர்.

'இராமன்' என்ற தன்னிகர் இல்லாத் தலைவனைப் படைத்து அவனது பண்பை உயர்த்தப் பாடுபட்டுள்ளார். எதைச் செய்தாலும் செய்யும் வகையாலும் எந்த இடர்ப்பாடு நேர்ந்தாலும் செய்யும் செயலை விட்டு விடாமல் செல்லுமிடமெல்லாம் அறச் செயலைப் போற்றிச் செய்வதே அறந்தவறாப் பண்புடையாரது செயலாகும். அதே போல தன் காப்பியத் தலைவனை அற வழிப் படுத்திய நெறியை நாம் கிட்கிந்தைப் படலத்தில் காண்கிறோம்.

அறம் தவறிய வாலி தன் தம்பி சுக்ரீவனைக் கொல்ல முயற்சிக்கிறான். தன் குற்றத்தை ஒப்புக் கொண்டு தன் அண்ணன் பிலத்து வழியிலிருந்து வரவும் மன்னிப்புக் கேட்கிறான். குற்றம் புரிந்தவர் குற்றத்தை ஒப்புக் கொள்ளும் நிலையில் மன்னிப்பு அளிக்க வேண்டும். அது மன்னனது கடமையாகும். வாலி, சுக்கிரீவனைத் தம்பி என்று எண்ணாது, மக்களில் ஒருவன் என்று மதித்து பொது மக்களுக்கு வழங்கும் நீதியையாவது அவனுக்கு வழங்கியிருக்க வேண்டும். அவ்வாறு வழங்காது தம்பி என்ற பாசத்தையும் கருதாது கொல்ல முயற்சித்து போர் நிகழ்த்துகிறான். இது நீதி தவறிய முறையாகும். அறம் தவறிய செயலாகும். இந்நிலையில் இராமனிடம் அடைக்கலமாய் போய்ச் சேர்ந்து, சுக்கிரீவன் முறை வேண்டுகிறான். நெடிது வரும் வழி முதும் தன்னை வந்து சேர்ந்தவர்களைக் காக்கும் அறந்தரு செம்மல் இங்கும் சுக்கிரீவனுக்கு உதவுவதாக வாக்களிக்கிறான். அநுமன் வாயிலாக வாலியின் செயலைக் கேட்டு அறிந்து, அவன் சுக்கிரீவ

னுக்குச் செய்யத் துணிந்த துரோகச் செயலை எண்ணி, அவர் மனம் வருந்துகிறது. நடுவு நிலைமையிலிருந்து தவறுவது மன்னருக்கு அழகல்ல என்றும் அறம் தவறுவோர் வாழ்வது நீதியாகாது என்றும் உணர்ந்த இராமன், வாலியைக் கொன்று, சுக்கிரீவனுக்கு அரசுரிமையை வாங்கிக் கொடுக்கிறான்.

அரசுரிமையைப் பெற்ற சுக்கிரீவன் கார்காலம் முடிந்ததும் சீதையைத் தேடிச் செல்வதாக உறுதியளிக்கிறான். குறித்துச் சொன்ன காலம் வந்தும் அவன் வராதது கண்டு இராமன் மிகவும் வருந்திச் சீற்றம் கொள்கிறான். சொன்ன சொல் தவறுவது அழகல்ல. அவ்வாறு யாரும் தவறுவார்களேயானால், பிறர் சினம் கொள்ளுவது இயற்கை. இராமன், சுக்கிரீவனது நிலையை அறிந்து வர இலக்குவனை அனுப்பத் துணிந்து அவனிடம் தன் சீற்றத்தை வெளிப்படுத்துகிறான். இராமன் மிகுந்த சினம் கொண்டாலும் அறந்தவறு முறையிலேயே சுக்கிரீவனிடம் போய் நிலையை அறிந்துவருமாறு இலக்குவனுக்கு கட்டளை இடுகிறான். சீற்றம் அடைந்து கூறும் கடுஞ் சொற்கள் கூட இன்மொழிகளாகவே வருகின்றன. சுக்கிரீவனைப் பற்றிக் கூறுகையில்

"சீர்மையில் தீர்ந்தனன், அறம் மறந்தனன்
அன்பு கிடக்க நம் மறன் அறிந்திலன்
வாழ்வில் மயங்கினன்' (கம்ப—கிட்கிந்தை)

என்று கூறுகிறான்.

சுக்கிரீவன் சிறந்த ஒழுக்கத்தினின்றும் நீங்கி விட்டான். ஆகவேதான் அவனிடத்தில் இந்த அரிய பண்பு இல்லை என்று கூறுகிறான். காரணம் இராம

னுடன் இருக்கும்போது, ஒன்றறக் கலந்து, உயர் பண்புடன் ஒளிவிடும் தகைமை பெற்றிருந்தான். ஆகவே உடனிருக்கும்போது, ஒழுக்கம் தவறவில்லை. தற்போது தன்னை விடுத்து நீங்கியதும் ஒழுக்கம் தவற நேரிட்டு சமுதாயப் பழக்கமும், சேர்க்கையும், அவனை மயங்கிக் கிடக்கும்படி செய்து விட்டது என்று குறிப்பால் உணர்த்தும் சிறப்பு, நயமுடையதாகும். மீண்டும் இராமன் மனம் அமைதி பெருத நிலையில், தனக்கு உதவி செய்தவர்களுக்குப் பதில் உதவி செய்ய வேண்டுமே என்ற நன்றிச் செயலையும் மறந்து விட்டானே என்று கூறுகிருன். முன்பு நம்முடன் இருக்குங்கால் நன்றியறிதல் காரணமாக உரை பகன்ருன். உறுதியளித்தான். தற்போது நம்மை விட்டு நீங்கியதும் எல்லாவற்றையும் மறந்து விட்டானே என்று உள்ளம் வெதும்புகிருன். இச் சுக்கிரீவனுக்கு, நம் வீரச் செயலின் அருமையை எடுத்துக் கூறி, அழியும் நிலையற்ற வாழ்விலே மயங்கி இருக்கும் அவனை எழுப்பி வருவாயாக என்று கூறுகின்ற நிலை "மனத்துக் கண் மாசிலன் ஆதல்" என்ற வள்ளுவர் கூறும் கருத்துக்கு விளக்கமாகக் கம்பர், தனது காப்பியத் தலைவனை, பண்பும், அருளும், உடையவனுகப் படைத்துக் காட்டியுள்ளார்.

சினம் கொண்ட இராமன் இலக்குவனிடம், "சென்று மற்றவன் சிந்தையைத் தேர்குவாய்" என்று கூறுகிருன். அவனது கூற்று, உண்மை நிலையை எடுத்து இயம்புவதாகிறது. இராமனது அருளும் தன்மையையும், அடக்கத்தையும் காண்கிறோம். அறம்

தவறியவர்களைக் கொல்லுவதால் பாவம் இல்லை என்றும் அவ்வாறு செய்வது பழி பாவங்களிலிருந்து நீக்கும் செயலாகும் என்று கூறும்போது, தெளிந்த சிந்தையை எடுத்துக் காட்டுவதாகின்றது. அறத்தின் பண்பும், அன்பின் உயர்வும் அறிதற்கிடமாகிறது. சுக்கிரீவன் தக்கதொரு செயலை அறியாத சிறுவனாக இருக்கிறான். முன்பு அண்ணன் வாலியுடன் போரிடும் போதும் ஆராய்ந்து பார்க்கவில்லை. இப்போதும் அவன் ஆராய்ந்து பார்க்கவில்லை. ஆகவே அவனைக் கொல்வதைக் காட்டிலும் திருத்துவதே சாலச்சிறந்தது என்று இலக்குவனிடம்

"கொன்று நீக்குதல் குற்றத்தின் நீங்குமால்"
"அஞ்சில் ஐம்பதில் ஒன்று அறியாதவன்
நெஞ்சில் நின்று நிலாவ நிறுத்துவாய்" (கிட்கிந்தை)

என்று கூறுகின்றான். தனக்கு உதவுவதாகக் கூறிச் சென்ற சுக்ரீவன், பதில் உதவி செய்யாத நிலையில் அதைப் பொறுத்தருள எண்ணுவானேயாகில் இராமன் அறந்தரு செம்மல் என்பதில் ஐயமில்லை.

நன்றி மறந்து தேறலை அருந்தி இன்ப வாழ்விலேயே மூழ்கிக் கிடந்த சுக்கிரீவனையும், இராமன் மன்னித்துக் கட்டித்தழுவிக் கொள்ளுகிறான். குற்றத்தை ஒப்புக் கொள்ளும் நிலையில் அறம் போற்றும் உயர் பண்பாளர்கள் குற்றம் செய்தவர்களை மன்னிப்பார்கள். இதுவே உலக வழக்கு. ஆனால் வாலி "தன் தம்பியைக் காப்பாற்ற முயலவில்லை. அவன் இரந்து மன்னிக்கும்படி வேண்டியதையும், ஏற்றுக்கொள்ளவில்லை. குரங்கினமான வாலி

சிந்திக்கும் ஆற்றல் இல்லாத காரணத்தாலும், சமுதாயப் பண்பின் காரணத்தாலும் நீதி, அறம், அன்பு போன்ற பண்புகளிலிருந்து இழிந்து காணப்படுகிருன். செம்மையறம்போற்றும் சிறப்பை நாம் வாலியிடம் காணவில்லை. அதேபோல் சுக்கிரீவனும் அண்ணனைக் கொல்ல வேண்டுமென்றே இராமனிடம் வேண்டிக்கொள்ளுகிருன். தானே அரசனுக வேண்டுமென்று எண்ணுகிருன். சுயநலம் அவனை ஆட்கொள்கிறது. இதுவும் அவனது பண்பில்லா நிலையைக் காட்டுவதாகின்றது. உதவி செய்தவர்களுக்குப் பதில் உதவி செய்யாது மறந்து வாழ்வில் மூழ்கியிருக்கும் நிலையும் அவனது இழிகுணத்தைக் காட்டுவதாகும். அவனும் குரங்கினத்தில் ஒருவனுகப் பொருந்தி இருப்பதால் அவனது சமுதாயப் பழக்கமே அவனையும் சார்ந்து விடுகிறது. வாலி சுக்கிரீவன் இருவரும் அறம் வழுவியவர்களாக, சிந்தையற்றவர்களாகக் காணப்படுகிருர்கள்.

இராமனே, வாலியையும் சுக்கிரீவனையும் காப்பாற்றி அவர்கள் செய்த குற்றத்தையும் ஏற்று மன்னித்து பண்பில்லா அவர்கள் உள்ளத்தையும் மாற்றி திருத்தி நெறிப்படுத்தும் ஒரு சிந்தையாளனுகவே காட்சி தருகிருன். குற்றம் புரிந்த சுக்கிரீவன் வேண்டும் நிலையில் இராமன் கட்டித் தழுவி, மன்னித்து தகுந்த இருப்பிடம் அளித்துப் போற்றுகிருன் என்பதை,

" தீண்டலும் மார்பிடைத் திருவும் நோவுற
நீண்ட பொற் றடக்கையால் நெடிது புல்லினுன்
மூண்டு எழு வெகுளிபோய் ஒளிப்ப முன்புபோல்
ஈண்டிய கருணைதந்து இருக்கை ஏவினுன்"

(கிட்கிந்தை)

என்று கம்பர், அறந்தரு சிந்தையோனின் அருட் பண்பை வெளிப்படுத்துகிறார்,

"அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்"

என்ற வள்ளுவர் கருத்திற்கிணங்க, இராமன் பொறாமை, ஆசை, சினம், கடுஞ்சொல் ஆகிய குற்றங்களை அகற்றி வாழ்வதுடன், தம்பி ஏனையோர்களிடமும், இக்குற்றம் பொருந்தாதவாறு, அவ்வப்போது எடுத்துக்கூறி, நெறிப்படுத்தும் அருள்நெறியுடையவன் என்பதையும் கம்பர் காட்ட முற்படும் சிறப்பு, உலகில் மக்கள். அன்பு அறம், அருள் என்ற நிலையை, நிலைபேறு உடையதாகக் கொள்ளவேண்டும் என்று குறிப்பால் உணர்த்துவதாக அமைந்துள்ளது. அருள் நெறி வாழ்வதாக!

★

7. தொண்டின் செல்வர்கள்

தனக்கென வாழாது, பிறர்க்காகவே வாழ்ந்த சமுதாயத்தைக் காண வேண்டுமானுல், பெரிய புராணத்தில் சேக்கிழார் விளக்கும் கருத்துக்களே அறிய வேண்டும். தொண்டு என்பது பிறருக்குக் கைம்மாறு கருதாது செய்வதாகும். பயன் கிட்டுமா என்று ஆராய்ந்து பார்த்துச் செய்வது தொண்டாகாது. உண்மைக்கு உழைப்பதே தொண்டின் நெறி. அத்தகைய தொண்டின் நெறி நின்றவர்கள் சிவனடியார்கள். இறைவனிடத்தில் பற்றுக் கொண்ட அடியார்கள், பல முறையில் இறைவனுக்குத் தொண்டு செய்து அவனே அடையப் பாடு பட்டாலும், உலக மக்களிடையே உலவி சமுதாய நலத்தைப் போற்றினுர்கள். சிவனடியார்கள் இறைவனின் கருணேயைப் பெறவேண்டு மென்று மட்டும் விழைந்தவர்கள் அல்லர். மக்களின் மாண்புக்கும் பாடுபட விழைந்தவர்கள் வேதம், ஆகமம், அனுஷ்டானம் இவைகளில் பயிற்சி உடையவர்களாக யிருந்தாலும், மக்களின் துயர் துடைக்க உழைத்தும், வருந்தியும், வண்மையுடனும் பாடுபட்டுள்ளார்கள்.

துன்பத்தைத் துடைப்பதே தங்களின் கடமை என்று நினேத்து வாழ்ந்த கூட்டம் அடியார்கள் கூட்டம். அறுபத்து மூன்று அடியார்களும் அயராது தங்கள் பணியைச் செய்து மேம்பட்ட சமூக நலத் தொண்டர்களாவார்கள் பன்னிரண்டாம் நூற்ருண்டிலேயே நாம் "சமூக நலத்தொண்டின் சிறப்பைக் காண்கிருேம். நமது

அரசாங்கம் ஏற்படுத்தியுள்ள "சமுதாய நலத்திட்ட" முறைகள்பன்னிரண்டாம் நூற்றுண்டில் வாழ்ந்த அடியவர்களால் மேற்கொள்ளப் பட்டிருக்கிறது. திட்டமிட்டுப் பணியாற்ற பலஅலுவலகங்கள் இன்று உள்ளன. ஆனல் தனியே ஒவ்வொரு அடியாரும் சமூக நல ஊழியர்களாகத் தங்களைச் சரி செய்து கொண்டுள்ளார்கள். பல்வேறுபட்ட இனத்தவர்களை சேக்கிழார் நமக்குக் காட்டுகிறுர். சாதி சமயம் கடந்த ஒரு நிலையில் நாம் அடியார்களைக் காண்கிறேம். வீடு பேறு அடைய வேண்டும் என்பது அவர்கள் நோக்கமாயினும் மக்களுக்கு வழி காட்டியாக இருக்க வேண்டும் என்பது அவர்கள் குறிக்கோளாகும். இதை நமிநந்தியடிவர் புராணத்திலே காண்கிறேம்.

ஒருவரது சிறப்பை மற்றவர்கள் கூறிப் புகழ வேண்டும். ஒருவரது பண்பை மாற்றுர் வாய் மூலம் கேட்க வேண்டும். இதுவே உலக மரபு. நமிநந்தியடிகளை, சமயக் காவலரான நாவுக்கரசர் "தொண்டர்க்கு ஆணிப் பொன்" என்று கூறிச் சிறப்பிக்கின்றுர். பொன்னை உரைத்து மாத்துக் கூறுவதற்கு ஆணி என்ற ஒன்றை வைத்துப் பொன் வணிகர்கள் கூற முற்படுவார்கள். அதே போல ஆடியவர்களின் தொண்டை நமிநந்தியடிகளின் தொண்டாலே உரைத்துப் பார்த்துக் கூறினல் அதனது பெருமையை அறியலாம். அத்தகைய சிறப்பையும், தொண்டர்களின் உயர்வையும் உள்ளடக்கி வாழ்பவர் நமிநந்தியடிகள்.

நமிநந்தியடிகள் வளம் சிறந்த சோழ நாட்டிலே, ஏமப் பேரூரிலே வாழ்ந்த அந்தணர். வேதங்களையும், ஆகம நெறிகளையும் போற்றும் உயர்குலச் செம்மல். அவரது தொண்டு இறைவனுக்கு மட்டும் உரியதாகாமல் மக்களுக்கும் உரியதாகின்றது. இவர் நாள்தோறும் திருவாரூர் சென்று வன்மீக நாதரைத் தொழுது இருளை அகற்ற விளக்கேற்றி ஒளியைப் பரப்ப, நெய் கொண்டு சென்று வீதிகள் தோறும் விளக்கு ஏற்றி வந்தார். ஒரு நாள் காலதாமதமாகவே இருள் கவ்விக் கொண்டு வந்தது. விளக்கு ஏற்ற நெய் பெறுவான் வேண்டி அயல் வீட்டில் நுழைந்து நெய் கேட்டார். சைவசமயத்தவர் இல்லம் என்று எண்ணிச் சென்ற அவர் ஏமாற்றமடைந்தார். அது சமணர் வீடு. அவர்கள் மறுக்க, எப்படியும் தன் கடமையை தொண்டைச் செய்ய வேண்டி மனம் கலங்கினர். இறை அருள் பெற்ற அவர் தண்ணீரையே நெய்யாக ஊற்றி விளக்கேற்றி மக்களுக்கு வழி தெரியும்படி செய்தார் என்பதை

"அங்நீர் முகந்து கொண்டேறி
அப்பர் கோயில் அடைந்து அகலுள்
முங்நீர் உலகம் அதிசயிப்ப
முறுக்குங் திரிமேல் நீர் வார்த்தார்" (பெரிய—நமிநந்தி)

என்றும்

"திருவிளக்கு நீரால் எரித்தார் நாடறிய"

என்றும்

"நிறையும் பரிசு திருவிளக்கு
விடியுமளவும் நின்றெரியக்
குறையுங் தகளிகளுக் கெல்லாங்
கொள்ள வேண்டும் நீர் வார்த்து" (பெரிய)

என்றும், நமிநந்தியடிகளின் நேயத்தை சேக்கிழார் புலப்படுத்துகிறார்.

அயல் வீட்டில், விளக்கேற்ற நெய்கேட்ட அடியார் மனம் கலங்கும் வண்ணம் இல்லையென்று சொல்லி, உங்கள் இறைவனின் திறத்தால் தண்ணீரை ஊற்றி விளக்கு ஏற்றுக என்று கூறி இகழ்ந்தனர். அது கேட்டுப் பொறாத அடியார், இறைவனின் நல் கருணையுடன், அவரது பெருமையை உலகம் கண்டு வியக்கும் வண்ணம் பக்கத்துக் குளத்து நீரையே முகந்து, ஆலயத்திற்குள் சென்று, திரிமேல் வார்த்து, விளக்கெரித்தார். விடியுமளவும் பக்கத்தில் நின்று, தகளியில் நீர் குறையாதவாறு, மேலும் மேலும் நீர் வார்த்து, விளக்கெரித்தார் என்று கூறும் சிறப்பு, இறைவனிடத்தில் நமிநந்தியடிகள் கொண்டிருந்த ஈடுபாட்டையும் நம்பிக்கையையும், சேக்கிழார் எடுத்துக் காட்டுகிறார்.

விழா என்பது மக்களின் மகிழ்ச்சிக் குரியதாகும். அக்காலங்களில், பலருக்கு உணவு கொடுப்பதும், பொருள் கொடுப்பதும் வழக்கம். விருந்து கொடுத்துச் சிறப்பித்தலும் மரபு. மன்னர்கள் விழாவை விளக்கமுற நடத்தி மக்களை மகிழ்வுறச் செய்துள்ளார்கள். விழாக் காலங்களில் பலவித நிகழ்ச்சிகளுக்கு இடம் உண்டு. பல கலைஞர்களும் வாழ விழா உதவி செய்கிறது. விழாக்கள் பல நிலைகளிலே நடந்துள்ளன. மன்னர் பிறந்த நாள் விழா, மண்ணு மங்கல விழா, குடை கோள் விழா, நாள் கோள் விழா இவ்வாறு ஆட்சியாளர்கள் ஆண்டிலே பல விழாக்களை ஏற்படுத்திச் சிறப்பித்துள்ளார்கள்.

பொது மக்களும் கலைஞர்களும் இதனால் பயன் அடைந்துள்ளார்கள். ஊர்களிலே ஆங்காங்கே திருவிழாக்களும், நடைபெற்றுள்ளன. திருவிழாக் காலங்களிலே பெருஞ்சோறு அளிப்பது என்பதும் ஒரு மரபு. திருவிழா இறைவனுக்கு நடத்தும் சிறப்பாகும்.

திருவாரூரிலே ஆண்டுதோறும் திருவிழா நடைபெறுவது வழக்கம். அந்த விழாவை நமிநந்தியடிகள் பொறுப்பேற்று நடத்தி வந்துள்ளார் என்பதை,

" நீதிவளவன் தான்வேண்டும் நிவந்தம் பலவும்
அரியணையின் மீதுதிகழ இருந்தமைத்தான் "

ஆகவே இவர்

" வென்றி விடையார் மதிச்சடையார்
வீதிவிடங்கப் பெருமான்தாம், என்றுந்
திருவாரூர் ஆளும் இயல்பின் முறைமைத்
திருவிளையாட்டு ஒன்றுஞ் செயலும்
பங்குனி யுத்திரமாந் திருநாள் உயர்சிறப்பும்
நின்று விண்ணப்பஞ் செய்தபடி செய்தருளும் நிலைபெற்றார் "

என்று சேக்கிழார் கூறும் சிறப்பு நமிநந்தியடிகளின் தன்னலம் கருதா மாண்பையும், உலகிற்கு அவர் செய்த தொண்டையும் புலப்படுத்துவதாகும். இதையே

" இன்னபரிசு திருப்பணிகள் பலவுஞ் செய்தே "

என்று கூறி அவரது பெருமையை நிலை நாட்டுகிறார்.

எல்லோரும் நமது மக்கள், உறவினர், என்ற உயர் பண்பைக்கொண்டு வாழ்ந்தவர். அந்தணர் குலத்திலே பிறந்தாலும், வேதப்பிடிப்பில் வாழ்ந்தாலும் வேறுபாடு கருதாது எல்லோரும் ஓர் குலம் என்ற ஒருமைப் பாட்

டிலே, நெறி நின்றவர் என்பதைச் சேக்கிழார் நமக்கு எடுத்துக் காட்டுகிறர். சங்ககாலச் சான்ருேர் கூறிய "யாவரும் கேளிர்" என்ற பொதுமைப் பண்பைக் கொண்டு சாதி வேறுபாடு கருதாது வாழ்ந்த நேயத்தைச் சேக்கிழார்

"தெய்வப் பெருமான் திருவாரூர்ப் பிறந்து
வாழ்வார் எல்லாரும் மைவைத்தனைய
மணி கண்டர் வடிவேயாகிப் பெருகொளியால்'

போற்றி வாழ்ந்தவர் என்று சிறப்பித்துக் கூறுகிறர்.

திருவிழா முடிந்ததும் இல்லம் ஏகிய அடியாரை அவரது மனைவியார் இறைவனுக்குப் பூசனை செய்யும்படி வேண்ட, அதற்கு அடியார், விழாவில் பலருடன் கூடித் திரிந்ததால் தீண்டுதல் ஆகிவிட்டது, தண்ணீர் கொண்டுவா, நீராடிப் பின் பூசனை நிகழ்த்துகிறேன் என்று கூறிச் சற்று அயர்ந்தார். இறைவனின் கருணையால் அருள்பெற்ற அடியார் பின் தெளிந்து இவ்வுலகில் எல்லோரும் ஒன்றுதான் வேறுபாடு இல்லை என்ற பேர் உண்மையை அறிந்து தன் பிழை உணர்ந்தார் என்பதையும் அறிகிருேம். இதைச் சேக்கிழார்,

"இன்னவகையால் திருப்பணிகள் எல்லா
உலகுந் தொழச்செய்து நன்மை பெருகும்
நமிநந்தி அடிகள் நயமார் திருவீதி"

என்று விளக்குகிறர்.

இனவேறுபாடு கூடாது. சாதி வேற்றுமை கூடாது என்று இக்காலத்தில் கூறுவதைக் காண்கிருேம். அதற்குப் பல்வேறு திட்டங்கள் போடுவதை அறிவோம்.

ஆனால் பன்னிரண்டாம் நூற்றாண்டிலேயே நமிநந்தியடிகள் உணர்ந்து சாதி வேறுபாடு கருதாது உலகம் உய்யப் பாடுபட்டுள்ளார் என்பதை அறிகிறோம். விழாவாலும் விளக்கெரித்த நிலையாலும், சாதி வேறுபாடு களைந்த நிலையாலும், நமிநந்தியடிகளின் தொண்டு போற்றுதற்குரியது என்பதைச் சேக்கிழார் எடுத்தியம்பி யுள்ளார். அருவிகொண்டும், நீர் கொண்டும் சக்தியை எழுப்பி மின் விளக்குகள் எரிக்கப் பாடுபடுகின்றனர். இதை நாம் பன்னிரண்டாம் நூற்றாண்டிலேயே காண்கிறோமென்றால் எத்துணை புதுமை, எத்துணை வியப்பு. இன்று நீராலே மின் விளக்குகள் எரிகிறதென்றால் அன்று நமிநந்தியடிகள் நீரை ஊற்றி விளக்கு எரியச் செய்த மாண்பை நாம் போற்றாமல் இருக்க முடியுமா?

உயர்குடிப் பிறப்பு என்பது அவரவர்கள் செயலின் மூலம் வெளிப்படுவதாகும். உயர் குடியில் பிறந்தவர் ஒழுக்கமும் வாய்மையும் நாணமும் ஆகிய மூன்று குணங்களிலிருந்தும் வழுவ மாட்டார்கள். இயல்பாகவே நன்னெறியில் வாழ்பவராவார்கள். அத்தகைய பண்பு உடையவர்களை உலகம் போற்றும். எத்துணை துன்பம் வரினும், வறுமை வரினும் தங்கள் இயல்பில் குன்றாது மற்றவர்களிடத்தில் காணப்படும் துன்பத்தை துடைப்பார்கள். வாழ்கின்ற நிலையிலேயே தங்கள் தொண்டைப் பொன்னெனப் போற்றி, வேறுபாடு கருதாது எந்த சூழ்நிலையிலும், தம் கடமையைச் செய்து பேறு பெறுகிறார்கள். இத்தகைய தொண்டைத்தான் உலகம் போற்றும். அவர்களைத்தான் உத்தமர்கள் என்று மக்கள் அழைக்கிறார்கள். தன்னலம் போற்றா மாண்பால்

பிறருக்குக் கொடுக்கும் வண்மை வறுமையால் சுருங்கிய போதிலும் பழம் பெருமையால் தங்கள் தன்மையில் குன்றமாட்டார்கள். இதை வள்ளுவப் பெருந்தகை

" வழங்குவது உள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பில் தலைப்பிரிதல் இன்று "

என்று கூறிச் சிறப்பிக்கிருர். வள்ளுவர் கூறுவதற்குச் சான்ருக சேக்கிழார் பெருமான் பெரிய புராணத்தில் சமுதாயத் தொண்டின் காரணமாகப் பெயர் பெற்ற அடியார்களைச் சிறப்பித்துக் கூறுகிருர். வள்ளுவரது கருத்துக்களுக்கு விளக்கமாகப் பெரிய புராணம் அமைந் துள்ளதோ என்று கருத இடமுள்ளது.

கி. மு. இரண்டாம் நூற்ருண்டு இலக்கியமாகிய குறளின் வழி தமிழகத்தில் வாழ்ந்த மக்கள் தம் பரபினின்றும், குடியினின்றும் வழுவாமல் வாழ்ந்து வந்துள்ளனர் என்பதை நாம் பன்னிரண்டாம் நூற்ருண்டு சைவக் காப்பியத்தில் காண்கிருேம். வாழ்க்கை முறையை எடுத்துக் காட்டுவது இலக்கியம். 'வாழ்வு' எந்த முறையில் நடந்தது என்பதை அறிய உதவுவதுதான் இலக்கியம். பன்னிரண்டாம் நூற்ருண்டில் வாழ்ந்த தென்னக மக்களின் வாழ்க்கையை நாம் அறியுங்கால், மக்கள் தங்களுக்காக வாழாது பிறருக்காக வாழ்ந்திருக்கிருர்கள் என்பதைத் தெள்ளெனச் சேக்கிழார் பெருமான் எடுத்துக் காட்டுகிருர்.

மக்கள் செல்வத்தில் திளைத்தபோதும் வறுமையில் வாடியபோதும் விருந்து போற்றும் பண்பிலிருந்து தவறவில்லை. இக்காலச் சமுதாயமோ செல்வம் இருப்

பினும் விருந்து போற்றுதல் இல்லை. அடுத்தவர்கள் வர நேரிடின் அருவெறுப்புக் கொள்ளுவார்கள். இக்காலத்தில் யாராவது உணவு வேண்டி சுற்றியலையினும் தேடுவார் இல்லை. உற்ருர் உறவினர் வந்தாலும் உதறித்தள்ளும் வழிகளைக் கையாள முயலும் சமுதாயத்தையே காண்கிறோம். பன்னிரண்டாம் நூற்ருண்டு சமுதாயம், தொண்டாற்றத் துடித்தது. 'செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருந்தது'. விருந்தோம்பி வேளாண்மை செய்தது. நன்னெறி போற்றி மக்களைக் காப்பாற்ற கைம்மாறு கருதாது வாழ்ந்து வந்தார்கள் என்பதை சேக்கிழார் பெருமான் மிக அழகாகத் தன் காப்பியத்தில் காட்ட முற்படுகிருர்.

செல்வம் கொடுத்து ஒருவரைக் காப்பாற்ற முடியாது. பொன்னுலும், பொருளாலும் ஒருவரது உயிரைக் காப்பாற்ற முடியாது. விலை உயர்ந்த பொருள்களைக் கொடுப்பதால் உலகம் உயர்ந்தவர் என்று போற்றுவதில்லை. பொருளுக்கு விரும்பி தங்கள் பெருமையைக் கீழ்ப்படுத்தியவர்கள் அல்லர். உயிர் வாழ வேண்டுவது உணவு. உணவு தேடி மக்கள் அலைந்தனர். அவர்களின் துயரைப் போக்குவதுதான் சிறந்த தொண்டு. பட்டினியால் இறக்கும் பாமரர்களைக் காப்பாற்ற முயல்வதுதான் சிறந்த தொண்டாகும். உணவு கிடைக்காது உயிருக்குப் போராடும் வறுமையுடையவர்களைக் காப்பாற்றச் செய்த முயற்சியையே உலகம் போற்றும். அந்த சிறந்த தொண்டை சிவனடியார்கள் தங்கள் தலையாய பணியாகக் கொண்டு வாழ்ந்து வந்துள்ளார்கள் என்பதைச் சேக்கிழார் எடுத்தியம்புகிருர்.

உணவு தேடி அலைந்த உத்தமர்களுக்கு உணவு கொடுத்துப் போற்றிய சிறந்த பண்பாளர்கள் சிவனடியார்கள்.

இறைவன் உயிர்களை முறைப்படுத்தி நடாத்துகிறான். உள்ளப் பண்பை வளர்க்கிறான். உத்தமர்கள் என்ற பட்டத்திற்கு உரியவர்களாகுகிறார்கள். எப்போது என்றால் தன்னலம் கருதாது தொண்டாற்ற முற்படும் போது. இத்தகைய சிறந்த இலக்கணத்திற்குரியவராக பெரிய புராணத்திலே இளையான்குடி மாறநாயனார் காட்சி தருகிறார்.

இளையான்குடி என்பது இராமனாதபுர மாவட்டத்தில் சிவகெங்கைக்கு அடுத்தாற்போல் உள்ள தலமாகும். அங்கு வாழ்ந்து வந்த இவர் வேளாளர் குலத்தைச் சார்ந்தவராவார். குலத்திற்கேற்ற குணப்பண்பை உடையவராகத் திகழ்ந்தார். 'உழவு' ஏனைய தொழில்களுக்கு எல்லாம் தலைமை வகிக்கும் தன்மையுடையது, உழவர்கள் இவ்வுலகிற்கு அச்சாணி போன்றவர்கள். விளைவித்து பிறரை உண்ணச் செய்பவர்கள். உயர் குடிப் பண்பிற்கேற்ற முறையில் இளையான்குடி மாறன் வந்தவரை உண்பித்து வருவோரை, வரவேற்க காத்திருப்பார். மாண்புடைய செல்வரான மாறன் நாள் தோறும் உணவு வேண்டி வருவோரை அழைத்து வந்து அறுசுவை உணவு கொடுத்து அவர்கள் மனம் உவக்கும் வண்ணம், தன் விருந்து போற்றும் முறையைச் செய்து வந்தார். விருந்தின் அளவும் பயனும், விருந்து பெறுவோரைப் பொறுத்து உள்ளது என்று வள்ளுவர் கூறும் கருத்திற்கிணங்க, வருவோர் திருப்தி அடையும்வரை விருந்து கொடுக்கும் பண்புடையவர்.

"இனைத்துணைத்து என்ப தொன்றில்லை விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன்"

என்பதற்கேற்ற முறையில் தன் தொண்டை நடாத்திக் கொண்டு வந்தார். விருந்து கொடுக்கும் பான்மை அவரது பெருமையை உலகிற்கு எடுத்தியம்புவதாயிற்று. விருந்து புரக்கும் தன்மையுடன் இறைவனிடத்திலும் மன அமைதிக்கு தன் பணிகளின் மூலம் தொண்டாற்றி வந்தார். ஒரு சமயம் வறுமை வந்துற்றது. வாட்ட முறவில்லை. தொண்டின் சிறப்பை உணர்ந்து, செல்வம் இருக்கும்போது தொண்டாற்றுவது எளிமை, செல்வ மிலாது வறுமை வந்த நிலையில் விருந்து போற்றிச் சிறப்பிக்க வேணுமென்று தன் வீட்டிற்கு உணவு வேண்டி வந்த, மெய்யடியாருக்குத் தன் நிலத்தில் விதைத்த விதையைப் பொறுக்கி வந்து, வீட்டுத் தாழ் வாரக் கம்புகளை விறகாகக் கொண்டு, மனைவியின் மாண்பால் மாட்சிமைப்பட்ட விருந்து கொடுத்துச் சிறப் புச்செய்தார். உண்மையில், வறுமை வந்த விடத்து பெருமையும், நல்குடிப் பிறப்பும் உடையவர்கள் ஒரு போதும் தம் நிலையில் வழுவார் என்பதற்கேற்ப, நெறி நின்று நீடு வாழ்ந்தவராவார், இளையான்குடி மாறனார். வறுமைத் துன்பத்தில் உள்ள காலத்தில், வந்தவர் களுக்கு இல்லை என்று சொல்லியிருக்கலாம். தன் நிலையில் எதுவும் செய்ய முடியாது என்று சினந்து நோக்கலாம். எவ்வித நிகழ்ச்சிகளுக்கும் இடமில்லாத வகையில் தன் நிலையைக் காப்பாற்றிக் கொள்ளும் தகைமை உடையவராக வாழ்ந்து வந்தார் என்பதை மிக நயமுடன் சேக்கிழார் பெருமான் எடுத்துக் காட்டு

கிறார். தனக்கும் தன் மனைவிக்கும் உண்ண உணவு இல்லாதபோது, வந்தவருக்கு உணவு படைக்க வேண்டும் என்ற ஒரே எண்ணத்தில் கலங்கினார் என்பதை,

" நமக்கு முன்பிங் குணவிலை யாயினும்
இமக்கு லக்கொடி பாகர்க் கினியவர்
தமக்கு நாம் இன்அடிசில் தகவுற
அமைக்கு மாறெங்கனம் அணங்கே என "

என்று கூறிச் சிறப்பிக்கிறார்,

விருந்து கொடுத்தபின், வந்த சிவனடியார், மாறனாரின் மாண்புறு சிறப்புக்கண்டு மகிழ்ந்து புகழ்கிறார். அவரின் அரிய தொண்டை உலகம் வியப்பதாகும். இன்னும், அடியவர்களுக்கு அமுது அளித்துச் சிறப்பிக்க வேண்டும்.

" அன்பனே! அன்பர்பூசை அறிந்த நீ
அணங்கினோடும், என்பெரும் உலகம் எயதி
இருநிதிக் கிழவன்தானே, முன்பெரு நிதியம்
ஏந்தி மொழிவழி ஏவல் கேட்ப
இன்பமார்ந்திருக்க "

என்று அருள் செய்ததாகக் கூறும்போது இளையான்குடி மாறன் போன்ற தொண்டர்களது பெருமை தெரிவதாகிறது. அக்காலச் சமுதாயம் விருந்து போற்றுவதில் தவறவில்லை என்பதற்குச் சான்றாக இளையான்குடி மாறனாரை நாம் அறியும்படி அமைத்துக் காட்டுகிறார். விருந்துக்கு வெறுக்கும் இக்காலச் சமுதாயத்திற்கும், விருந்திற்கு விழையும் அக்காலச் சமுதாயத்திற்கும்

இடையே உள்ள வேறுபாடுகளை மிக அழகாக சேக்கிழார் பெருமான் எடுத்து இயம்புகிறார்.

விருந்து கண்டபோதே வரவேற்க வேண்டுமென்றும், இல்லையேல் விருந்தினர் முகம் வாடும் என்றும் வள்ளுவப் பெருந்தகை கூறும்போது,

" மோப்பக் குழையும் அனிச்சம், முகம் திரிந்து
நோக்கக் குழையும் விருந்து "

என்ற நிலையில், அவ்வளவு மென்மைத்தன்மை வாய்ந்தவர்கள் விருந்தினர்கள் என்று விளக்குவாராயினர். அதற்குச் சான்றாக, விருந்தை தூரத்துக் கண்டபோதே நம் நாயனர்

" பண்புற வேரித்தாரான் விருந்தெதிர் கொண்டனர் "

என்று கூறிச் சிறப்பிக்கும் மாண்பு அக்காலச் சமுதாயத் தொண்டை எடுத்துக்காட்டுவதாகும். ஈத்துவக்கும் பண்பே இறைவனுக்குச் செய்யும் பணியாகும். அதையே இறைவன் விரும்புகிறார். இவ்வுலகில் பிறந்தவர்கள் நற்றொண்டு ஆற்றவேண்டும் என்ற மாண்பிற்கு விளக்கமாக இளையான்குடி மாறன் விளங்கினர் என்றால் மிகையாகாது.

★

8. இலக்கியத் தேன்

காளமேகப் புலவர், தமிழ் மொழியில் தனக்கு நிகர் யாருமில்லை என்ற செருக்குடன் வாழ்ந்த கவிஞராவார். ஆங்கில நாட்டில் ஒருவரின் கருத்துக்கு மறுப்போ, குதர்க்கமோ வெளிவருமானால் அது பெர்னாட்ஷா எழுதியதாகும். நம் நாட்டிலும் அதேபோல 17ம் நூற்றுண்டில் மறுப்பும் குதர்க்கமும் காளமேகப் புலவரால் எழுதப் பெற்றன. புலவர் வேண்டுமென எழுத முற்பட்டவரல்லர். சூழ்நிலையும் அவர் வாழ்ந்த வறுமை நிலையும் அவ்வாறு அவரை எழுதத் தூண்டியது. வரகவி என்று புகழ்படைத்த காளமேகம், கவிவாணராக மட்டுமல்லாது, கவிமழை பொழியும் மேகமாகவும் வாழ்ந்துள்ளார்.

இன்று தமிழ் மொழியில் சிலேடைப் பாட்டுக்களும், இருபொருள் நயம் தோன்றும் பாடல்களும், இருக்கின்றன என்றால் அது காளமேகத்தின், அரிய செயலாகும். கவிதை வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்ட கவிஞர். தொல்காப்பியர் காலத்தில் நால்வகைப் பாக்கள் இருந்தன. அவருக்குப் பின் பாட இனவளர்ச்சி ஏற்பட்டது. பின் பாக்களிலே பொருட்சிறப்புக் கருதி, பல முறைகளில் பாடல்கள் விரிய ஆரம்பித்தன. காளமேகம் இதற்குச் சிறந்த தொண்டாற்றியுள்ளார்.

சங்ககாலப் பாடல்கள், பண்டைய சமுதாய நிலையையும், மக்கள் வாழ்க்கை முறைகளையும் எடுத்துக்

காட்டுகிறது. அகப்பாடல்கள் இல்லையானல் நாம் வாழ்வு முறையை அறிந்துகொள்ள முடியாது. பொருளியல் அடிப்படைக் கருத்துக்களையும் அறிந்து கொள்ள முடியாது. புறம் இல்லையானல் ஆட்சிபற்றி, அரசு பற்றி, அமைச்சு பற்றி அறிந்து கொள்ள முடியாது. வீரம் பற்றியோ, வீரர்களின் பற்றையோ நாம் அறிதற்கு இடமிராது. அதே நிலையில் காளமேகம் இடைக்காலச் சமுதாய நிலையையும் அவர்களது வாழ்க்கை முறையையும் எடுத்துக் கூறுகிறார். இவரது கூற்றின் வழி அக்காலப் பரம்பரையினரின் பண்பை அறிந்து கொள்ள முடிகிறது. இலக்கியத்தின் மூலம் நாம், முன்பு வாழ்ந்தவர்களின் வரலாற்றை அறிந்து கொள்ள முடியும். இலக்கியம் இல்லையேல் வரலாறு அறிதற்கு இடமில்லாமல் போய்விடும். இடைக்காலப் புலவர்கள் பொன்னுக்கும் பொருளுக்கும் பாடினுலும், உண்மை நிலையைக் கூறியுள்ளார்கள். அஞ்சா நெஞ்சுடன் உண்மையை மறைக்காமல் கூற முன்வந்துள்ள புலவர்களின் வரிசையில் காளமேகத்தையும் காண்கிறோம்.

இவர் பாடல்களில் நகைச்சுவையும், கேலியும் குறைவில்லாது அமைந்திருக்கின்றன. கூறும் கருத்துக்கள் எல்லாம் நகைக்கச் செய்யும் கருத்துக்களாகும். அவற்றுள் இவர் ஒரு சிறந்த உண்மையை எடுத்துக் கூற முற்படும் காட்சி நம் உள்ளத்தைப் பிணிப்பதாகும். அவர் கூறும் கருத்தை நாம் அன்றாட வாழ்க்கையிலே காண்கிறோம். அன்றாடம் நடக்கும் செய்திகளைத் தொகுத்து நயம்படக் கூறுவதில் புலவர்களை விஞ்ச முடியாது, என்ற உண்மைக் கேற்ப ஒரு சாதாரண

நிகழ்ச்சியை அழகுபட சொல்லோவியமாகத் தீட்டுகிறார். நாம் மிகுதியாக பாலிலே தண்ணீரைவிடுவது, மோரிலே தண்ணீரை விடுவது போன்ற கலப்பட நிகழ்ச்சிகளைக் காண்கிறோம். தூய்மையான பால் கிடைப்பது அரிதாக உள்ளது. பாலிலே தண்ணீர் சேர்ப்பது வழக்கம். ஆனால் தண்ணீரிலே பாலைச்சேர்த்து, தண்ணீரையே பாலாகக் கொடுத்துப் பொருள் ஈட்டும் மக்களைக் காண்கிறோம். பாலிலும், மோரிலும் தண்ணீர் கலவாதவிற்கும் மக்களைக் காணவே முடியாது. இக்காலத்தில் இவைகள் இயல்பாகவே நடைபெறுகின்றன. இடைக்காலத்தில், பதினேழாம் நூற்றாண்டிலேயே இந்நிகழ்ச்சிகளைக் காண்கிறோம். புலவர் தான் கண்ட காட்சியை விரித்துக் கூறுகிறார்.

மாதரி

இடையர் குலம் என்பது தீது இல்லாத குலம் என்று மதிக்கப்பட்டுள்ளது. இடையர் குலத்தைப் பற்றி இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்திலே, கவுந்தியடிகள் வாயிலாகச் சிறப்பித்துக் கூறுகிறார். கோவலன், கண்ணகி, கவுந்தி மூவரும், புறச்சேரியிலே தங்கியிருக்கும்போது, கவுந்தியடிகள் கண்ணகியை யாரிடம் ஒப்படைப்பது என்று சிந்தித்துக் கொண்டிருக்கிறார். அப்போது மாதரி என்ற இடைக்குலப் பெண் வருகிறாள். அவளிடம் அடைக்கலமாக ஒப்படைப்பதே சிறந்தது என்று முடிவு கட்டி கண்ணகியின் சிறப்பை மாதரியிடம் கூறி ஒப்படைக்கிறார். அதுகாலை மாதரியைப் புகழ்ந்து கூறும்போது

"ஆகாத் தோம்பி ஆப்பயன் அளிக்கும்
கோவலர் வாழ்க்கையோர் கொடும்பாடில்லை
தீதிலள் முதுமகள் செவ்வியள் அளியள்
மாதரி தன்னுடன் மடந்தையை இருத்துதற்கு"

என்று சிறப்பிக்கிறார்.

இத்தகைய சிறந்த குலமாகவும் பண்புள்ள மக்களாகவும் கருதும் இடையர் குலத்தைப்பற்றி நகைக்கும் படியாக காளமேகம் ஓர் சிறந்த கருத்தைக் கூறுகிறார்கள். சங்க காலத்தில் வாழ்ந்த இடையர்கள் வஞ்சனை, கள்ளம் கபடமற்ற முறையிலே வாழ்ந்துள்ளார்கள். இடைக் காலத்தில் வாழ்ந்த இடையர்களோ வஞ்சனை, சூது நிறைந்தவர்களாவார்கள்.

ஒரு நாள் காளமேகம் வெம்மைதரும் நண்பகலில் வந்துகொண்டிருக்கிறார். அப்போது வறட்சியின் கொடுமை அவரது நாவையும் வறட்சியுறச் செய்கிறது. அதைத் தீர்த்துக்கொள்ள பக்கத்து ஊரை அடைகிறார். அங்கு வாழும் மக்கள் இடையர்கள் என்று அறிந்து, மகிழ்ந்து, குடிப்பதற்குத் தண்ணீர் கேட்கிறார். அவரைப் பற்றி அறியாத இடைக்குலமாது, அவர் கேட்ட தண்ணீரையே கொடுத்திருக்கலாம். அவ்வாறு கொடாமல் ஏதோ அவரை உபசரிப்பது போல மோரைக் கொடுக்க முனைந்து அதில் தண்ணீரை மிகுதியாக கலந்து வந்து கொடுக்க, அதன் தன்மையை உணர்ந்த புலவன் தன் வறட்சியைத் தீர்த்துக் கொள்ள எண்ணாமல், கவிதை வளத்தால் அதன் சிறப்பை ஓர் பாட்டாகப் பாடுகிறான். இயல்பான நிகழ்ச்சி அதை அவன் இன்பமுற பாடிக் காட்டுகிறான்.

தண்ணீர் ஒப்புயர்வற்றது. அதன் சிறப்பு இவ்வுல கில் கூறமுடியாதது. நீரின் சிறப்பை வள்ளுவர்,

" வானின்றுலகம் வழங்கி வருதலால்
தானமிழ்தம் என்றுணரற் பாற்று "

என்று கூறிச் சிறப்பிக்கிறார். தண்ணீர் இல்லையேல் உலகம் வாழமுடியாது. வறுமையிலே உழலவேண்டிய நிலை. வயலுக்கு நீர் வேண்டும். பயிருக்கு நீர் வேண்டும். மக்களுக்கு நீர் வேண்டும். தண்ணீர் இல்லையேல் நாடு வெம்மையுறும். பாலை நிலக்காட்சியைத்தான் காண முடியும். முல்லையையோ, குறிஞ்சியையோ நாம் காண முடியாது. நீதி நூலில்,

" வரப்பு உயர நீர் உயரும். நீர் உயர நெல் உயரும் "

என்று கூறப்பெறுவதைக் காண்கிறோம்.

ஆகவே நீரின் பெருமை போற்றுதற் குரியது. தண்ணீரைக்கொண்டு, மின் விசையை இயக்குகிறார்கள். மின் விளக்குகளின் மூலம் ஒளியைப் பரப்புகிறார்கள். இவைகள் இக்காலச் சாதனைகள். இதை, தண்ணீரின் உதவியால் நமிநந்தியடிகள் வீதிகள் தோறும் விளக்கெரியச் செய்தார் என்றும் இறைவனைக்காண விளக்கு ஏற்றினார் என்றும், பன்னிரண்டாம் நூற்றாண்டு சமுதாயத் தொண்டராக சைவக் காப்பியத்திலே சேக்கிழார் பெருமான் எடுத்துக் கூறுகிறார். இத்தகைய மாண்புறு நீரின் பெருமையைக் காளமேகம், இடைச்சி தண்ணீர் கலந்த மோரைக் கொடுத்ததும் வாங்கிக் கையில் வைத்துக்கொண்டு தண்ணீரே! நீ ஆகாயத்திலிருக்கும் போது மேகமென்று பேர் படைத்தாய். பெரிய பூமிக்கு

வந்தபிறகு நீர் என்று பேர் படைத்தாய். கச்சுப் பொருந்திய மெல்லியளார்களாகிய இடைச்சியர் கையில் வந்த பிறகு மோரென்று பேர் படைத்தாய். ஆகவே மூன்று பேர்களுக்கும் உரிய தாயினை என்பதை

"காரென்று பேர்படைத்தாய் ககனத்துறும்போது
நீரென்று பேர்படைத்தாய் நெடுந் தரையில் வந்ததற்பின்
வாரொன்று மென்முலையாராய்ச்சியர் கை வந்ததற்பின்
மோரென்று பேர் படைத்தாய் முப்பேரும் பெற்றாயே!"

என்று படிப்போர் உள்ளம் கொள்ளை கொள்ளுமாறு கூறிச் சிறப்பிக்கின்றார்.

சொல்லும் பொருளும் இயைவதுதான் பாடல். பொருளிலே சுவையை அள்ளித் தெளித்து சொல்லின் பெருமையை புலவன் விளக்கிக் காட்டுகிறான். பாரதி கூறிய "சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே" என்பதற்கேற்ப ஒரு சொல்லுக்குப் பல பொருட்கூறிக் கருத்துக்களைச் சிறப்பித்து வெற்றிக்கொடி நாட்டிய நிலையை இலக்கிய உலகில் காண்கிறோம். இடைக்காலத்தில் வாழ்ந்த புலவர்கள் நகைச்சுவை தோன்றப் பாடி மக்களது உள்ளங்களைப் பிணித்துள்ளார்கள். போட்டி நடைபெறுங் காலங்களில் புலவர்கள் தங்கள் அறிவின் திறத்தால் மற்ற புலவர்களைத் தோல்வியுறச் செய்ய, பல பொருள் உள்ள சொல்லைப் பயன்படுத்தி வெற்றி அடைந்துள்ளார்கள். இதை 16ம் 17 ம் நூற்றாண்டில் மிகுதியாகக் காணலாம். அறம் பாடி, வசைபாடி, தங்கள் கருத்தை முற்றுவிப்பதற்கு இவ்வழி பயன் உடையதாக இருந்தது. காளமேகம், ஒட்டக்கூத்தர் போன்றவர்கள்

இதற்கு அரசர்களாவார்கள். ஆனால் 12ஆம் 13ஆம் நூற்றாண்டிலேயே இம்முறை பெரிதும் பயன்பட்டுள்ளது.

பல்லவர்கள் தமிழ் நாட்டை ஆள முற்படும்போது, தமிழ் மொழியின் வளர்ச்சி குன்றி யிருந்தது. அவர்களது நோக்கு, கலை, இசை, சிற்பம், ஓவியம் முதலிய துறைகளிலே சென்றது. இயற்றமிழ் வளர்ச்சிக்கு அவர்கள் பாடுபடவில்லை. இந்நிலையில் மூன்றும் நந்திவர்மன் காலத்தில் இயற்றமிழ் வளர்ச்சிக்கு ஆதரவு இருந்தது. மன்னனைக் கொல்லுவதற்காகப் பாடிய பாடல்களின் தொகுப்பே ஓர் இலக்கியமாக உருவெடுத்தது. அந்த இலக்கியத்திற்குத் தலைவன் 'நந்திவர்மன் ஆவான்'. அந்த இலக்கியமே 'நந்திக் கலம்பகம்' என்று வழங்கப்படுகிறது. அந்நூலுக்கு ஆசிரியர் யார் என்று தெரியவில்லை. ஆனால் காடவர்கோன் என்ற பல்லவ சிற்றரசனே, ஆசிரியன் என்று கூறுகிறார்கள். ஆட்சி உரிமை காரணமாக பூசல் ஏற்பட்டது. நந்திவர்மன், தன் வலிமையால் தன் தம்பிமார்களை நாட்டை விட்டுத் துரத்தி நாட்டைக் கைப்பற்றினான் என்று கூறுகிறார்கள். வெளியேறிய தம்பிமார் நந்திவர்மனைக் கொல்ல முயற்சி செய்து மந்திரம், தந்திரம், வாள்வித்தை கற்றனர். அனைத்தும் பயன்படாது போயிற்று. அவர்களில் ஒருவன்மட்டும் வசைபாடும் ஆற்றல் பெற்றான். வெற்றியும் கொண்டான், தான் பாடிய பாடலால் மன்னன் நந்தியை அழியுமாறு, எரியுண்ணுமாறு செய்தான் என்பதை நந்திக் கலம்பகத்திலிருந்து அறிகிறோம். அந்த இலக்கியத்தில் ஆசிரியர்

கையாண்டுள்ள நயம் சிறந்ததாகும். அவர் கையாண்டுள்ள சொற்களுக்கு, பொருள் காணுகின்ற நிலையில் பண்டையக் கவிதைச் சிறப்பு தெரிவதாகும். அறிவின் திறத்தைக் கண்டு வியக்க, மன்னர்களுக்கும், மக்களுக்கும், பயன் உடையதாக அமைந்ததுதான் சொல்லுக்குப் பல பொருள் காணும் சிறப்பு.

நந்தி மன்னனைப் பாடிப் பரிசில் பெற்ற புலவர்கள் அனைவரும் புரவலர் ஆனார்கள் என்றும் இனி அவனது நாட்டில் இரக்கும் புலவர்கள் இல்லை என்றும், காரணம் நந்திவர்மன் தன்னைப் பாடி வந்த அத்துணைப் புலவர்களுக்கும் மிகுதியாக பொன்னையும் பொருளையும் யானைகளையும், குதிரைகளையும் கொடுத்துச் செல்வந்தர்களாக மாற்றி விட்டான் என்றும், ஆசிரியர் நந்தியின் கொடைச் சிறப்பைக் கூறுகிறார்.

நந்தி மன்னனைக் காண்பதற்கு முன் எல்லோரும் வறுமையுற்று இரத்தல் தொழிலை உடையவர்களாக இருந்தார்கள். அப்போது அவர்களைப் புரக்கும் புரவலனாக மன்னன் நந்தி ஒருவன்தான் இருந்தான், அவனைக் கண்டு பரிசில் பெற்ற பின்பு நந்தி மன்னனைப் போலவே இரவலர்கள் அனைவரும் புரவலர்களாக மாறி விட்டார்கள். என்னே புதுமை! மன்னன் என்றால் நந்தி ஒருவன்தான் இருந்தான். இப்போதோ அனைவருமே மன்னர்களாக, புரக்கும் வன்மையுடையவர்களாக மாறி விட்டார்களே! இனியார் புரக்கும் தொழிலை மேற்கொள்பவர்கள். இரவலர் யார்? என்று அங்குள்ள மக்கள் கலங்கினர்கள் என்பதை''-நந்தி

தடங்கைப் பூ பாலன் மேல், தண் கோவை பாடி
அடங்கப் பூ பால ராஞர் "

என்று கூறும் சிறப்பு மகிழ்தற்குரியது.

இனிய தமிழ்ச் சொற்களால் ஆகிய மலர் கொண்டு தொடுத்த பாமாலையைப் பாடி மன்னனுக்கு அணிவித்து அத்துணை பேரும் மன்னர்களாக, புரவலர்களாக மாறிய நிலை கொடையின் மாண்புக்கு எடுத்துக்காட்டு. ஆனல் அந்த இரவலர் என்ற பட்டம் இனி யாருக்கு உரியது என்ருல் இயற்கையாக மலரும் அல்லி மலருக்கு உரிய தாகும் என்று கூறும் நயம் வியத்தற்பாலது.

" இந்தப் புவியில் இரவலர் உண்டு என்பதெல்லாம்
அந்தக் குமுதமே அல்ல வோ "

என்று ஆசிரியர் கூறும் சிறப்பு அவர் கையாண்டுள்ள சொல்லின் பெருமையை விளக்குவதாகின்றது. குமுத மலர்தான் 'இரவலர்' என்று அவர் வெளிப் படுத்தும் முறை நம்மை நகைக்கும்படி செய்தாலும் இரவு+அலர் என்று இரண்டாகப் பிரித்து இரவுக் காலத்தில் மலரும் தொழிலைக் கொண்டுள்ள அல்லி மலருக்கு அந்தச் சிறப்புப் பெயரைச் சூட்டுவோமே யானல் இங்கு 'இரவலர்' என்ற வறுமை உடையவர் கள் உண்டு. இல்லையேல் யாரும் இரவலர் அல்லர். யாசிக்கும் பண்பால் வறுமையுடைய வாழ்வை நடத்து பவர்கள் அல்லர் என்று நாம் அறிய முடிகிறது.

நந்தி மன்னன் நாட்டில் வறுமை இல்லாது வளமை இருந்தது என்பதை தெரிவிப்பதற்காகவே இவ்வாறு சொல்லாட்சியைப் பயன்படுத்தி தன் மதி

நுட்பத்தைக் காட்டுவாராயினர். இயல்பாகவே இரவில் மலரும் அந்த மலருக்கு நாம் இரவலர் பட்டத்தைச் சூட்டினும், ஒரு வேளை அந்த குமுத மலர் ஏற்றுக் கொள்ளுமோ, என்ற ஐயப்பாட்டில் ஆசிரியர் நம்மை அவ்வாறு கொள்ளும்படி செய்வதற்கு 'குமுதமே அல் லவோ' என்று கேட்கும் சிறப்பு நம்மை மதிமயங்கச் செய்வதாகும்.

ஆசிரியர் மற்றொரு மாண்புறு கருத்தை விளக்கு கிறார். நந்தியின் வீரத்தைக் கூறும் போது பகைவர் களது கலக்கத்தையும், அவர்கள் நாட்டின் அழிவையும் காட்டுகிறார். நந்திவர்மன் போர்க்களம் நோக்கிச் செல் லாது தன் நாட்டில் இருப்பானேயானால், பகைவர்களது நாட்டின் ஊர்கள் நலமுடன் இருப்பதாகும் என்பதை,

"நந்தி சீறாத நாள் ஊரும், அரவமும்
தாமரைக் காடும், உயர்வனமும், தேரும்
உடைத்து என்பர்"

என்று கூறுகிறார்.

நந்திவர்மன் கோபித்து எழாத நாள், பல ஊர் களைக் கொண்டதாகவும் ஆடல், பாடல் சிறப்பின் காரணமாகப் பேரொலியும், நீர் நிலைகளின் காரணமாகத் தாமரைகள் வளர்ந்துள்ள காடாகவும், மருதவளச் சிறப்பாகத்தென்னை, மா, வாழை, முதலியவைகள் வளர்ந் துள்ள உயர்வனமாகவும், பூங்காவாகவும், பரிகள் பூட் டப்பட்ட தேர்களையும், எப்போதும் செல்லுதற்குரிய நெறிகளையும் உடையதாக, வளம் செறிந்திருந்தது. ஆனால் நந்தி சீறிய நாள், அந்த நாடு பாம்புகள் ஊர்ந் தும், விலங்கினங்களின் பேரொலியும், தாவுகின்ற விலங்

குகள் வாழும் காடாகவும், பலவிதப் பாலை நிலக்காட்சிகளாகவும் மாறின என்பதை

" ஊரும் அரவமும் தாமரைக் காடும், உயர்வனமும்
தேரும் உடைத் தென்பர் "

என்று கூறிச் சிறப்பிக்கின்றார்.

இவ்விடத்தில் முன்பு கூறியது போல, ஊரும், அரவமும், காடும், தேரும் என்று வந்தாலும் முன்பு மங்கலப் பொருளில் சொல்லியவர், பின் அமங்கலப் பொருளில் சொல்லி அந்நாட்டின் அழிவை, ஓர் ஓவியம் போலத் தீட்டிக் காட்டுகிறார்.

பின் கூறும் இரண்டடிகளில் ஊரும் என்ற சொல்லுக்கு, பாம்புகள் ஊர்ந்து செல்லும் என்றும், அரவம் என்ற சொல்லுக்கு, விலங்கு, பாம்புகளின் கோர ஒலி என்றும், தாமரைக்காடு என்பதை தா=தாவுகின்ற என்று பிரித்து மரை=காட்டு விலங்குகள் என்று கொண்டு, தாவும் காட்டு விலங்குகள் வாழுகின்ற இடம் என்றும், உயர்வனம் என்ற சொல்லுக்கு, கள்ளிமுள் போன்ற பாலைக்காடு என்றும், தேரும் என்ற சொல்லுக்கு, பேய்த் தேராகிய கானல் நீர் என்றும், அதே சொல்லுக்குப் பொருள் கொள்ளுமாறு செய்து நாட்டின் நிலையை, அழிவை, விளக்கிக் காட்டும் சிறப்பு புலவரது நாவன்மையைக் காட்டுவதாகும். இதே நிலையைப் பிற்காலப் புலவர்களின் பாடல்களிலும், விளக்கமுறக் காணலாம்.

★

9. வில்லி ஓவியம்

அர்ச்சுனன்

வியாசரால் வட மொழியில் தீட்டப்பட்ட ஓவியமாகிய மகாபாரதம் வில்லிபுத்தூராரால் தமிழ் மொழியில் தீட்டப்பட்டு, படிப்போர் உள்ளத்தைக் கனிவிக்கும் காவியமாக அமைந்துள்ளது. தமிழில் கம்பராமாயணமும், வில்லி ஓவியமும் இரண்டு கண்கள் போல் திகழ்கின்றன. தமிழ் நாட்டில் இரண்டு காவியக் கதைகளும், மறையாது, மங்காது மக்கள் மனத்திரையிலே தீட்டப் பட்டுவிட்டன. காலம் மாறினுலும், கருத்துக்கள் மறைந்தாலும், புதுக்கருத்துக்கள் எழுந்தாலும் மகாபாரத இராமாயணக்கதைக் கருத்துக்களும், அதன் காலமும், ஆசிரியரின் சிறப்பும், எக்காலமும் மறையப் போவதில்லை. இலக்கிய ஓவிய ஆசிரியர்களாகிய கம்பனும் வில்லியும் பல கதா பாத்திரங்களையும், அவர்களது சிறப்பையும், தன்மையையும், குணத்தையும், பண்பையும், தக்க முறையில், நுண்மாண் நுழை புலத்துடன் சொற்சுவை, பொருட்சுவை ததும்ப, உள்ளங் கவரும் வகையில் இலக்கியப் படாகத்தில் தீட்டிக் காண்பித்திருக்கும் சிறப்பு போற்றுதற்குரியது. அகத்திலும், புறத்திலும், தொகையிலும், பாட்டிலும், பாரதக் கதைகளிலிருந்து எடுத்தாளப்பட்டிருக்கும் உவமைகளையும், மேற்கோள்களையும் பல விடங்களிலே காண்கிறோம்.

வில்லிபுத்தூரார் காட்டும் பாத்திரங்கள் பல. அவற்றுள் பெரும் பாத்திரமாகவும், கதையின் செறிவுக்கு வேண்டிய முக்கிய பாத்திரங்களாகவும் மதிக்கப்படுபவர்கள் கர்ணன், கிருட்டிணன், அருச்சுனன் ஆகியோரே. பாரதம் என்றவுடன் கொடைக்கு கர்ணனையும், கீதையை ஈந்து, உலகத்தை உய்வு பெறச்செய்த கிருஷ்ணனையும், அவன் பாரதப் போரை முடிக்க உதவிய செயலையும், பாரதப் போரின் வெற்றிக்கு காரணமானவனும், பாண்டவர்களின் குலம் தழைக்கப் பாடுபட்டவனும், ஆசிரியரின்சபதத்தை நிறைவேற்றத் துணிந்தவனும், குருவின் கட்டளையை மீருது, ஏற்ற மாணவனுகயிருந்து தன் கடமையை நிறைவேற்றியவனுமான அர்ச்சுனனையும், மக்கள் தங்களையும் அறியாது கூறுவார்கள். அத்தகைய சிறப்பையும் அழியாத இடத்தையும் மூவரும் பெற்றுள்ளனர். அவர்களில் வில்விசயனுன அர்ச்சுனன் பற்றிய கருத்துக்களைக் காண்போமாக,

பாண்டு மன்னன் மக்கட்பேற்றில் கொண்ட பெருவிருப்பின் காரணமாகக் காந்தாரி, துரியோதனன் முதலிய புதல்வர்கள் நூற்றுவருடன் பொலிவுறுதலைக் கண்டு, மற்றொரு அழகான புதல்வனைப் பெற்றெடுக்குமாறு குந்தியிடம் கூற, குந்தியும் இந்திரனை வேண்டி, அவனுடன் கலந்து, தேவர்கள் மலர்மாரி பொழிய, பங்குனித்திங்களின் முழுமதி நாளிலே எழிலும் ஏற்றமும் அமைந்த ஆண் குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்தாள். அவனே அர்ச்சுனன். அவனுக்குப் பங்குனன் என்ற பெயர் உண்டாயிற்று. பின்பு அவனுக்கு ஏற்படப் போகும் புகழையும், வெற்றிச் செயல்களையும், சிறப்பியல்

புகளையும், வில்லிபுத்தூரார், பிறந்த அன்றே, பிறப்பினிலே வைத்து அழகுபட "வரிவில் வாழ்க்கை வி ச ய ன்" என்றும், "வெண்மதிப் பங்குனன்" என்றும், உலகம் உய்வுபெற வந்து உதித்துள்ளான் என்பதை "இரு நிலம் மகிழ்ச்சி கூறும்" என்றும் ஆசிரியர் கூறியிருக்கும் சிறப்பு வியத்தற்குரியது.

பாண்டவர்களுள் ஒருவனுன அர்ச்சுனன் எழிலரசனுக உருவகம் செய்யப்பட்டுள்ளான். வீரத்தால் மேம்பட்டு விளங்கினுலும், எழிலால், பிறர் நலம் கவரும் தகைமையாளன் என்பதை ஆசிரியர் தீர்த்தயாத்திரைச் சருக்கம் மூலம் காட்டுகிருர். முன்பே அர்ச்சுனனது, அழகையும், அறிவையும் கேள்வியுற்ற திரௌபதி, சுயம் வரத்தன்று பாண்டவர்களது வருகைக்குக்காத்திருக்கின்ருள். அப்போது ஏனைய நாட்டு மன்னர்களும் துரியோதனுதிகளும் அங்கு குழுமியிருக்க, காட்டிலே துன்பத்திற்குள் ஆழ்ந்திருக்கும் பா ண் ட வ ர் க ள், திரௌபதியின் சுயம்வரம் அறிந்து, மறையோர் வேடத்தில் வந்தெய்தி, பல மன்னர்கள் திரௌபதியின் அழகிலே விழ்ந்து இலக்கு எய்ய முயன்று, தோல்வியுற்ற நிலையில், வில் விசயனுன அருச்சுனன், தன் வீரத்தினுல் இலக்கை ஒரு நொடியில் அறுத்துத் தள்ளி, திரௌபதியை, சுயம்வரத்தில் வெற்றி கொள்கிருன். திரௌபதியும், இலக்கை வீழ்த்திய வீரனை, எழில்மிக்க அர்ச்சுனன்தான் என்று தெளிந்து பெரு மகிழ்ச்சிக்குள்ளாகிருள். வீரத்தையும், எழிலையும் தன்னகத்தே கொண்ட அர்ச்சுனன் பிறரால் விரும்பப்படுவதில் வியப்பில்லை. அதையே வில்லிபுத்தூராரும், அர்ச்சுனனின்

திருமணம்பற்றிக் கூறுகையில் ,செல்லும் வழியில் உலூபி என்ற நங்கை, பெருநயப்பினளாக, மோகம் கொண்டு திருமணத்திற்கு உடன்படுகின்ருள் என்றும் பாண்டி மன்னனது மகளாகிய சித்திராங்கதை என்பவளும் அர்ச்சுனனது அழகிலே மயங்கி, மனைவியாகிருள் என்றும், கண்ணனது தங்கையாகிய சுபத்திரை என்பவளும் அர்ச்சுனனது எழில் உருவைக் கேள்வியுற்று தேனிலே விழ்ந்த வண்டுபோல, அவனது அழகிலே விழ்ந்து, மணமகளாகிருள், என்றும், கூறுவதோடு அமையாது, அர்ச்சுனனை ஆணழகன் என்றே தனது காவியத்தில் பல இடங்களில் அவர் தீட்டிக் காட்டும் சிறப்பு, நம்மையும், அவன்பால் மோகம் கொள்ளச் செய்கிறது. அர்ச்சுனனது திருமண நிகழ்ச்சி ஓர் ஒற்றுமை உணர்ச்சியை அறிவுறுத்துவதுபோல அமைந்துள்ளது. தீர்த்த யாத்திரை மூலம், பாரத காலத்திலே ஒற்றுமை நிலவிய காட்சியைக் காண்கிருேம். அர்ச்சுனன் எல்லா நாடுகளுக்கும் சென்று, உறவுமுறையின் காரணமாகப் பிரிக்க முடியாத, வெறுக்க முடியாத, தொடர்பை ஏற்படுத்திய நிகழ்ச்சிகளை அறிகிருேம். நாகலோகத்தில் உலூபியை மணந்து கொண்டதாகவும், இமயமலை சென்று நீராடியதாகவும், தென்திசை வந்து திருவேங்கடம், காஞ்சிபுரம் திருவண்ணுமலை, பெண்ணையாறு, திருக்கோவலூர், திருவெண்ணெய் நல்லூர், திருவதிகை, திருவயிந்திரபுரம், ஆகிய ஊர்களுக்குச் சென்று, பின் தில்லையை அடைந்து; கூத்தப் பெருமானை வணங்கித் திருவரங்கம் வழியாக பாண்டி நாடு சென்று வாழ்ந்ததாகவும் அறிகிருேம். தில்லையில் கூத்தப் பெருமானை வணங்கியதை ஆசிரியர்

" அன்னம்பல பயில்வார் புனலாளி தில்லையில் ஆடும்
பொன்னம்பல நாதன்கழல் பொற்போடு பணிந்தான் "

என்று கூறுவதிலிருந்து அர்ச்சுனனின் அரிய பக்திச் சுவையையும், ஆன்மீகத் தன்மையையும் அறிகிறோம். பின் தேசிய ஒற்றுமையை நிலவும்படி செய்த உரவோன் என்பதை ஆசிரியர்,

" செந்திருவும் எனக் காமதேவும் இரதியும் என
வெஞ்சிலை வலோனும் சந்தணிபூண் முலையாளும் "

என்று கூறவதிலிருந்து குமரிவரை சென்று குன்றாத இயல்பை ஏற்படுத்தினான் என்பதை ஆசிரியர் அறியச் செய்யும் முறை போற்றுதற்குரியது. ஆசிரியர் அர்ச்சுனனை எழில் மிக்கான் என்று மட்டும் காட்டவில்லை. ஒன்றுபடுத்திய உத்தமன் என்பதை அத்தினாபுரிமுதல் பாண்டிநாடு வரை, அர்ச்சுனனது தொடர்பை நமக்கு எடுத்துக் காட்டும் சிறப்பு போற்றுதற்குரியது. இது பாரதகால ஒற்றுமை உணர்வை நமக்கு எடுத்துக் காட்டுவதாகிறது.

அர்ச்சுனனை தவநெறியாளன் என்பதையும் ஓர்மையான நெஞ்சினன் என்பதையும், விடாமுயற்சியுடையவன், என்பதையும் வில்லிபுத்தூரார் நமக்குக் காட்டுகிறார். தவநிலைச் சருக்கத்தில் அர்ச்சுனன் சிவபெருமானைக் காணவேண்டுமென்று நல் நெஞ்சினனாய் உள்ளத்தை ஒரு நிலைப்படுத்தி, சிவனின் திருவுருவத்தை உள்ளத்தில் எண்ணி, உடல் புளகம் அடைய நின்றான் என்பதை

" கருந்துறுகல் எனக்கருதிப் பிடியுங் கன்றும்
களிற்றினமும் உடனுறிஞ்சக் கறையான் ஏறி என்றும்
பரிந்து வெயில்நாள் மழைநாள் பனிநாள்
என்று பாராமல் நெடுங்காலம் பயின்ருன்
மண்ணில் அருந்தவம் முன் புரிந்தோர்களில்,
இவனைப் போன்று, மற்று ஆர்புரிந்தார்"

என்று ஆசிரியர் கூறும் சிறப்பு, அருச்சுனனது அற நெறியை, எடுத்துக் காட்டுவதாகின்றது. உலகில், மக்கள் அருச்சுனனை காமுகன் என்று மதித்து குறை கூறுகிருர்கள். ஆனுல் வில்லிபுத்தூரார், அருச்சுனனை ஓர் கற்பு நெறியாளன் என்று கூறி நிலை நாட்டும் சிறப்பு வியத்தற்குரியது. ஊர்வசி, வலிய அருச்சுனனை நாட, காமவிரகதாபத்தில் அவனை அடைய முயன்றும், அருச்சுனன் மறுத்து சாபத்திற்குள்ளானுன் என்பதை அறியும்படி செய்கிருர். ஆகவே அருச்சுனன் அறம் போற்றும் பெற்றியாளன் என்பதில் ஐயமில்லை.

வில்விசயன்

பாண்டவர்களும் கௌரவர்களும் துரோணர் என்ற ஆசிரியரிடம் விற்பயிற்சி பெறுகின்றனர். துரோணர் விருப்பு வெறுப்பின்றி யாவருக்கும் ஒரே நிலையில் பயிற்சி அளிக்கிருர். ஆயினும் பாண்டவர்களுள் ஒருவனுன அருச்சுனன் விற் பயிற்சியில் சிறந்து விளங்குகிருன். அவனுடைய வில்லாற்றல் இராமனுடைய வில் ஆற்றலைப் போல் சிறந்து விளங்கியது. அருச்சுனனது வில்லாற்றலுக்கு முன் துரியோதனன் முதலியோருடைய ஆற்றல், கதிரவன் முன் மின்மினிபோல் ஒளி மழுங்கித்

தோன்றுகிறது. அதைக் கண்ட துரோணர் அருச்சுன னிடம் பேரன்பு கொள்கிருர். அவனது வில்லாற்றலை வில்லிபுத்தூரார்

"வெஞ்சிலையினுல் இவன் இராகவனை ஒக்கும் என
விசயன் விசயத்தின் மிகவே எஞ்சிய குமாரர்கள்
பொருமையின் மிகுந்தனர்
இரவி எதிர் மின் மினிகள் போல் அம் சொல் முனிதானும்
இவன் மேல், எவரினும் பெருக அன்புடையனுகி ஆகலான்"

என்று வில்லியார் விளக்கும் சிறப்பு-அருச்சுனன் வில் விசயன் என்பதை எடுத்துக்காட்டுவதாகின்றது. பின் ஆசிரியரின் கணையாழியை எடுத்ததிலிருந்தும், ஏனை யோருடன், இலைகளை ஒரே அம்பினுல் துளைத்ததிலிருந் தும், அருச்சுனது வில்லாற்றலை அறிந்துகொள்கிருேம். குருவுக்கேற்ற சீடன் என்பதை, ஆசிரியரை முதலை பற்ற, மற்றவர்கள் திகைத்து மறுக்க, அருச்சுனன், முதலையிடத்திலிருந்து விடுவித்துத் தன் குரு விசுவாசத் தைத் தெரிவித்துக்கொண்டான் என்றும், யாகசேனன் என்பவனை வென்று ஆசிரியர் கட்டளைக் கேற்பப் பணிய வைத்தான் என்பதிலிருந்தும், அவனது குரு விசுவாசம் தெரிவதாகிறது. இதன் மூலம் அருச்சுனனைச் செயலாற்றும் வீரனுக, வில்லிபுத்தூரார் நமக்குக் காட்டு கிருர். கடமை வீரன் மட்டுமல்ல, கர்மவீரனுகவும் அருச் சுனன் காட்சி தருகிருன்.

கர்மவீரன்

பாண்டவர்களைத் தக்க சமயத்தில் காப்பாற்றும் தகுதி படைத்தோன், சகோதர வாஞ்சையால் பகை

வர்கள் யாரேயாயினும் பழிக்குப் பழி வாங்கும் உண்மை வீரனுகவும் காட்சி தருகிறுன். கர்ணனையும், அசுவத்தாமாவையும் போர்க்களத்தில் வெற்றி கொள்ளுகிறுன். ஆசிரியர் துரோணருடன் போரிடும் நிலே, கற்றுக் கொடுத்த ஆசிரியரிடமே தன் ஆற்றலைக் காட்டும் நிலை ஏற்பட்டதே என்று வருந்தி சோர்வுறுகிறுன். ஆனுல் போரில் வெற்றி பெறுவதே வீரனுக்கு அழகு என்று ஆசிரியருடன் போரிட்டு வெற்றி பெறுகிறுன் என்று வில்லியார் கூறும் சிறப்பு மேலும் அருச்சுனனது பண்பை உயர்த்துவதாகின்றது. வஞ்சித்து வாழ்வை அழித்த துரியோதனுதிகளைப்பழிக்குப்பழிவாங்கவேண்டுமென்று எண்ணிய அருச்சுனன், பொறுமையின் அணியாக விளங்கும் தருமர் முன்பு "பொறுத்ததெல்லாம போதாமல் இன்னும் அறம் உரைப்பது தகுமோ. திரௌபதியின் கூந்தலை எந்நாள் முடிப்பது. திரௌபதியைத் துகில் உரிந்தபோது அவள் கூவிய, நீண்டானே! கரியானே! நிமலா!! என்ற சொற்களைக் கேட்டும் வாளாயிருப்பது நியாயமா,! பகைவர்களிடம் நாம் இரந்து நாட்டைப் பெறலாமா; தேவர்களேயாகட்டும் அசுரர்களேயாகட்டும், அவர்களை ஒழிப்பதற்கு என் கையிலே கணை உள்ளது. வேண்டியது அறமா-போர் நிலையா. உவர் நிலத்தில் எந்தப் பயிரைச் செய்தாலும் பலன் கொடுக்குமா? பாம்புக்குப் பால் வார்த்தாலும் அது நஞ்சைத் தவிர வேறு நல்ல பயனைத் தருமா" என்று வீறு கொண்டு அருச்சுனன் கூறியதாக, வில்லியார் நமக்கு அருச்சுனனைக் கர்ம வீரனுகக் காட்டுகிறுர். நீதியின் உருவாக வந்த உத்தம வீரன் என்பதையும் எடுத்தியம்புகிறுர். துரியோதனுதிகளுடன் போர்

தொடுக்க அருச்சுனன் போர்க்களம் நோக்கிச் செல்லு கிறன். கிருஷ்ணன் தேரோட்டியாக அமைகிறன். போர்க்களத்தில், அருச்சுனன் உற்றர் உறவினர்களேயே காண்கிறன். அவர்களுடன் போர் செய்தல் பாவம் என்று கருதிப் போர் செய்ய மறுக்கிறன். அப்போது கண்ணபிரான், அருச்சுனனுக்கு உண்மைகளேக் கூறி, ஐயங்களே அகற்றி, அவனேச் சூழ்ந்துள்ள மாயையை நீக்குகிறர். அருச்சுனனுக்கும், கண்ணபிரானுக்கும் நிகழ்ந்த உரையாடலே, பகவத்கீதை. அருச்சுனனுடைய மனத்தைத்தெளிவிக்கும் பொருட்டுத்தோன்றியதாயினும் அது உலக மக்களுடைய மனத்தையெல்லாம் தெளிவிக் கும் நூலாக உள்ளது. எக்காலத்தவர்க்கும், எக்கொள் கையினர்க்கும், எந்நாட்டவர்க்கும் ஏற்ற உண்மைகளேக் கூறும் நூல் அது. "பகவத்கீதை" — கடவுளின் பாடல் என்ற பொருளில் விளங்குகிறது. அருச்சுனன் காரண மாக உலகம் உய்வு பெற ஒப்பற்ற நூல் ஒன்று எழுந் துள்ளது என்பதை வில்லிபுத்தூரார் "வந்த ஆன் றிம்பால் நெய் போல், உயிர்க்கு உயிராகி வாழும், பந்தமது உணர்ந்து, நேரே பார்க்குங்கால் பகையார்? நண்பு ஆர்? என்று கண்ணன் கூறித் தெளிவிக்க அருச்சுனனும் போர் புரிய ஆயத்தமாகின்றன் என்பதை

"கையில் வாளி தொலேந்த பின் காய்ந்து தம்
மெய்யில் வாளிகள் வாங்கி வில் வாங்கினர்

என்று அருச்சுனனது போர்க் கோலத்தைக் காட்டும் அழகு சிறப்புடைத்து. இதையே வள்ளுவரும்

"கைவேல் களிற்றெடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்"

என்று கூறுகிறார். இக் காட்சி நம்மைக் குருக்ஷேத்திர போர்க்களத்திற்கே கொண்டு செல்லுகிறது.

பாரதப் போரில் பெரும் பங்கு வகித்தவன் அருச்சுனனே. ஏனையோரிலும் அருச்சுனன், ஆரம்ப முதல் இறுதிவரை தளர்வுறாது மனத்திண்மையுடன் போர்க்களத்தில் தக்க சமயத்தில் தோன்றி பகைவர்களை அழித்து, வெற்றியைத் தேடிக் கொடுக்கும் செம்மல். வீரமாண்பு கொண்ட கர்ணனைக் கொன்ற நிலையில் தன் அண்ணன் என்று அறிந்து கதறும் காட்சி உள்ளத்தை உருகச் செய்வதாகும். போர்க்களத்தில் தன் அருமை மகன் அபிமன்யு மாண்டு விட்டான் என்ற செய்தி கேட்டு, விறிட்டு அழுது புலம்பும் காட்சியை என்றுமே மறக்க முடியாது. மைந்தன் அபிமன்யுவை போருக்கு அனுப்பியது தவறு என்று தருமருடன் வாதிடும் காட்சி, அருச்சுனனது வாஞ்சையைப் புலப்படுத்துவதாகும். வில்லிபுத்தூரார், அருச்சுனனை ஆணழகன் என்றும் வில்விசயன் என்றும், கடமை வீரன் என்றும் அற நெறியாளன் என்றும், தியாக உள்ளத்தினன் என்றும், கர்ம விரன் என்றும், வர்ணித்துக் காட்டும் மாண்பை நாம் போற்றாமல் இருக்க முடியாது. ‘வில் விசயன் வெற்றி விசயனே’

அடுத்து வில்லியார் திரௌபதியின் மண நிகழ்ச்சியை ஓர் ஓவியம் போல் தீட்டிக் காட்டுகிறார். தருமருக்கு இளவரசுப் பட்டம் சூட்டப்படுகிறது. இதைக் கண்ட நூற்றுவருள் மூத்தவனான துரியோதனன் பொறாமைப் படுகிறான். தன் தந்தை திருதராட்டிரனையும், மனம் மாறும்படி செய்து, தன் பக்கம் சேர்த்துக் கொள்ளு

கிருன். புரோசனன் என்ற அமைச்சனின் உதவியோடு, பாண்டவரைக் கொல்லச் சூழ்ச்சி செய்கிருன். அச்சூழ்ச்சியின்படி வாரணுவதம் என்ற நகரில், பாண்டவர் வசிக்க ஓர் அரக்கு மாய மாளிகையைக் கட்டி, யாரும் அறியாதவாறு சிற்பியிடம் ஓர் சூழ்ச்சி செய்யும்படி ஏற்பாடு செய்கிருன். இதைப் பாண்டவர்கள் உணர்ந்து, அமைச்சனுகிய புரோசனனிடம் கேட்டு, உண்மையை அறிந்து கொண்டு, அரக்கு மாளிகையில் தீ வைத்து, தங்களை அழிக்க முற்படு முன், தப்பிச் செல்ல வழியறிந்து கொண்டனர். அந்த அரக்கு மாளிகை கட்டும் காலத்தில் தப்பிச் செல்லவென அமைத்த தூண் ஒன்று உள்ளது என்பதை அமைச்சன் மூலம் அறிந்து, ஒருநாள், விமன், அந்த அரக்கு மாளிகைக்குத் தீ வைத்து, தன் உடன் பிறந்தார்களுடனும், தாயுடனும், வெளியேறி, அந்தணர் வடிவில், காட்டிலே மறைந்து வாழ்ந்து வந்தார்கள். மன்னரும், மக்களும் பாண்டவர்கள் எரிந்து போயினர் என எண்ணி வருந்தினர்.

இந்நிலையில் திரௌபதியின் திருமணத்துக்கு நாள் குறிக்கப்பட்டது. அந்தணர் வடிவில் வாழும் பாண்டவர்கள் செய்தி அறிந்தனர். திரௌபதியை மணம் முடிக்க, பாஞ்சால நகர் நோக்கிப் புறப்பட்டனர். பாண்டவர்கள் வருகை யறிந்து, இயற்கை மகிழ்ச்சி கொள்ளுகிறது என்று ஆசிரியர் கூறும் சிறப்பு அவரது கவிதைச் சிறப்பை எடுத்துக் காட்டுவதாகும்.

பாண்டவர்கள் நீண்ட தூரம் இரவில், துன்பத்துடன், கல்லிலும், முள்ளிலும் நடந்து வருகிருர்கள். பாஞ்சால நகரின் எல்லையை அடையும் பொழுது, கதிர

வன் எழுகிறன். கதிரவன் எழுச்சியால் இரவுப் பொழுது நீங்கி மக்கள் மனம் மலர்ந்தது. உலகெங்கும் ஒளி பரந்து விளங்கிற்று. குளங்களும், சோலைகளும் பறவைகளும் விலங்குகளும் மகிழ்ச்சி அடைந்தன. இவ்வாறு, காலையில் நடைபெற வேண்டிய நிகழ்ச்சிகள் ஒழுங்குடன் நடந்தாலும், இருண்ட நிலையில் இருந்த உலகத்தையும், அனைத்து இயற்கைப் பொருள்களையும், கதிரவன் தன் வரவால் ஒளி பெறச் செய்து, விளக்கமுறச்செய்தது, இது வரை துன்பத்தால் வாழ்வு இருட்டில் மூழ்கி யிருந்த பாண்டவர்களின் வாழ்வும், மனமும், கதிரவனின் ஒளியால், மலர்வுற்று, இருள் நீங்கியது போல் அமைந்துள்ளது என்பதை வில்லியார்,

" கங்குல் போதும் பொழிதரு பனியும் சேரப் புலர்ந்தன
மனமும் கண்ணும் மலர்ந்தன திசையும் பாரும் வயங்கின
தடமும் காவும் அலர்ந்தன புள்ளும் மாவும் ஆர்த்தன
குருகும் பேடும் கலந்தன முரசும் சங்கும் கலித்தன '

என்று கூறுகிறர்.

பாண்டவர்கள், வருகின்ற பொழுது பல நிகழ்ச்சிகளைக் காண்கிறர்கள். அனைத்தும், நன்னிமித்தங்களாகவே தோன்றுகிறதாம். மனத் துன்பத்தில் வரும், பாண்டவர்களை, அவைகள் வரவேற்பது போலத் தோன்றுகிறதாம். புலவர், இலக்கியத்தில் தாங்கள், கண்ட நிகழ்ச்சிகளை, கூறும் கருத்தோடு இயைத்து, அதன் மேல் ஏற்றிக் கூறுதல் மரபு. இதை தற்குறிப் பேற்ற வணி என்று கூறுவார்கள். சங்க இலக்கியமாகிய சிலப்பதிகாரத்திலும் இத்தகைய நிகழ்ச்சிகளைக் காண்கிறேம். இளங்கோவடிகள், சிலப்பதிகாரத்தில், துன்ப

நிகழ்ச்சிக்கு ஏற்ப, இயற்கைக் காட்சியை இயைபுபடுத்திக் கூறியுள்ளார் மாதவியைவிட்டுப் பிரிந்த கோவலன், கண்ணகியை அழைத்துக் கொண்டு, மதுரை நோக்கி வருகிருன். அக்காலே, மதுரையை நெருங்கிக் கொண்டிருக்கிருர்கள். வையை என்னும் பொய்யாக் குலக்கொடி, தன் சிறப்பை ஏந்தி, கரையில் நிற்கும் மரங்களும், செடிகளும், மலரைத் தூவ, நீரை நிரப்பிக்கொண்டு ஓடிக்கொண்டிருக்கிருள். இது இயல்பான நிகழ்ச்சி. தன் வழியே ஓடிக் கொண்டிருக்கும் வையைக் காட்சியை, இளங்கோவடிகள், கோவலனும், கண்ணகியும், மதுரையில் அடையப் போகும், துன்ப நிகழ்ச்சியை முன்னதாகவே உணர்ந்து, பொருது, முன்பு அவர்களுக்கு அறிவிப்பவள் போல், தன் மலர்க் கண்களிலிருந்து, கண்ணீரைச் சொரிந்து கொண்டும், அவர்களேக் காணக் கூடாது என்பதால், மலர்களால் தன்னே மறைத்துக் கொண்டும், ஓடுகிருள் என்று தன் குறிப்பை ஏற்றிக் கூறியுள்ளார். இதை இளங்கோவடிகள்

"தையற் குறுவது தானறிந் தனள்போல்
புண்ணிய நறுமல ராடைபோர்த்துக்
கண்ணிறை நெடுநீர் கரந்தனள் அடக்கிப்"

என்று கூறுவாராயினர்.

இது போல மற்ருெரு காட்சி பாண்டியனது நகர், மதிலால் சூழப்பட்டுள்ளது. அந்த மதிலின் மீது, பல வெற்றிக் கொடிகள் நாட்டப்பட்டுள்ளன. தென்றலின் இனிமை அக்கொடிகளே அசையும்படி செய்கிறது. அவ்வாறு, அக் கொடிகள்-அசைவது, மதுரை நோக்கி வரும் கோவலனேயும், கண்ணகியையும், 'வரவேண்டாம்' 'வரவேண்டாம்' என்று கூவித் தடுப்பது போல்

உள்ளது என்றும், பின் மதுரையில், அவர்களுக்கு ஏற்படப் போகும் தீங்கை எடுத்து விளக்கு முகமாக கைகளாகிய தன் திரை மூலம், அசைத்துக் காட்டியது என்றும், ஆசிரியர் விளக்கிக்காட்டுகிறார். இந்நிகழ்ச்சிகள் தீய நிமித்தங்களை, எடுத்துக் காட்டுவது. ஆனால் வில்லி யார், நன்னிமித்தங்களை எடுத்து ஓவியம் போல் தீட்டு கிறார்.

அதிகாலையில், மலரும் தாமரையைப் பாண்டவர் கள் காணுகிறார்கள். தாமரை அரும்பு மலருஞ் சம யத்தை எதிர்பார்த்துக் கொண்டு, வண்டின் கூட்டம் சுற்றி அலைகின்றன. ஒரு வண்டு மட்டும், தன் சிறகு களால், அத்தாமரை அரும்பின் இதழ்களை நெகிழ்த்தி அதனுள்ளே புகுந்து இனிய தேனைப் பருகுகிறது. இச் செயலைப் பார்த்த பாண்டவர்கள் அதனைத் தமக்கு நேர்ந்த நல்ல நிமித்தமாகக் கொள்ளுகிறார்கள். இதில் உள்ளுறை ஒன்று பொதிந்துள்ளது. தாமரை அரும் பைச் சுற்றிப் பல வண்டுகள் வட்டமிடுவது போல, திரௌபதியின் மணத்திற்குப் பல அரசர்கள் வந்து, சுயம்வரத்தில் திரௌபதியை மாலையிட வட்டமிடுகின் றனர். பல வண்டுகள், நெடிது முயற்சித்து, வறிதே போக, ஒருவண்டு மட்டும் அதனை யடைந்து தேனைப் பருகியது போல, மற்ற அரசர்கள் முயன்று இலக்கை எய்ய முடியாது போக, அருச்சுனன் மட்டும், இலக்கை எய்து, திரௌபதியை மாலை சூட்டி மணம் முடிக்கிறான். திரௌபதியைக் கருதி வந்த பலர் வாளா நிற்கத் தாம் தடையறச் சென்று அவளைப் பெற்று மகிழ்தல் கூடும் என்பதற்கு அவ்வண்டின் செயலை ஒரு அறிகுறியாகக் கருதினர், என்பதை ஆசிரியர்

"வெறிபடு முளரி மொக்குள் விரிபதன் நோக்கிச்
சுற்றும் பொறி வரி வண்டின் ஈட்டம் புறத்து இருந்து இரங்க
வண்டு ஒன்று இறகரால் வீசி உள்புக்கு இன்மதுநுகர்தல்
கண்டு நெறியில் நல் நிமித்தமாக நெஞ்சு உற நினைந்து சென்றார்"

என்று எடுத்துக் காட்டுகிறார்.

அடுத்து ஒரு நிகழ்ச்சியைக் கண்டு மகிழ்ந்து செல்லுகிறார்கள். திரௌபதி தமக்குத்தான் மாலையிடுவாள் என்று கருதி அரசர் பலர் வந்து சூழ்ந்து நிற்கத் தாம் தடையறச் சென்று, அவர்களைப் பயன் அடையாது செய்து, அவளை சுயம்வரத்திலே வெற்றிகொண்டு, கவலையில்லாது வாழலாம் என்பதற்குச் சான்றாக, மாங்கனியைமற்ற மீன்கள் கவராதவாறு, வாளைமீன் கவர்ந்த நிகழ்ச்சியை, பாண்டவர் வழியில், ஓர் நீர்த்துறையின் ஓரத்திலே கண்டதாகக் கூறவரும் ஆசிரியர், மரத்திலிருந்து மாம்பழம் விழுந்ததைக் கண்ட மீன்களெல்லாம், அதனை உண்ணலாமென விரைந்துவர, ஒரு வாளைமீன், நீரைக் கிழித்துக்கொண்டு வேகமாக வந்து, அவற்றை வென்று, அம்மாங்கனியைத் தன்வாயாற் கவ்விக்கொண்டது என்று சிறப்பித்துக் கூறுகிறார். அந்நிகழ்ச்சியை

"வண்துறை மருங்கின் ஓர் மாங்கனி வீழ்தல் கண்டு
தண்துறை மீன்கள் எல்லாம் தம்தமக்கு இரையென்று எய்த
ஒருவாளை உறைவிண்டுகிழிய ஓடிவென்று தன்வாய்க்
வலிமைநோக்கி குறிப்பினால் உவகை உற்றார்" [கொண்டு

என்று எடுத்துக் காட்டுகிறார்.

பாண்டவர்களை, ஒரு நாடகக் கூட்டமே வரவேற்றது என்று கூறுகிறார். பாண்டவர்கள் வருவதை அறிந்து, குயில் பாடியது என்றும், மயில் ஆடியது

என்றும், இனியாரும் திரௌபதியை அடைய முடியாது என்று கருதிப்பறவை இனங்கள் மகிழ்ச்சியால் ஆர்த்தன என்றும் கூறிச் சிறப்பிக்கின்றார். காவிரி நடந்து செல்லும்போது, அவளது ஓசைக்கேற்ப, நடனமாதாக மதித்து, குயில் இசைத்தது என்றும், மயில் ஆடியது என்றும் அந்நிகழ்ச்சிகளைக் கண்டுகொண்டே சென்றாள் என்றும், இளங்கோவடிகள் கூறுகிறார்.

" பூவார் சோலை மயில்கள் ஆலப்
புரிந்து குயில்கள் இசை பாட
காமர் மாலை அருகசைய
நடந்தாய் வாழி காவேரி "

என்பதாகும். அந்நிகழ்ச்சி போலவே வில்லியார் "திரௌபதியின் திருமணக் காட்சியைக் காண்பதற்கு அரசர் எல்லாரும் வந்தார்கள். வந்து என்ன பயன். பாண்டவர்களே நீங்கள் அவளை மணம் புரிவதற்கு விரைவாக வாருங்கள்" என்று அழைப்பனபோல் குயில்கள் கூவின என்பதை

" மாக்குரல் அளகம்வல்லி வதுவையின் அழகுகாண
தாக்குஉரல் அடிகொள்யானைத் தரணிபர் எவரும் வந்தார்
வீக்கும் நல்மிளிர் பொன்பூணீர் விரைவுடன் வம்மின் என்று
கூக்குரல் விளிப்பபோலும் கோகிலக் குரலும் கேட்டார் "

என்று, சித்திரப் படாகத்தில் தீட்டும் ஓவியம்போல் வில்லியார் தன் சொல்லோவியத்தை தீட்டிக் காண்பிக்கிறார். மற்றவர்கள், மணத்தைக் காணவே வந்துள்ளார்கள். பாண்டவர் மட்டும், மணமாலையிட வந்துள்ளார்கள். இயல்பாகக் கூவுகின்ற குயிலைப் பாண்டவரை வரவேற்றுக் கூவுவதாகக் கவிஞன் கூறுவது அழகாகும்.

திரௌபதியின் திருமணம் நிறைவுறும். பாண்டவர்களே மணந்துகொள்வார்கள். மற்றைய அரசர்கள் அதுகண்டு, வெட்கி, மானக்கேட்டைப் பொறுக்க மாட்டாது, ஓடப்போகிறார்கள், என்று மயில்கள் கருதி, மகிழ்ச்சியால் கூத்தாடின என்பதை

"இவர்க்கு உண்டாகும் கொற்றவர் குறை பொருது
ஓடுதல் உண்மை, என்று தோகைகள் ஓகையோடும்
ஆடுதல், நோக்கி, நோக்கி அகமகிழ்ந்து ஏகினார்"

என்று கூறுவாராயினர்.

பாண்டவர்கள், இறுதியாக ஓர் காட்சியைக் கண்டு உறுதியால் மனம் மகிழ்கிறார்கள், உலகில் எதுவும் தனித்தனியே வாழ்வதில்லை. ஒருவர், ஒருவராகப் பிறக்கிறார்கள். பின் இருவராக இணைகிறார்கள். இது உலக மரபு., ஒன்றுக்கொன்று துணை உண்டு. அதே நிலையில் தாம் திரௌபதியை மணந்து, கூடிக்கலந்து இன்பந் துய்க்கப் போவதை முன்பாகவே, வண்டு மலரில் மொய்த்து தேனை உண்ணும் நிகழ்ச்சியாலும், பறவைகள் நீரிற் குடைந்து விளையாடும் நிகழ்ச்சியாலும், விலங்குகள் துணையோடு மேவுதலாலும், மரங்கள் கொடிகளைத் தழுவுதலாலும், அறிந்து, தங்கள் கருத்தை உறுதிப் படுத்திக் கொள்ளுகிறார்கள். இதை ஆசிரியர்

"கா எலாம் மருங்குதோறும் பூ எலாம் சுரும்பு மொய்ப்ப
புனல் எலாம் புள்ளுவைக மா எலாம் துணையின மேவ
மரன் எலாம் வல்லிபுல்ல ஏ எலாம் பயின்றவில்கை
ஏறுஇளஞ் சிங்கம்போல் வார்கண்டு கண்களித்து நின்றார்"

என்பதாகக் கூறுகிறார்.

வில்லியார், தம் காப்பியத்தில், இயற்கைக் காட்சிகளைப் படிப்போர் உள்ளம் ஏற்றுக்கொள்ளும் வகையில் தக்க இடத்தில், தக்க உவமை நலத்துடனும் எழிலுடனும், பொருள் பொதிந்த கருத்துக்களை எடுத்துக் காட்டுவது, அவரது நாவன்மைக்கு ஓர் சிறப்பாகும். காப்பியத்தின் எழிலையும், சிறப்பையும், இத்தகைய காட்சிகள், உயர்வு அடையும்படி செய்கின்றன.

★

10. நாலடி காட்டும் நல்வழி

சிறப்புப் பெற

நமது அருமைத் தமிழ் மொழியில் பலவகைப்பட்ட நூல்கள் உள்ளன. அவற்றுள் அறநூல்கள், நீதிக் கருத்தை உலகிற்கு எடுத்தியம்பும் நூல்கள் உலகப் புகழுடனும் சிறப்புடனும் போற்றப்படுகின்றன. அற நூல்கட்கெல்லாம் தலையாய நூலாய், திலகம்போல் விளங்குவது திருக்குறள் ஆகும். திருக்குறளை அடியொற்றி அறநூல்கள் பல தோன்றின. அவற்றுள் திருக்குறளுக்கு அடுத்துப் போற்றப்படும் நூல் நாலடியார் ஆகும். "நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி" என்று வழங்கும் பழமொழியின் சிறப்புக்குரிய நாலடியாரும், திருக்குறளும் ஒருங்கே மக்கள் மனத்தில் பதிந்து மக்களால் போற்றப்படுகின்றன என்பதை அறிகிறோம், ஆகவே அத்தகைய சிறப்புக்களைக் கொண்ட நாலடியார் கூறும் பொருள் உரைகளை அறிதல் வேண்டும். நம்போன்ற இளைஞர்கள், மாணவர்கள், நல்வழியைப் பின்பற்றி, தீயவழிகளை அகற்றி, உலகில் சிறப் பெய்த வேண்டுமானல், நாலடியார் போன்ற சிறந்த அறக்கருத்துக்கள் கொண்ட நூல்களைப் பயில வேண்டும். மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும், வாழ்வில் வளம் காண்பதோடு, சிறப்புடனும் வாழ வேண்டும் என்ற கருத்தை நாலடி வாயிலாகக் காண்போம்.

சீரும் சிறப்பும் வேண்டுவது இன்றியமையாமை. நாம் செய்யக்கூடிய வினைகளின் காரணமாகச் சிறப்பு

வந்து எய்துவது இயல்பு. அவரவர் செயல்களில் சிறப்பு பொதிந்திருப்பது உண்மை. அந்தச் சிறப்பைச் சிறப்பு என்று பிறர் கூருதிருப்பினும் நாம் புரியும், பிறர்க்குச் செய்யும் செயல்கள் மூலம் நாம் சிறப்பெய்தினுல் அதுவே கைம்மாறு கருதாக் கடப்பாடாகும். பிறர் கூற வேண்டும், வாழ்த்த வேண்டும் என்ற எண்ணத்தில் பலருக்கு உதவியும், இன்சொல்லும், அறமும் புரிந்து சிறப்படைய விரும்புவது அறவில வணிகத்தன்மை யாகும். பிறரறியாது மாற்ருர் வியக்கத்தகு வகையில் உலகத்தில் சிறப்பெய்த வேண்டும் நாம் செய்யும் செயல்களால், சிறப்பு என்று பிறர் கூருதிருப்பினும் நமது உள்ளத்தளவிலேயே அது சிறப்பாக இருந்தால் போதும். உள்ளம் நிறைந்தால் அதுவே சிறப்புடைய செயலாகும். பிறர் கூறவேண்டி நாம் எதிர்பார்த்து சிறப்படைவதைக் காட்டிலும், நமதுள்ளம் நம் செயல்களைக்கண்டு சிறப்புடைய செயல் என்று கூறினுல் போதும்.

பிறருக்கு உதவி செய்வது, துன்பத்தில் இன்பம் காண்பதே சிறப்பு. ஒருவருக்குத் துன்பம் நேரிடுங்கால் அத்துன்பத்தை நீக்க நம்மால் முடிந்தவரை முயன்று உதவிசெய்ய வேண்டும். அவரால் பயன் உண்டா என்று எண்ணுமல் பயன் இருப்பினும், இல்லாதிருப் பினும், துன்பத்தைப் போக்கி அவர்கள் வாழ்வை இன்ப மடையச் செய்வதே சிறப்பு. அத்தகைய உள்ளப் பண் புடையவர்களே மனிதப் பிறவியின் பயனை எய்தியவர்க ளாவார்கள். சிறப்புடைய வாழ்வை எய்தியவர்களு மாவார்கள். அந்த நிலையில் தமர் என்றும், பிறர்

என்றும் பாகுபாடு செய்யாது எவர்க்கும் எந்தச் சமயத்திலும் துன்பம் தீர்க்க முயல்பவரே சிறப்புடையவர் ஆவர். பாகுபாடு செய்யாது, உலகப் பொதுமையில் உதவி செய்வதே சிறப்பு எய்துவதற்கு முதற்படி. மரம் தன் நிழலையும் பழத்தையும் தமர்—பிறர் என்று பகுத்துப்பலன் அடையச் செய்யாதது போல சிறப்புடையவர்கள் பதில் உதவி கருதாது வேண்டுபவர், வேண்டாதார் என்று பாகுபாடு செய்யாது, துன்பம் தீர்க்க முன் வருவார்கள் என்ற கருத்தை—நீதிக் கருத்தை அறன் வலியுறுத்தும் வகையிலே நாலடி நமக்கு அறிவுறுத்துகிறது. அத்தகைய நிலையே சிறப்பெய்தும்நிலை. ஒருவன் இரந்தவர்க்குக் கொடுத்து, வறுமையைப் போக்க முற்பட வேண்டும். அதுவே சிறப்புடையவர்களது செயலுமாகும். ஈயாதவனுக்கு இவ்வுலகில் இன்ப வாழ்வில்லை என்றும் ஈயாதவனை அவனது செல்வம்கூட இகழும் என்பதை

"துய்த்துக் கழியான், துறவோர்க் கொன்று
ஈகலான் வைத்துக் கழியும், மடவோனை—வைத்த
பொருளும், அவனை நகுமே, உலகத்து
அருளும் அவனை நகும்"

என்ற நாலடிக் கருத்து விளக்குகிறது. ஈயாத செல்வர்க்குப் பல துன்பங்கள் வரும் என்றும், ஈயாத வாழ்வு சிறப்படையாது என்றும் நாலடி கூறுகின்றது.

நுகரப்படும் பொருள்கள் இல்லாதவர்கள் உலகில் வறுமை உறுவது இயல்பு. அத்தகைய வறுமையை பொருள் உள்ளவர்கள், பொருளால் அவர்களது வறுமையை அகற்ற வேண்டும். வறுமையுற்ற காலத்தில்

சிறப்பெய்தல் முடியாது. பொருள் இல்லையேல் வறுமை தானே வந்தடையும். வறுமை என்ற சிறுமை சிறப்பு வந்து எய்த விடாது என்பதை,

“ பிறந்த குலம்மாயும் பேர் ஆண்மை மாயும்
சிறந்தம் கல்வியும் மாயும்—கறங்கு அருவி
கல்மேல் கழூஉம் கணமலை நல்நாட
இன்மை தழுவப்பட் டார்க்கு ”

சிறப்பெய்த வேண்டுமானால் மானத்தைப் பெரிதாகக் கருத வேண்டும். மானம் பறிபோகும் செயல்களைச் செய்யாமலும், பிறரின் மானங்காக்கும் செயல்களில் ஈடுபட்டு உயர்வடைவதே சிறப்பெய்தும் நிலை. எந்நாளும் தம் நிலையிலிருந்து தாழாது வாழ்பவரும், வினைப் பயனால் தாழ்வு வரின் உயிர் வாழாதவர்களும் சிறப்பெய்துவார்கள் என்ற கருத்தையும் நாலடியார் நமக்குப் போதிப்பதாகும்.

சிறப்பு உடையவர்களுக்கு இயற்கையிலேயே ஈகை, இரக்கம் போன்ற குணங்கள் உண்டு. தமிழர்கள் சங்ககாலம் முதற் கொண்டு தங்கள் வாழ்வை அறவாழ்வாக, அருள் வாழ்வாக, வாழ்ந்து காட்டிப் பின் வரும் நம் போன்ற இளைஞர்களுக்கும், முதியோர்களுக்கும், முன்னோடிகளாக இருந்து மாண்டு போயினர், அவர்களின் வாழ்வினைப் பின் பற்றி வாழ்வதே மரபும் இயையும் கூட. “வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை” என்றும் “ஈதல் இசைபட வாழ்தல்” என்ற முதுமொழிகளையும் காண்கிறோம். இரந்தவர்க்கு இல்லையென்னாமல் கொடுத்து வாழ்வதே சிறப்புடைய வாழ்க்கை. எதுவும் இவ்வுலகில் நிலையாது. ஆகவே கேட்போர்க்கு இல்லை

யென்றுது கொடுத்து இம்மைப் புகழ்நிலை இய வாழ்தல் வேண்டும் என்றும், செல்வம் நீரில் சுருண்டு வரும் அலை போன்றது என்றும் ஈதலின் இன்றியமையாமை பற்றி :—

"பெயற்பால் மழை பெய்யாக் கண்ணும் உலகம்
செயற்பால செய்யாவிடினும்—கயற் புலால்
புன்னை கடியும் பொருகடல் தண் சேர்ப்ப
என்னை உலகு உய்யுமாறு"

என்ற நாலடிக் கருத்திற்கிணங்க சிறப்பெய்த வேண்டும். பயனை எதிர்பாராமலும் முடிந்த வரை கொடுத்தலி னாலும் ஈவோரது புகழ் பற்றி :—

"அடுக்கிய மூவுலகும் கேட்குமே சான்றோர்
கொடுத்தார் எனப்படும் சொல்"

என்றமையால் சிறப்பு எய்தும் வழியினை நாலடியார் காட்டுவதாகின்றது.

கரும்பின் இன்சுவை கடித்தாலும், அடித்தாலும், பிளந்தாலும், வெட்டித் துண்டுதுண்டாகப் போட்டா லும் அதன் தன்மை குன்றுதவாறு போல சிறப்புடை யார், தம்முடைய இயற்கை எழில் மிகு குணத்தை எந் தச் சமயத்திலும் எந்த இக்கட்டிலும் இழக்க மாட்டார் கள். "முயற்சியுடையார் இகழ்ச்சி யடையார்" "முயற்சி திருவினை ஆக்கும்" என்பதற்கிணங்க இடைவிடாத மெய்ம் முயற்சியுடையவர்கள் எந்தக் குறையும் வராது பாதுகாத்து நிறை செய்யும் திறம் உடையவர்களாவர் கள். முயற்சியுடையவர்கள் பெரு வலிமையின் காரண மாகச் சிறப்பெய்துவர் என்ற கருத்தை "காழ்கொண்ட

கண்ணே களிறணைக்கும், கந்து ஆகும்" "அன்ன தகைத்தே ஒருவன் தாழ்வின்றித் தன்னைச் செயின்" என்ற சிறந்த உண்மைகளை நாலடியார் காட்டா நிற்கின்றது. முயற்சியுடையார்க்கு உலகமே அடங்கும் என்ற உயர்வுச் சிறப்பை "ஊக்கம் ஆராயும் ஒண்மையுடையார்க்குக் கீழ்ப்பட்டது உலகு" என்ற கருத்தின் மூலம் முயற்சியுடையார் சிறப்பெய்துவர் என்று கூறுகிறது. தளரா நெஞ்சத்தார் தரணி புகழ் சிறப்பெய்துவர் என்ற கருத்தை "இசையாது எனினும் இயற்றினார் ஆற்றல், அசையாது நிற்பது ஆம் ஆண்மை" என்று எடுத்துக் காட்டுவதோடு, உலகில் தளராது முயல்பவரே ஆண்மையுடையவர் என்று உலகோர் கூறும் சிறப்புக்கு எடுத்துக் காட்டாவார்கள் என்றும் நாலடி கூறுவது சிறப்புடைத்து.

நூல்களைக் கற்றல் பண்பை வளர்க்கும். கல்வியே நல்ல அழகைத் தரும். கற்றவர் கண் உடையார் என்ற குறள் கருத்திற் கிணங்க நாடோறும் கற்பவரே சிறப்பெய்துவர் என்ற சிறப்பை நாலடியார், கல்வியைக் கொண்டே உயர்வு தாழ்வு கூறுதல் முடியும் என்றும், கடை நிலத்தோர் ஆயினும் கற்றறிந்தோரை தலை நிலத்து வைக்கப்படும் என்றும், செல்வத்தினும் கல்வியே சிறந்தது என்ற கருத்தை "வைப்புழிக்கோட் படா வாய்த்து ஈயிற் கேடு இல்லை என்றும்" நூல் கற்ற மகன் துணையா நல்ல கொளல்" என்றும் சுவர்க்க இன்பத்தினும் சிறந்தது, கற்றவர்களுடன் உரையாடல் என்றும் கற்றோரது நட்பால் கல்லாதவர்க்கும் மதிப்பு உண்டாகும் என்றும் நாலடிக் கருத்துக்கள்

கல்வியின் சிறப்பைக் கூறுவதால் அதை நாள்தோறும் கற்பவர்கள் யாங்ஙனம் சிறப்பெய்தாமல் இருக்க முடியும். கல்வி கற்பவர்கள், விடாது முயன்று கற்பவர்கள் சிறப்பெய்துவர் என்பதில் ஐயமில்லை.

தீமையை விடாது பின்பற்றி இழி செயல்களில் ஈடுபடுவோர் கீழோர். தீய செயல்களை விடாது கொள்கையாகக் கொண்டு வாழ்வது கீழோர் இயல்பு. இத்தகைய கருத்தை நாலடி "குப்பை கிளைப்பு ஒவ்வாக் கோழி போல் மிக்க கனம் பொதிந்த நூல் விரித்துக் காட்டினும் கீழ் தன் மனம் புரிந்தவாறே மிகும்" என்றும் அவர்களது ஆசாரம் அச்சமே எனவும் கூறு நிற்கின்றது. நல்லனவற்றைக் கேட்க விரும்பாதவனும், செல்வத்தால் குணம் மாறும் இயல்புடையோனும் கீழ்மகன் ஆவான். பொற்கலத்தில் உணவு கொடுத்தாலும் நாய் பிறர் எச்சிற்கு இமையாது பார்த்திருக்கும். அதுபோல் பெருமையுடையதாகச் செய்யினும் கீழ்மக்கள் தாங்கள் செய்யும் கருமங்களை வேறுபடச் செய்பவர் "கீழ் தன்னை இந்திரனாக எண்ணிவிடும்" என்றபடி செல்வம் வரின் கீழோர் கர்வம் கொள்வர். பசும்பொன் மேல் மாண்ட மணி அழுத்திச் செய்தாலும் செருப்புத் தன் காற்கேயாம். அது போல எய்திய செல்வம் உடையவராயினும் கீழ்மக்கள் அவரவர் செய்யும் தொழில்களால் வேறுபட்டு, உலகம் இகழக் காணப்படுவார்கள்.

கண்ணோட்டம் என்பது தாட்சண்யம் இது கண்ணோடிய வழியுளதாவதாதலின் "கண்ணோட்டம்" ஆயிற்றென்க. தாட்சண்யம் இல்லாது கடுமையாகச்

சொல்லுதலில் வல்லவர்கள் கீழ் மக்கள். இது அவரவர் களின் இயல்பு என்பதை நாலடியார், கண்ணோடிய வழி. பிறரிடம். இரக்கமோ, ஈகையோ கொள்ளாது, பிறரிடம் இடுக்கண் நேரும்போது, உவக்கும் தன்மையுடைய வர்கள் கீழ் மக்கள் என்றும் கண்டவிடம் சென்று பிறரை இகழ்பவன் கீழ் மகன் என்றும் கண்ணோட்டத் தின் சிறப்பாகவும் கீழ் மக்களின் இயல்பாகவும் கூறுவ தாகின்றது.

சான்றோர், தினை அனைத்தே ஆயினும் செய்த நன்றி உண்டால், பனை அனைத்தாக உள்ளுவார்கள். இதையே குறளும்;

"தினைத்துணை நன்றி செயினும் அதனை
பனைத்துணையாக் கொள்வர் பயன் தெரிவார்"

என்று சான்றோரது இயல்பை நாலடிக் கருத்தோடு விளக்கிக் காட்டுவதாகிறது. சான்றோரை உயர்த்திக் கூறவும், கீழோரது இயல்பை சான்றோரின் இயல்பி னின்று வேறுபடுத்திக் கூறவும் வேண்டி, நாலடியார் எந்த உதவியைச் செய்யினும் நன்றியை மறப்பது கீழோர் இயல்பு என்றும், சிறிய உதவியைச் செய்யினும் அதனைப் பனைமரத்தளவு பெரிதாகச் சான்றோர் எண் ணுவர் என்றும் கூறுவதாகின்றது.

ஆகவே சான்றோர் என்றும் குன்றாத் தன்மையுடை யவர்கள் என்றும், எதையும் பரந்துபட்ட மனத்தோடு "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற பொது நோக் கோடு வாழ்பவர்கள் என்றும் நாலடியார் கூறுவ தாகின்றது. சான்றோர்கள்—பெருந்தன்மையும் - பெருங்

குணமும் உடையவர்கள் என்பதை "நீர்கொண்ட வெப்பம்போல் தானே தணியுமே சீர்கொண்டசான்றோர் சினம்" என்றதால் பெரியோர் கோபத்தைக் கொள்ளார் என்றும், கோபம் வரின் விரைவில் தணியும் என்றும் சான்றோரது இயல்பு கூறியவாறாயிற்று.

திருக்குறளும், நாலடியும் நீதிக்கருத்துக்களை உலகிற்கு எடுத்துப் போதிப்பதாக அமைந்துள்ளன. சங்க காலத்தில் எழுந்த திருக்குறள் இரண்டடிகளால், வள்ளுவர் வகுத்த வாய்மொழிகள் உலக மக்கள் உய்வுபெற தீயவழிகளில் செல்லாது நல்வழிப் படுத்தும் முறையில் கூறுவதாக உள்ளது. அதுபோல் பின் எழுந்த நாலடியாரும், குறள் கருத்துக்களைத் தன்னகத்தே கொண்டு நாலடிகளால் உலக மக்களின் திறம் உயர,இளைஞர்கள் நல்வழியைப் பின்பற்றி நலமுற, நீதிக் கருத்துக்களைப் போதிப்பதாகச் சமண முனிவர்கள் பலரால் பாடப்பட்ட பாக்களைப் பதுமனார் என்பவர் தொகுத்து நமக்குத் தந்துள்ளார். அத்தகைய சிறப்புடைய நாலடியாரை நாம் கற்பதோடு நில்லாது கூறியுள்ள கருத்துக்களின் வழி நடப்போமாக "நாலடி காட்டும் நல்வழி நலம் பெறும் வழிகளாகும்"

5-9-64 அன்று திருச்சி வானொலி நிலையத்தில் ஒலி பரப்பப்பட்டது.

★

11. கூடற் சிறப்பு

ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றுன சிலப்பதி காரம் காவிரிப்பூம் பட்டினத்திலே, பெருங்குடி வணிகர் மரபிலுதித்த கண்ணகி கோவலனது வரலாற்றை உரைப்பது.

'வண்புகழ் மூவர் தண் பொழில் வரைப்பு' எனப் படும் தமிழகத்தின் பகுதிகளாகிய சேர, சோழ, பாண் டிய நாட்டின் இயல்புகளைப் பற்றியும் அவற்றின் தலை நகரமாகிய வஞ்சி, புகார், மதுரை என்பவற்றின் பெரு மைகளையும், அவற்றிடையே ஆட்சி புரிந்த சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் ஒழுக்கங்களையும், குடிகளின் ஒழுக்கம், ஊக்கம், ஒப்புரவாண்மை முதலியவற்றையும் நன்கு புலப்படுத்துவது சிலப்பதிகாரம்.

இதனை இளங்கோவடிகள் சிறப்பாக, அழகாக, பழங்காலத்தின் முறைமைகளோடு, வர்ணித்துக் கூறி யிருக்கிறுர். மற்ற நூல்கள் போல் அல்லாது சிலப்பதி காரம் பண்புடைய பழக்க வழக்கங்களைத் துணிபுடன் கூறக் காரணம், இளங்கோவடிகள் துறவு பூண்ட பின் னரே இயற்றப்பட்டது. இவர் இவ்வரலாறு நிகழ்ந்த காலத்திலிருந்தவராதலால் காவிரிப்பூம் பட்டினத்திலும், மதுரையிலும் நிகழ்ந்தவற்றை அறிந்தோர் வாய்க் கேட் டும் வஞ்சி நகரத்திலும் வடநாட்டிலும் நிகழ்ந்தவற்றை நேரில் கண்டும் கேட்டும் இதனை இயற்றினுராவர்.

அதிலும் இவர் மங்கல வாழ்த்துப் பாடல் முதலிய பத்துறுப்புக்களை உடைய புகார்க் காண்டமும், காடு

காண் காதை முதலிய பதின்மூன்று உறுப்புக்களை யுடைய மதுரைக் காண்டமும், குன்றக் குரவை முதலிய ஏழுறுப்புக்களை யுடைய வஞ்சிக் காண்டமுமாகப் பகுத்து இயற்றியுள்ளார்.

இதில் மதுரைக் காண்டமே சிறப்புடையது. காரணம் இளங்கோவடிகள் காவிரிப்பூம் பட்டினத்தில் வரலாறு நடக்கும்போது இருந்திருந்தும், அதன் சிறப்பைப் பத்துக் காதைகளாகவும் வஞ்சி நகரத்திலும் வட நாட்டிலும் நிகழ்ந்தவற்றை நேரிற் கண்டும் அதை ஏழு காதைகளாகவும் கூறியிருக்கிறார். ஆனால் மதுரைக் காண்டத்தில் கூறப்பட்டுள்ள பதின்மூன்று காதைகளும் அறிந்தோர்வாய்க் கேட்டு இயற்றியதாகும். பிறரால் அறியப்பட்ட கருத்துக்களையே சிறப்பாக மற்றைய காண்ட உறுப்புக்களை விட, அதிகமான காதைகளுடன் கூறி யிருப்பதே மதுரைக் காண்டத்தின் சிறப்புக்கு ஓர் எடுத்துக் காட்டாகும். ஒரு சமயம் இளங்கோவடிகள் நேரிலே கண்டிருந்தால், இன்னும் சிறப்பாகக் கூறியிருக்க முடியும். அதனால் இன்னும் நம் பண்டைய வழக்கங்களை அறிந்திருக்க முடியும். பாண்டிய நாட்டின் வளர்ச்சியும் தெரிந்திருக்கலாம்.

சிலப்பதிகாரத்தின் சிறப்புக்கு மதுரைக் காண்டமே காரணமாகும். சிலப்பதிகாரத்தின் (Central theme) 'கரு' மதுரைக் காண்டமே என்று கூறினும் தவறில்லை.

இனி அடுத்ததாக மதுரைக் காண்டத்தின் சிறப்பு பற்றிக் காணுகையில் உறையூரிலே தங்கிய கண்ணகி,

கோவலன், கவுந்தியடிகள் மூவரும் வைகறையில் புறப்பட்டு, தென்றிசை நோக்கி வருகையில் ஒரு இள மரக்காவுட் புக்கனர். அப்போது மாங்காடென்னும் ஊரைச் சேர்ந்த ஒரு மறையோன், பாண்டியனை வாழ்த்திக்கொண்டு இருக்கிறான்.

" வாழ்க எங்கோ மன்னவர் பெருந்தகை
ஊழிதொ றூழிதொ றுலகங் காக்க
அடியிற் றன்னள வரசர்க் குணர்த்தி
வடிவேல் எறிந்த வான்பகை பொறாது
பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையும் இமயமுங் கொண்டு"
தென்றிசை யாண்ட தென்னவன் வாழி "
(கடுகாண் காதை) 15-22

என்றவாறு அரசன் பாண்டியன் தன் பெருமையின் அளவினை உலகத்து மன்னர்களுக்குக் காலான் மிதித்து உணர்த்தி, வடித்த வேலானும் எறிந்த அப் பெரிய பகையினைப் பொறுக்காது பஃறுளி யாற்றுடன்பல பக்க மலைகளையுடைய குமரி மலையினையும், வளைந்த கடல் கொண்டதனால், வடக்கண் கங்கை யாற்றினையும், இமயமலையையும், கைக்கொண்டு தென் திசை ஆண்ட தென்னவன் பாண்டியன் வாழ்வானாக! என வாழ்த்துகிறான். அக் காலத்தில் மதுரையை ஆட்சி செலுத்திய பாண்டியனது வீரத்தை ஆசிரியர் சிறப்பாகக் கூறுகிறார். அக்காலத் தமிழரசர்கள் தங்கள் எல்லைகளை இழந்துவிட்டாலும் அதை சரிசெய்ய, மற்றைய பகுதிகளின் கண் வெற்றி பெற்றுச் சரி நிகர் ஆக்குவர். என்பதாகத் தெரிகிறது. வீரத்திலே சிறந்து விளங்கியவன் பாண்டியன்

எனவும் நெரிகிறது. இவ்வாறு இளங்கோவடிகள் அந்த மறையோன் வாயிலாக பாண்டிய நாட்டின் சிறப் பையும் அவன் கொடை முதலிய செய்கையினையும் வெளியிட்டுச் சிறப்பித்துக் கூறியுள்ளார்.

பின் இளங்கோவடிகள், பின்னல் நிகழப்போகும் நிகழ்ச்சிகளை முன்னே வைத்துச் சாலினி என்னும் வேட்டுவப் பெண் மூலம் கண்ணகியின் சிறப்புப் பற்றிக் கூறுகிறுர்.

"இவளோ கொங்கச் செல்வி, குடமலையாட்டி
தென்றமிழ்ப் பாவை செய்த தவக்கொழுந்து,
ஒரு மாமணியாய் உலகிற் கோங்கிய திருமாமணியெனத்
தெய்வ முற்றுரைப்ப பேதுறவு மொழிந்தனள் மூதறிவாட்டி
யென்று"

அங்ஙனமாக இந்தப்பெண் கொங்கு நாட்டிற்குச் செல்வ மாக உள்ளவள். குடமலை நாட்டினையாளும் செல்வி. தென் தமிழ் நாட்டின் பாவை. உலகோர் செய்த தவத் தின் கொழுந்து போல்பவளாகிய கண்ணகி இவ்வுல கிற்கு, ஒப்பற்ற முழு மாணிக்கம் போன்று, உயர்ந்த அழகிய பெண்மணி என்று சிறப்பித்துக் கூறுகிறுர். பின் பாண்டியனது வீரத்தைப்பற்றி "வெட்சியுங் கரந் தையும் பாழ்பட வெட்சி சூடுக விரல் வெய்யோனே" என்கிறுர். வேதங்களை அருளிய முதிய முதல்வனுகிய சிவபெருமானுக்கும் பின்னேன் ஆகிய அகத்தியன் எழுந்தருளிய பொறைகளையுடைய உயர்ந்த பொதிய மலையை உடைய பாண்டியன் பகைவருடைய முனையிட மும், அவர் நிரைமிட்டும் தொழிலும், பாழ்படும் வண் ணம் வெற்றியை விரும்புவோனுகிய அவன், வெட்சி

மாலையைச் சூடுவானாக, என்கிறார். பின் பாண்டியனது சிறப்பைக் கூறும்போது கண்ணகி, கோவலன், கவுந்தி மூவரும் பயமின்றி "பாண்டியர் காக்கும் நாட்டிலே புலி முதலிய கொடிய உயிர்களும் சார்ந்தவர்க்கு இடுக்கண் செய்யாவாதலின் பகல் வெயிலிற் செல்லாது இரவு நில வொளியிற் செல்வோம்'' என இரவு வருகையை எதிர் பார்த்திருந்ததாகக் கூறுகிறார். பாண்டியன் ஆட்சியிலே சிறிதும் பயமின்றி மக்கள், தங்கள் வாழ்வை நடத்தியிருக் கிறார்கள் என்பதும் தெரிகிறது.

அடுத்து நாம் புறஞ்சேரியிறுத்த காதையிலே, மாதவி யனுப்பிய கௌசிகன் கோவலனிடம் மாதவியின் ஓலையை நீட்ட அதைப்பார்த்த கோவலன் மாதவி குற்றமற்றவள் என உணர்ந்து, மனத்தளர்ச்சி யடைந்ததையும் காண் கிறோம். இதிலிருந்து கோவலன் மிகுந்த பண்பட்ட உள்ளத்தினன் என்பதை மதுரைக் காண்டமே காட்டு கிறது.

பின் மூவரும் அங்கிருந்த பாணர்களுடன் யாழ் வாசிக்கின்றனர். கோவலன் மதுரை இன்னும் எத் தனை காவதம் உள்ளது எனக் கேட்க அவர்கள் மதுரையைச் சிறப்பித்து

> '' மதுரைத் தென்றல் வந்தது காண்க
> பாண்டியன் மூதூர் அண்மைக் கண்ணதே ''

என்று கூறுகிறார்கள். கூடலின் கண் எழும் பலவகை ஒலியும் கடலொலி போல, எதிர்கொள்ளத் துன்பம் நீங் கிச்சென்று வைகையைக் கடந்து மதுரையின் கண் தங் கினர். புறஞ்சேரி யிறுத்த காதையிலே இளங்கோவடிகள்

மதுரையின் வைகறைப் பொழுதிலே மக்களின் ஆரவாரத்தையும், பாண்டிய மன்னனது சிறப்பையும், மக்களின் மகிழ்ச்சியையும் கூறுமுகத்தான்

"அருந்தெறற் கடவுள் அகன் பெருங்கோயிலும்
பெரும் பெயர் மன்னவன் பேரிசைக் கோயிலும்
பால்கெழு சிறப்பிற் பல்லியஞ் சிறந்த
காலை முரசம் கனைகுரல் ஓதையும்
நான்மறை அந்தணர் நவின்ற ஓதையும்
மாதவ ரோதி மலிந்த ஓதையும்
மீளா வென்றி வேந்தன் சிறப்பொடு
வாளோர் எடுத்த நாளணி முழவமும்
போரிற் கொண்ட பொருகரி முழக்கமும்
வாரிக் கொண்ட வயக்கரி முழக்கமும்
பணை நிலைப் புரவி ஆலும் ஓதையும்
கார்க் கடல் ஒலியிற் கலி கெழு கூடல்"

எனக் கூடலைச் சிறப்பிக்கிறார். பின் வைகையாற்றை 'குராவும் மகிழும் கோங்கும் வேங்கையும், வெண் கடம்பும், சுரபுன்னையும் மஞ்சாடியும், மருத மரமும், உச்சிச் செலுந்திலும், செருந்தியும், செண்பக மரமும், பலவகை மலர்களும் விரிந்த குருக்கத்தியும், செம்முல்லையும் வளவிய கொடியினையுடைய முசுட்டையும், விரிந்த பூக்களையுடைய மோசி மல்லிகையும், வெள்ளை நறுந் தாளியும், வெட்பாலையும், மூங்கிலும் கொழுவிய கொடியாகப் பொருந்திய சிவதையும், விரிந்த பொலிவினையுடைய ஆற்றிடைக் குறையின் கண், அடிப்பக்கம் அகன்றும், பல மலர்களால் உயர்ச்சி பெற்று ஒன்றுக் கொன்று ஒத்து விளங்கிய குவிதலையும், கரைக்கண் நின்று உதிர்ந்த முருக்க மலரின் இதழாகிய சிவந்த வாயினையும், அருவி நீரொடு வந்த முல்லை மலராகிய

அழகிய நகையினையுமுடையாள், குறுக்கே மறித்தும் நெடுகியும் ஓடித் திரிகின்ற பெரிய கயல் ஆகிய நீண்ட கண்களையும், மணம் பொருந்திய மலர்கள் நீங்கப் பெறுது விளங்குகின்ற அறலாகிய கூந்தலினையும், உலகினைப் பல பொருள்களை விளைவித்து உண்பிக்கின்ற உயர்ந்த பெரிய ஒழுக்கத்தினையுமுடையது, வையை என்று சொல்லப்படுகின்ற பருவம் பொய்யாத, பாண்டியர் குலக்கொடி, எனச் சிறப்புற வர்ணித்துக் கூறியுள்ளார்.

சிலப்பதிகாரத்திற்கு, ஆதாரம் மதுரைக் காண்டமே. காரணம், கோவலனும் கண்ணகியும் புகாரிலே பிறந்தும் வளர்ந்தும் இல்லறம் நடத்தினலும் அவர்களது சிறப்பை எடுத்துக் காட்டுவது மதுரைக் காண்டமே. கோவலன் தான் இழந்த பொருளை மீண்டும் பெறக்கருதி வணிகம் செய்ய, தன் உரிமையான ஊரில் செய்தல் முடியாமல் மதுரை நோக்கி வருகிருன். மதுரையிலே தன் எண்ணத்தைச் சிறப்புறச் செய்ய விரும்புகிருன். ஆனல் ஊழ்வினையால் கோவலனது கால முடிவு நிகழ சந்தர்ப்பமாகிறது. ஆனல் கோவலன் குற்றமற்றவன், உயர்ந்த பண்புள்ளவன், என்பதைக் கண்ணகி, பாண்டியனிடம் வழக்காடி, அவனது புகழை நிலை நாட்டும் சிறப்பை நாம் மதுரைக் காண்டம் மூலமே அறிய முடிகிறது.

கண்ணகி கற்புடையவள். மாதர் குலக்கொடி மங்கையர் திலகம் என்ற உயர்ந்த பண்புகளையும் மதுரைக் காண்ட மூலமே அறியச் செய்கிருர். தன் கணவன்

கொலையுண்டான் என்ற செய்தி கேட்ட மாத்திரத்திலே அவளது உடல் வேகும்படியான உணர்ச்சி ஏற்படுகிறது. கணவன் நிலைகண்டு கதறுது, கவலையுறுது, காரிகை ஆவேசம் கொள்கிருள். எப்படியும் தன்கணவன் குற்றமில்லாதவன் என்பதை நிரூபிக்கவேண்டி ஆவேசமுடையவளாகி பாண்டியன் அவைக்குச் சென்றுவாதாடுகிருள் என்பதைக் காண்கிறேம். மதுரைக் காண்டத்திலே சிறப்புற்றது 'வழக்குரை காதை' எனலாம். காரணம் ஓர் பெண் தன் அவல நிலையை எண்ணி, அஞ்சாது அவைக்குச் சென்று மன்னனுயினும் குற்றம் குற்றமே, என உண்மையை யெடுத்து, தக்க ஆதாரம் காண்பித்துத், தன் கணவன் கள்வனல்லன் என்ற உண்மையை உலகுக்குக் காட்டித் தன் கற்பின் தன்மையை விளக்கமுறச் செய்தது மதுரைக் காண்டத்திலே தான் என்ருல் அதுவே உயிர்நாடியாகும். பாண்டியன் தன் நீதி, அநீதி என உணர்ந்து தானே உயிரைப் போக்கிக் கொடுங்கோலை செங்கோல் ஆக்கியமை பாண்டியனது சிறப்புக்கு எடுத்துக் காட்டு. பாண்டியனது பெருமையை விளக்கி அவனது நீதி வழுவாத்தன்மையை உலகிற்கு எடுத்துக் காட்டுவது மதுரைக் காண்டமே.

இளங்கோவடிகளால் மதுரைக் காண்டம் சிலப்பதிகாரத்தில் இடம் பெறவில்லையானுல் கண்ணகியின் பண்புக்கு நிலையாகிய கற்பின் தன்மை வெளிப்பட்டிருக்க முடியாது. பாண்டியன் தன்னை உணர்ந்து நீதியின் உயர்வை பிறர் அறியும்படி தன்னையே மாய்த்துத் தன் குலத்தின் மாசைத் துடைத்து என்றென்றும் கொடுங்கோல் செங்கோலாக மாறியதையும் நாம் கண்

டிருக்க முடியாது. தான் அரசன் என்ற மமதையிலே கண்ணகியின் வழக்கையும் மறுத்திருக்கலாம். ஆனல் தன்னுடைய வழித் தோன்றல்களின் சிறப்பை நிலை நாட்டி, உண்மையை உலகுக்கு அறியப் படுத்தவே நேர்மையான வழிகளைக் கடைப்பிடித்திருக்கிருன் என்பதறிய மதுரைக் காண்டமே ஆதாரம்.

மதுரைக் காண்டத்தோடு சிறப்புற்ற கண்ணகி வஞ்சி நாட்டிலே தெய்வமாக மாறுகிருள். அதன் பெருமைக்கும் மதுரைக் காண்டமே காரணம். கண்ணகி தன்னுடைய கற்பு நெறியைக், கூடலை நெருப்புக் கிட்டமைமூலம் அறியப்படுத்தி, தன் கணவனைக் காண வஞ்சி நோக்கிப் புறப்படுகிருள். அதனல் அவனின் சிறப்புச் சேர நாட்டிலும் பரவ, மதுரையில் விளைந்த பண்பாய செயல்களே காரணம் என்பது வெள்ளிடைமலை.

★★★★